16 APR 1960
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 15th December 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Sulphur

* 181 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூருக்கு அருகில் கந்தகம் தோண்டியெடுக்கும் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) அதற்கு சர்க்கார் எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Further investigation of the occurrence of sulphur in the thaniyar reserve forest in North Arcot district will be taken by the Geological Survey of India as soon as an X-Ray drill becomes available.

(*b*) The Director, Geological Survey of India, Calcutta, has been requested to provide the drill.

Apex Co-operative Marketing Society

* 182 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Electricity be pleased to state the details regarding the volume of trade, type of trade and the difficulties experienced in them in its intra-State, inter-State and foreign trade carried on during 1958 and 1959 so far by the Apex Co-operative Marketing Society?

THE HON. SRI V. RAMAIAH : The Madras State Co-operative Supply and Marketing Society started functioning only on 20th February 1959. It purchased from the State Trading Corporation 123 tons of milk powder valued at Rs. 1·60 lakhs imported from the United States of America in April 1959 and effected sales of the powder worth Rs. 1.24 lakhs up to 30th June 1959. Another consignment of 930 tons of milk powder has since been purchased by the Society. The Society has taken over the distribution-rights of imported camphor from the State Trading Corporation and has purchased 19,000 rupees worth of camphor for distribution. Arrangements for the export by the Society of 5,000 tons of onions and 5,000 tons of chillies to Ceylon are under way.

The Society's application for the allotment in its favour of 15,000 tons of sugar from the Uttar Pradesh and Bihar States, for distribution in this State, has been recommended to the Government of India and as soon as the Central Government make allotments, the Society will undertake distribution. As the Society has started functioning only recently, it is too early to assess the difficulties experienced by it in transacting its business.

SRI K. S. SUBRAMANIA GOUNDER : ஸ்டேட் டிரேடிங் கார்பரேஷன் இறக்குமதி, ஏற்றுமதி செய்யும் எல்லாப் பொருள்களுக்கும் சென்னை ராஜ்ய கூட்டுறவு அபெக்ஸ் மார்கெடிங் சொஸைடியை ஸோல் ஏஜெண்டுகளாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : தனியாக கேள்வி கேட்க வேண்டும்.

Fibre industry

*183 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI M. S. SELVARAJAN) : Will the Hon. the Minister for Home be pleased to state whether Co-operative Marketing Societies have been formed for the fibre industry?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Co-operative Marketing Society has been formed exclusively for fibre industry. The Jaggery Co-operative Marketing Federations of Tirunelveli and Salem districts, however, undertake the marketing of palmyra fibre also.

SRI T. T. DANIEL : In view of the fact that there is competition between our fibre and also Mexican fibre in the foreign market, will the Government consider the desirability of starting Co-operative Marketing Societies to give encouragement for this trade?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The existing Co-operative Marketing Society can take up this fibre. also.

SRI S. NAGARAJA MONIGAR : தென்னை நாரினால் கயிறு முதலானவை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய கூட்டுறவு சொஸைடி ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டால், சமுத்திரத்திற்கு பக்கத்தில் நீருள்ள இடத்திலேதான் தென்னை மட்டையை ஊற வைத்து நார் செய்ய முடிகிறது, நாரை பொறுத்த மட்டில் கயிறு உற்பத்தி செய்வதற்கு வெளி இடங்களிலிருந்து வரவழைக்க வேண்டியிருக்கிறது என்று காரணம் சொல்லுகிறார்கள். அவ்வாறு சொல்லுவது உண்மையா? இம்மாதிரி சொஸைடிகளை அதிகமாக நம்முடைய. ராஜ்யத்தில் ஆரம்பிப்பதற்கு கஷ்டங்கள் இருக்கின்றனவா ?

15th December 1959]

THE HON SRI M. BHAKTAVATSALAM : சமுத்திரக் கரை இல்லாத பிராந்தியங்களிலும் இந்தத் தென்னை மட்டை நாரை வைத்து தொழில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடந்து கொண்டு வருகிறது.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி ஜில்லாவில் திருச்செந்தூரில் கடற்கரை ஓரத்தில் பனை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. பனை நாரைக்கொண்டு அந்த இடத்தில் கயிறு முதலானவை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய மார்கெடிங் சொஸைடிகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அந்தத் தொழில் அம்மாதிரி இடங்களில் அபிவிருத்தி அடைந்து கொண்டுதான் வருகிறது.

Circuit House at Courtallam

* 184 Q.—SRI N. K. PALANISAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total amount sanctioned for the construction of the Circuit House at Courtallam; and

(b) the total amount spent actually?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) A sum of Rs. 1,70,000 has been sanctioned for the construction of the Rest House at Courtallam.

(b) The total amount spent actually on the rest-house up to 31st August 1959 is Rs. 79,575. There are liabilities to the extent of Rs. 1,16,425, making the total expenditure to Rs. 1,96,000.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த விடுதியில் எல்லா பொது மக்களும் தங்குவதற்கு அனுமதிக்கப்படுமா ? அல்லது யார் யார் தங்குவதற்கு அனுமதிக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லோரும் போய் அந்த விடுதியில் தங்க முடியாது. இது ஒரு 'கெஸ்டு ஹவுஸ்'. ஆகையினால் அங்கு தங்குவதற்கு கலெக்டர் அனுமதி வேண்டும். அங்கு தங்குவதற்கு விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

SRI A. A. RASHEED : Is there any proposal to construct a rest-house for the use of the middle-class families?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. There is a proposal under consideration.

[15th December 1959

Nurses

* 185 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Nursing Committee constituted by the Government of India during 1954 had suggested the following ratio as the basis for assessing the number of nursing personnel needed at present and also for increasing the number in future :—

(i) one nurse for five patients for the hospitals which are not training centres, and

(ii) domiciliary midwifery—One midwife for 100 beds; and

(*b*) how far this Government have implemented these recommendations in our State?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, subject to the remark that the ratio suggested for domiciliary midwifery is one midwife for 100 births.

(*b*) In view of the heavy cost involved the scale for nursing staff suggested could not be implemented fully but the Government decided to increase the strength by 25 per cent gradually. For the present, they have sanctioned the employment of 20 additional nurses in certain medical institutions which are in urgent need of more nurses.

The question of employment of additional midwives wherever necessary is under consideration.

Sri S. NAGARAJA MONIGAR : இப்பொழுது எந்த விகிதம் அனுசரிக்கப்படுகிறது? நர்ஸுகள் நியமனம் விஷயத்தில் ஆஸ்பத்திரிக்கு ஆஸ்பத்திரி வித்தியாசம் அனுசரிக்கப்படுகிறதா? நகர் புறத்திலுள்ள ஆஸ்பத்திரிக்கும், நாட்டுபுறத்து ஆஸ்பத்திரிக்கும் ஏதாவது வித்தியாசம் அனுசரிக்கப்படுகிறதா?

The Hon. Sri M. A. MANICKAVELU : அம்மாதிரி ஒன்றும் வித்தியாசம் அனுசரிக்கப்படவில்லை. ஆனால், இருக்கிற நிலைமையில் சில ஆஸ்பத்திரிகளில் போதுமான நர்ஸுகள் இல்லாமல் இருப்பதினால், எங்கெங்கே ரொம்பவும் நெருக்கடி அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் இப்பொழுது அதிகமாக நர்ஸுகள் நியமித்துக்கொண்டிருக்கிறோம். 'மொபசில்' ஆஸ்பத்திரிக்கும், நகர்புற ஆஸ்பத்திரிக்கும் ஒன்றும் வித்தியாசம் இல்லை. ஆனால் டீச்சிங் ஹாஸ்பிடல்களில்' நர்ஸுகளுக்கு கொடுக்கிற 'பெட்கள்' குறைவாக கொடுக்கிறோம்.

Sri M. K. SOMASUNDARAM : கிராமப்புறங்களில் இருக்கும் ஆஸ்பத்திரிகளில் 'மிட்வைப்கள்' இல்லாத காரணத்தினாலே சில ஆஸ்பத்திரிகள் அடைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, 'மிட்வைப் கோர்ஸுக்கு' அதிகமாக 'ஸ்டெரெங்த்' ஏற்படுத்துவதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா?

15th December 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது அதிகமாக வசதி செய்துகொடுப்பதற்கு அதிகமான 'மிட்வைப்களுக்கு' பயிற்சி கொடுத்துக்கொண்டு வருகிறோம். இவர்கள் பயிற்சி முடிந்த பிறகு இன்னும் அதிகமான பேர்கள் கிடைப்பார்கள். அதிகமான பேர்கள் கிடைக்கும்பொழுது அவ்வப்பொழுது 'மிட்வைப்கள்' நியமிக்கப்படுவார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : குடியாத்தம் சர்க்கார் ஆஸ்பத்திரியில் 150 'இன்பேஷண்டுகள்' இருந்தும்கூட, 20 பேஷண்டுகளுக்கு ஒரு நர்ஸ் கூட இல்லாத நிலையில், 6 நர்ஸுகள் தான் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, தயவு செய்து உடனடியாக இங்கே நர்ஸுகளை அதிகப்படுத்துவதற்கு முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் முன்பே சொன்னேன். இம்மாதிரி சில ஆஸ்பத்திரிகளில் போதுமான நர்ஸுகள் இல்லை. அதற்காகத்தான் 25 சதவிகிதம் நர்ஸுகளை அதிகப்படுத்தவேண்டுமென்று ஆங்காங்கு அதிகப்படுத்திக் கொண்டு வருகிறோம். அந்த முறையில் குடியாத்தம் ஆஸ்பத்திரிக்கு ஏற்றவாறு ஏதாவது செய்ய முடியும் என்று நினைக்கிறேன்.

SRI A. A. RASHEED : May I know the reasons for non-implementation of the recommendations and whether it is due to the non-availability of nurses or due to the financial implications?

THE HON. SRI M. A. MANICKAVELU : Both, Sir. From my point of view, it is due to non-availability of nurses and from the Hon. Finance Minister's point of view, due to the financial implications.

SRI N. MARUDACHALAM : நர்ஸுகள் தேர்தலுக்காக எல்லா கட்சியினர்களையும் கொண்ட தேர்தல் கமிட்டி அமைக்கப்படுகிறதா? அப்படியில்லை என்றால் எல்லாக் கட்சியினரும் கொண்ட தேர்தல் கமிட்டி அமைக்கப்படுமா ?

MR. SPEAKER : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லுவது என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை.

SRI K. B. S. MANI : சர்க்கார் இப்பொழுது முறையாக ஆண்டுதோறும் 25 சதவிகிதம் நர்ஸுகளை அதிகப்படுத்தும் பொழுது அவர்கள் தங்குவதற்கு இடம் கிடைக்காமல் கிராமப் புறங்களில் வருவதற்கு சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு டிரையினிங் கொடுக்கும்பொழுது அவர்கள் இருப்பதற்கு வீட்டு வசதி செய்துகொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி தங்குவதற்கு இடம் இல்லாமல் கஷ்டமாகத்தான் இருக்கிறது. அவர்களுக்கு தங்குவதற்கு இடவசதி செய்துகொடுப்பதற்கு

[15th December 1959

இப்பொழுது ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் எல்லாவற்றையும் ஒரேயடியாக செய்யமுடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் செய்ய முடியும்.

Sri N. K. PALANISAMI : May I know the cost involved if the Nursing Committee's recommendations are implemented in this State?

Mr. SPEAKER : I think the hon. Member must give notice to the Hon. Minister for answering this question. Generally, it is not fair for the hon. Members to put such questions on the floor of the House and expect answers from the Hon. Ministers especially when they involve financial calculations. If the Hon. Minister is prepared to answer this particular question, I have no objection.

The Hon. Sri M. A. MANICKAVELU : நர்ஸிங் கமிட்டி சிபார்சைப் பொருத்துப் பார்த்தால் ? லட்சம் நர்ஸுகள் வேண்டும். எண்பத்தி ஏழாயிரத்து ஐந்நூறு 'மிட்வைப்கள்' வேண்டும். எழுபது ஆயிரம் பப்ளிக் ஹெல்த் நர்ஸுகள் வேண்டும். அதிலிருந்து இதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பதைக் கணக்குப் போட்டுக் கொள்ளலாம்.

Sri T. T. DANIEL : May I know the ratio that we have now achieved at present and the total number of nurses that we have?

The Hon. Sri M. A. MANICKAVELU : For answering the question regarding the total number, I want notice. As for the other part of the question, the idea is to have one nurse for eight beds.

Sri S. NAGARAJA MONIGAR : இம்மாதிரி கமிட்டி சிபாரிசு செய்யும்போது அரசாங்கத்தின் பண வசதி நர்சுகளுக்குக் கிடைக்கும் என்று அனுசரித்து அதன் மூலம் சிபாரிசு செய்கிறார்களா ? அதை அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லையா ?

Mr. SPEAKER : சர்க்காரால் எப்படி அதற்கு பதில் சொல்ல முடியும். கமிட்டிதான் பதில் சொல்லவேண்டும்.

Women's Hostel, Government Estate

* 186 *Q.*—Sri R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the building in the Government Estate, wherein the Women's Hostel is now built, was demolished;

(*b*) if so, the expenditure incurred for the demolition;

(*c*) what old materials, steel-girders, door-frames, window-frames, joints, etc., were removed and gathered as a result of such demolition;

(*d*) how these materials were disposed of;

(*e*) if sold in auction, what amount was fetched by the sale;

(*f*) when the auction was held; and

(*g*) who was the highest bidder and purchaser?

15th December 1959]

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir. Three buildings which were coming in the lay out only were demolished.

(*b*) Rs. 3,355.

(*c*) The attention of the hon. Member is invited to the paper [a] placed on the table of the House.

(*d*) Materials to the value of Rs. 8,056·48 nP were used for departmental works. After meeting the requirements of the department all the defective old materials such as doors, windows, teak wood, tiles, etc. (except iron articles) were sold in public auction.

(*e*) Excluding the value of the materials used for departmental works, viz., Rs. 8,056·48 nP. an amount of Rs. 2,513·25 nP. was fetched by the sale of the remaining materials.

(*f*) On 21st November 1957.

(*g*) The highest bidders and purchasers were Messrs. Kuppuswamy Naicker and Sons, Sri R. Pakkirisamy and Messrs. Radha Constructions.

SRI R. SRINIVASA IYER : *மேஜையின் மீது வைக்கப்பட்ட ஜாப்தாவில் அயரன் கர்டர்களைப்பற்றி குறிப்பிடவில்லை. அவைகள் எல்லாம் கட்டிடங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடியதாக இருந்தது. அவைகளைப்பற்றி ஜாப்தாவில் காணவில்லை. அதிலிருந்து கர்டர்களை எப்படி உபயோகப்படுத்தப்பட்டது என்பதை சர்க்கார் சொல்ல முடியுமா ?*

THE HON. SRI P. KAKKAN : *பொதுவாக இரும்பு சாமான்களையெல்லாம் தனியாக எடுத்து அரசாங்க வேலைகளுக்கு பல இடங்களுக்கு அனுப்பப்பட்டது. கனம் அங்கத்தினர் கர்டர்களைப் பற்றி கேட்பதாக இருந்தால் அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.*

MR. SPEAKER : The hon. Member seems to know more than the Minister.

SRI R. SRINIVASA IYER : When I was passing along that side

MR. SPEAKER : I am not casting any aspersion.

SRI R. SRINIVASA IYER : 'What old materials, steel girders, door frames, window frames, joints, etc., were removed and gathered as a result of such demolition ? ' is the question in clause (*c*). No mention is made in the answer about iron materials.

THE HON. SRI P. KAKKAN : After demolition, materials were required by the Public Works Department for the construction of buildings in the Government Estate, Madras Medical College, Secretariat, Veterinary College, etc. And materials to the extent of Rs. 8,056·48 were utilised.

[a] Printed as Appendix I on pages 239–240 infra.

[15th December 1959

MR. SPEAKER : In view of the Minister's statement, the hon. Member may put a separate question with regard to steel materials.

Government Bus Transport

* 187 *Q.*—SRI M. P. SUBRAMANIAM, SRI T. T. DANIEL, SRI N. K. PALANISAMI } Will the Hon. the Minister for Electricity be pleased to state whether any instruction has been received from the Union Government to set up a Corporation to run the Nationalized Bus Transport in the City?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

* 188 *Q.*—SRI S. LAZAR, SRI M. KALYANASUNDARAM } Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is a proposal by the Government to constitute a Statutory Transport Corporation in the place of Government Transport?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

SRI T. T. DANIEL : May I know whether there is any proposal before the Government to set up a Corporation for Nationalised Transport?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

SRI N. K. PALANISAMI : Instead of ploughing the profit from State Transport to the Consolidated Fund, why not the Government constitute a Corporation on the lines of the State Electricity Board to develop the transport system in the State?

THE HON. SRI V. RAMAIAH : The arrangement we have now is good enough.

SRI S. LAZAR : இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து வந்த ஒரு உத்யோகஸ்தர் இங்கே இருக்கக்கூடியதைப் பார்த்து விட்டு ஏதாவது யோசனை கொடுத்தாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : ப்ளானிங் கமிஷனிலிருந்து ஒரு யோசனை வந்தது. அதைப்போலவே ரோடு ட்ரான்ஸ்போர்ட்டை கார்போரேஷனைகச் செய்தால் நல்லது என்று சொன்னார். ஆனால் நமது சர்க்கார் இப்பொழுது அமுலில் இருக்கக்கூடிய பஸ் ட்ரான்ஸ்போர்ட்டை நடத்தினாலே நல்லது என்று கருதினார்கள்.

SRI K. VINAYAKAM : Do the Government believe that the Bus Transport as run by the Government is more efficient than it would be if it is run by any Corporation or Board?

THE HON. SRI V. RAMAIAH : I do not know how it will be if it is undertaken by any Corporation. I consider the present arrangement is sufficiently good.

15th December 1959]

SRI M. KALYANASUNDARAM : எந்த அடிப்படையில் ரோடு ட்ரான்ஸ்போர்ட் கார்பொரேஷன் அமைக்க வேண்டும் என்று ப்ளானிங் கமிஷன் யோசனை கொடுத்தார்கள் என்பதைச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : ரோடு ட்ரான்ஸ்போர்ட் கார்போரேஷன் அமைத்தால் நல்லது என்றுதான் அவர்கள் யோசனை சொன்னார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கார்பொரேஷன் அமைத்தால் அதில் வரக்கூடிய லாபத்தில் வருமான வரி கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. சில ராஜ்யங்களில் இப்படி ரோடு ட்ரான்ஸ்போர்ட் கார்பொரேஷன் அமைத்து பஸ்களை நடத்துகிறார்கள். அதனால் சில ராஜ்யங்கள் வருமான வரி கொடுக்கிறார்கள். தனியாக சர்க்கார் நடத்தினால் அதற்கு வருமான வரி கிடையாது. ஆகவே எல்லா ராஜ்யங்களும் ஒரே பாகுபாடு உடையதாக இருக்க வேண்டும் என்று சொன்னதாக நான் நினைக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : நம்முடைய சர்க்கார் நேரடியாக நடத்தி வரும் பஸ் ட்ரான்ஸ்போர்ட்டை எடுத்துவிட்டு அதை கார்பொரேஷனுக்கு விட்டு விட வேண்டுமென்ற யோசனை இருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : இப்பொழுதுள்ள முடிவு பிரகாரம் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதுதான். ஆகவே மறுபடியும் செய்வதற்கு கஷ்டம் இருக்காது.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that such a Corporation is successfully running this transport in Bombay City?

THE HON. SRI V. RAMAIAH : I have not studied the Bombay Transport System as such. As far as our Transport is concerned, I think it is well-organised.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, கார்பொரேஷன் அமைப்பதாக இருந்தால் வருமான வரி கட்ட வேண்டியதாக இருக்கும் என்று கனம் அமைச்சர் கூறினர். வருமான வரி மத்திய அரசாங்கத்திற்குச் செல்லுகிற காரணத்தால் கார்பொரேஷனை அமைத்து நடத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தை வற்புறுத்தினல் இந்த அரசாங்கம் என்ன செய்யும் ?

MR. SPEAKER : ஹைபோதடிகல் கேள்வியாகப் போட்டால் எப்படி பதில் சொல்ல முடியும். இப்படி கேட்கக்கூடாது.

THE HON. SRI V. RAMAIAH : இது போன்ற பிரச்னை வரும் போது அதைப் பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

Protection to voters during elections

* 189 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether steps were proposed in the Collectors' and Police Officers' Conference at Ootacamund in May 1959 to adopt stern measures in towns and villages to put down goonda elements who intimidate voters during elections; and

(*b*) if so, the details of the same?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri N. K. PALANISAMI : May I know the steps that would be taken to prevent persons from carrying away members of panchayat boards and municipal councils during the time of elections in order to prevent them from voting?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Various offences are committed here and there during the time of elections. There is a law and the Police is taking action according to that law of the land.

Sri S. NAGARAJA MONIGAR : ஸார், நண்பர் அங்கத்தினர்களைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள் என்ற கருதப்பட்ட " carry away " என்று சொன்னார். எந்த விதமாகத் தூக்கிக்கொண்டு போகிறார்கள், எப்படித் தூக்கிக்கொண்டு போகிறார்கள் என்பதை விளக்க முடியுமா ?

Mr. SPEAKER : விளக்க வேண்டியதில்லை. அவர் கேள்விக்கு கனம் அமைச்சர் பதில் சொல்லுவார். பதிலும் சொல்லி இருக்கிறார்.

Sri S. NAGARAJA MONIGAR : கேள்வியை என்றால் சரியாக புரிந்துகொள்ள முடியவில்லை. அப்படி இருந்தால் எந்த விதத்தில் அர்த்தப்படும் என்பதை விளக்க வேண்டும் என்பதற்காகத்தான் கேட்கிறேன்.

Mr. SPEAKER : கனம் அமைச்சர் கேள்வியை தெரிந்து கொண்டு பதில் சொல்லி விட்டார்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினா அதைப்பற்றி விளக்கம் தெரிந்துகொள்ள வேண்டுமானால் சட்ட சபை அங்கத்தினர்கள் கூட்டம் ஒன்றைக் கூட்டி கனம் அங்கத்தினர் என். கே. பழநிசாமி அவர்களை அதைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்யச் சொல்லலாம். (சிரிப்பு).

Sri A. VEDARATHNAM : இம்மாதிரி உறுப்பினர்களை கார்களில் வைத்து அழைத்துக்கொண்டு போய்விடுவது சகஜமாக இருக்கிறது, குண்டர்களை வைத்துக்கொண்டு. இம்மாதிரி

15th December 1959]

விஷயங்கள் நடைபெற்ற பின் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு பதிலாக இப்படி நடக்காமல் இருப்பதற்கு முன்னதாகவே அதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீசாருக்குத் தகவல் கிடைத்தவுடனேயே நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

Assault on a working journalist

* 190 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Police received information that working journalist by name Sri M. V. L. Narasimhan was assaulted by three persons at Royapettah, Madras, on 20th February 1959; and

(*b*) whether the assailants were traced by the Police and what further action was taken?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes Sir,

The assault was reported on 19th February 1959 and not on 20th February 1959.

(*b*) Two named assailants were arrested by the Police and enlarged on bail. While the matter was under investigation, an agreement in full settlement of the dispute between some of the working journalists employed in the "Dina Thanthi" on the one hand and the management and other employees on the other hand was signed before the Labour Commissioner on 2nd March 1959. In view of this, further action was dropped by the Police and the case was not pushed through.

SRI M. KALYANASUNDARAM : சார், மற்ற ஸ்ட்ரைக்களிலெல்லாம், பலாத்காரம் இருக்கிறது என்று வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை. இந்த கேசில் மாத்திரம் விசேஷ கவனம் செலுத்தி, பலாத்கார நிகழ்ச்சி நிறைந்து இருந்தும், வாபஸ் வாங்க வேண்டிய அவசியம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. நீதி மன்றத்திலே வழக்கு தொடரப்படவில்லை. வாபஸ் வாங்கும் பிரச்னையும் இல்லை. அப்படி வாபஸ் வாங்குவதற்கு நீதி மன்றத்திற்கு போகவில்லை. ஒப்பந்தம் வந்தது என்றும், மேற்கொண்டு நடவடிக்கைகளை நிறுத்தினால், சுமுகமான உறவுக்கு அது நல்லது என்றும் தெரிவிக்கப்பட்டது. மேற்கொண்டு ஒன்றும் செய்யவில்லை.

SRI M. KALYANASUNDARAM : அப்படி பாதிக்கப்பட்ட பத்திரிகை ஊழியர்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. அதைப் பற்றித் தகவல் இல்லை. ஆனால், இதில் சர்க்காருக்கு அக்கறையில்லை, வழக்கு தொடரவோ அல்லது விட்டுவிடவோ, தொழில் தகராறு

சுமுகமாக தீரும், அவர்கள் உரவு பாதிக்கப் படக்கூடாது என்ற நிலைமை சர்க்காருக்கு சமர்ப்பிக்கப்படும்போது, தொடாமல் விட்டுவிடுவது என்ற முடிவு செய்கிறது.

Sri T. T. DANIEL : Sir, may I know how the journalist was assaulted and may I also ask the Hon. Minister to tell us the name of the accused and the offence committed and the nature of the assault?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not have the details of the occurrence.

Sri M. KALYANASUNDARAM : இதில் நரசிம்மன் என்ற பத்திரிகை நிருபர் சம்பந்தப்பட்டவரை, சம்பந்தப்பட்ட பத்திரிகை முதலாளிகள் அம்மாதிரி அறிவித்தார்களா, முதலாளிகள் கேட்டார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM. அந்தப் பிரச்சினை தொழில் கமிஷனரைக் கலந்து ஆலோசிக்கப் பட்டது. அவர்கள் அபிப்பிராயப்படி தகராறு தீர்ந்துவிட்டது, சமாதானம் உடனடியாக ஏற்பட்டு விடும், தகராறு ஏற்படாமல் இருக்க வழக்கை தொடர்ந்து நடத்தாமல் இருப்பது நல்லது என்று அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது. அதில். . . .

Sri M. KALYANASUNDARAM : யாரால் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM. கமிஷனர் ஆப் போலீஸ், கமிஷனர் ஆப் லேபர் முதலிய அதிகாரிகளைக் கலந்து தான் முடிவை அரசாங்கம் எடுத்தது.

Lakshmi Match Factory, Somanur

* 191 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total amount of loan granted to the Lakshmi Match Factory, Somanur, Coimbatore district;

(*b*) when the loan was granted;

(*c*) the number of workers employed in the factory;

(*d*) whether the Government are satisfied about the working of the factory; and

(*e*) the property that has been shown as security towards the loan?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Rupees fifty thousand (Rs. 50,000).

(*b*) A sum of rupees thirty five thousand (Rs. 35,000) out of the loan amount earmarked for the discharge of the then existing liabilities of the concern was paid on 20th March 1957 direct to the creditors of the concern, viz., The South Indian Bank Limited, Tiruppur, and the balance of rupees fifteen thousand (Rs. 15,000)

15th December 1959]

earmarked for utilisation as working capital in the manufacture of splints and veneers industry was disbursed to the borrower on 14th March 1957.

(*c*) At present nineteen workers (19) are employed by the factory.

(*d*) The concern have taken to the manufacture of Slate Frames in right earnest providing employment to nineteen (19) workers.

(*e*) Lands worth about rupees eighty-five thousand and three hundred (Rs. 85,300), machinery worth about rupees three thousand seven hundred (Rs. 3,700) and buildings worth about rupees twenty-five thousand (Rs. 25,000) have been hypothecated as security for the loan. Total security rupees one lakh and thirteen thousand (Rs. 1,13,000).

SRI M. KALYANASUNDARAM : இந்தக் கடன் தொகைக்கு ஜாமீனுகக் கொடுத்திருக்கும் சொத்துக்கள், தொழிற்சாலை சொந்தக்காரர் பேரில் இருக்கிறதா, வேறு யார் பேரில் இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. சொத்து யாரிடம் இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் கடன் கொடுத்திருப்பார்கள்.

SRI M. KALYANASUNDARAM : இந்தத் தொழிற்சாலை என்னென்ன பொருள்கள் உற்பத்தி செய்வதாகச் சொல்லி, கடன் அளிக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. : இந்த தொழிற்சாலை ஒரு மாட்ச் பாக்டரி. இப்பொழுது சிலேட்டு ப்ரேம் செய்கிருர்கள்.

SRI M. KALYANASUNDARAM : தீப்பெட்டி தயாரிப்பதாகச் சொல்லி, சிலேட்டு ப்ரேம் உற்பத்தி செய்ய வேண்டிய காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

SRI N. MARUDACHALAM : தீப்பெட்டி செய்யக் கடன் வாங்கி வேறு விதமாக மாற்றப் பட்டிருக்கிறது என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தகவல் இல்லை ; தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்லுகிறேன்.

Field Publicity Officers

* 192 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether this Government are receiving details regarding the publicity activities of the Field Publicity Officers of the Second Five-Year Plan of the Central Government; and

[15th December 1959

(b) whether they are receiving any publicity materials from these officers and in turn whether our Government are giving any statistics for publicity to these Central Officers working within our State?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) & (b) No, Sir.

SRI K. SATTANATHA KARAYALAR: *சார், பீல்ட் பப்ளிசிடி ஆபீசர்கள் மத்திய சர்க்காரைச் சேர்ந்தவர்கள் முக்கியமான நகரங்களில் இருக்கிறார்களே, அவர்கள் மூலம், மாகாண திட்டங்களைப் பற்றியும் விளம்பரம் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப் படுமா?*

THE HON. SRI C. SUBRAMANIAM: *மத்திய சர்க்கார் ஊழியர்கள், மத்திய சர்க்காரின் கீழ் வேலை செய்கிறார்கள். ஆகையினால் பொதுவாக, எல்லா இந்தியத் திட்டங்களையும் பற்றி விளம்பரம் செய்வதில், முயற்சி எடுக்கிறார்கள். அந்த முறையிலே, சென்னைத் திட்டத்தைப் பற்றியும் சொல்கிறார்கள். அவ்வளவு தான். அதனால்தான், தனியாக நாம் விளம்பர இலாகா அமைத்து, சென்னை ராஜ்யம் பொருத்த வரை, நம் திட்டங்களைப் பற்றி பிரசாரம் செய்கிறோம்.*

Illicit cutting of trees

* 193 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN:** *கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

(அ) 1959-ல் வடாற்காடு ஜில்லாவில் ஜவ்வாது மலையில் பலர் திருட்டுத்தனமாக மரங்களை வெட்டி கரி சுடுவதாக செங்கம் தாலூகா கிராமவாசிகளிடமிருந்து புகார் ஏதேனும் வந்ததா?

(ஆ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) A mahazar petition was received by the Tahsildar, Chengam from the villagers of Pudurchekkadi and Puliampatti of Chengam taluk on 11th May 1959.

(b) A surprise inspection was made by the Officers, on 12th May 1959 and 750 cart-loads of firewood ad 995 bags of charcoal were seized. Fourteen persons were arrested. Cases against 9 persons are pending on the file of the Stationary Sub-Magistrate, Chengam.

MR. SPEAKER: The matter is *sub judice*. I cannot allow supplementary questions.

THE HON. SRI M. A. MANICKAVELU: I do not know whether the case has been disposed of or not.

15th December 1959]

Flood waters of Cauvery and Coleroon

* 194 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the quantity of water that flowed along the rivers Cauvery and Coleroon into the sea due to heavy rains and floods in the higher reaches during the month of July 1959; and

(*b*) how the Government propose to conserve this water?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The quantity of water that surplussed into the sea during July 1959 was about 1,40,000 M.cft. as measured at the Lower anicut on the Coleroon river. There had been no surplus at the tail end of the Cauvery.

(*b*) This surplus being occasional and undependable, it is not possible to take up the execution of large irrigation schemes involving the utilisation of the surplus waters only. It was to utilise a portion of such surplus that Government took up the New Kattalai and the Pullambadi Schemes.

SRI S. LAZAR : சார், இது போல் வெள்ளம் வந்து, உபரியாக ஜலம், ஜூலை மாதத்தில் மட்டுமல்ல, சென்ற 5, 6 மாதங்கள் வரை உபரித் தண்ணீர், காவேரி, கொள்ளிடத்தில் வீணனது சர்க்கார் கவனத்திற்கு வந்துள்ளதா ? அப்படி அதிகத் தண்ணீரை, மேற் கொண்டு சில திட்டங்களை செயல் படுத்தி, உபயோகிக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : வெள்ளங்கள் வந்தது அரசாங் கத்திற்குத் தெரியும். வீணைகப் போகும் தண்ணீரை மக்களுக்குப் பயன் படுத்த வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

SRI R. SREENIVASA IYER : இந்த வருஷம் ஏற்பட்ட பிரவா கத்தைப் போல், சர்ப்ளஸ், கடந்த 25 வருஷங்களிலே, மேட்டூர் அணைகட்டி, இந்த 25 வருஷங்களிலே, இம்மாதிரி சர்ப்ளஸ் ஏற்பட்டி ருக்கிறதா ? அப்படியானல் எத்தனை நாளுக்குத் தொடர்ந்து, 10 நாட்களுக்குமேல், சர்ப்ளஸ் ஏற்பட்டது என்று சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI P. KAKKAN : I require notice, Sir.

SRI K. PERIANNAN : காவேரியில் அதிகமான தண்ணீர் வந்து, தஞ்சாவூர் பயிர்களை நாசப் படுத்துகிறது. ஆகவே, காவேரி யிலிருந்து, பெரம்பலூர், உடையார்பாளையம் இவைகளுக்கு ஒரு வாய்க்கால் வெட்டிக் கொடுக்க சர்க்காருக்குத் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சர்க்காருக்கு அந்த உத்தேசம் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : கடந்த மூன்று மாதத்திற்கு 9-30
அதிகமாக காவேரியில் தண்ணீர் அதிகமாக இருப்பதற்குக் a.m.
காரணம் நம்முடைய மாநிலத்திலேயே பெய்கிற மழைத் தண்ணீரின் எதிர்ப்புத்தான் என்று தெரிகிறதால் மைசூர்

[15th December 1959

ராஜ்யத்தையே எதிர்பார்க்காமல், நம்முடைய நதியில் நம் மாநிலத்து நீரே அதிகமாக இருப்பதன் காரணமாக புதிய கால் வெட்டி எல்லாவற்றையும் பயன்படுத்திக்கொள்ளும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : நம்முடைய மாநிலத்தில் பெய்யும் மழையின் காரணமாக ஏற்படும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி பாசனத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்பதுதான் அரசாங் கத்தின் நோக்கம்.

Housing schemes

* 195 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government are giving any monetary aid to the employers to construct houses for their workers;

(*b*) if so, what is the nature of such aid; and

(*c*) what is the aid given by the Government of India in this respect.

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Under the Subsidised Industrial Housing Scheme, the Government of India are giving financial aid to private employers for construction of houses for their workers.

(*b*) & (*c*) Subject to ceiling limits fixed for different kinds of tenements, a loan of 50 per cent of the cost and a subsidy of 25 per cent are given to private employers.

* 196 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government of India have offered any concessions to industrialists who come forward to construct houses for their workers under the Subsidized Industrial Housing Scheme in the employers' sector; and

(*b*) how many tenements have been sanctioned by the State Government for the Press Workers and Public Works Department workers under the Second Five-Year Plan under this scheme?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir. Under the Subsidised Industrial Housing Scheme, the Government of India have offered loans and subsidies to private employers for construction of houses for their workers.

(*b*) The concessions offered under the scheme are not extended to Government for construction of houses for workers employed directly under them. However, the Government sanctioned the construction of 300 tenements for Government Press Workers and of 100 tenements for Public Works Department Workshop workers from their own resources.

15th December 1959]

* 197 *Q.*—SRI M. P. SARATHI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் எந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன ?

(ஆ) இத்திட்டத்திற்கு ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷனிடம் கடன் உதவி கோரப்பட்டதா ? எவ்வளவு ?

(இ) அது என்ன நிலையிலுள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Presumably the hon. Member refers to the Rental Housing Scheme formulated by the Government of India for the benefit of State Government employees, which is financed by the Life Insurance Corporation. No work has been started yet.

(*b*) & (*c*) We applied to the Government of India for an allotment of Rs. 30·00 lakhs for 1959–60, and Rs. 50.00 lakhs for 1960–61 Government of India have made an allotment of Rs. 10·00 lakhs recently. It is expected that additional funds will be made available by them during the current year itself. It is proposed to disburse the amount equally between the Public Works Department and the City Improvement Trust for the execution of the Scheme.

SRI K. VINAYAKAM : May I know, Sir, who are the employers who made use of the aid in the City and how many houses did they construct for their employees and what is the mode of repayment of the loan?

THE HON. SRI V. RAMAIAH : I want a separate question regarding the employees who have utilised the amount. I would like to state here that on the whole only 10 employers have so far made use of this scheme and they have availed themselves of assistance to the extent of Rs. 9,21,721 under the scheme. Regarding the mode of repayment, I want notice.

SRI T. T. DANIEL : May I know the amount that was allotted by the Government of India for the subsidised Industrial Housing Scheme and whether the whole amount was made use of by the industrialists of our State and if they have not made use of it, may I know what was the reason for that?

THE HON. SRI V. RAMAIAH : Under the Second Five-Year Plan nearly 75·10 lakhs has been sanctioned for 14 projects for the construction of 1,248 houses at a cost of 41·20 lakhs in the public sector, and 18·24 lakhs in the private sector for 631 houses. As I have already stated about 10 private employers have come forward and availed themselves of the scheme. We find that the private employers have not been quick enough to utilise the scheme and steps are being taken by the Hon. Minister for Industries to impress upon them to build more houses for the employees.

Sri M. P. Sarathi : கனம் சபாநாயகர் அவர்களே, இது வரையில் அரசாங்க ஊழியர்களுக்கு எந்த இடத்திலாவது வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

Mr. Speaker : இந்தக் கேள்வி எப்படி இதில் வரும்?

The Hon. Sri V. Ramaiah : அரசாங்க ஊழியர்களுக்கு பலவிடங்களில் பல வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் நான் பதில் சொல்கிறேன்.

Sri K. Vinayakam : Sir, may I know whether there is any proposal to construct houses for the workers employed in Government Transport system?

The Hon. Sri V. Ramaiah : I want notice, Sir.

Sri R. Krishnasami Naidu : சர்க்கார் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் கிராமத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு எவ்விதப் பயனும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. கிராமத்தில் உள்ள நிலச்சுவாந்தார்கள் நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க உத்தரவாதம் அளித்தார்கள் என்றால், வீடுகள் கட்டிக்கொடுக்க முன் வந்தால் இதே சலுகை கொடுத்து விவசாயத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கிடைக்கும்படியாகச் செய்ய அரசாங்கம் முன் வருமா?

The Hon. Sri V. Ramaiah : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் கிராமங்களில் இருக்கக் கூடிய சிறுசிறு விவசாயிகளுக்கு எல்லாம் ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் அடிப்படையில் பலவிடங்களில் வீடு கட்டிக்கொடுக்க நமது அரசாங்கம் உதவி செய்து கொண்டிருக்கிறது. அதோடு இல்லாமல் இன்னும் தேசிய விஸ்தரிப்புத் திட்டப்பகுதியில் பல கிராமங்களை எடுத்துக் கொண்டு அந்த கிராமங்களில் வீடு கட்டிக்கொடுக்க மானியம் கொடுத்து உதவியும் வருகிறது. ஆகவே விவசாயத் தொழிலாளர்கள் யாரும் பயன்பெறவில்லை என்று கருத இடமில்லை.

Sri S. M. Annamalai : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் கனம் ஸ்ரீ எம். பி. சாரதி அவர்களுடைய மூலக் கேள்வியே "அரசாங்க ஊழியர்களுக்கு என்று வீடு கட்டும் திட்டம் எந்த எந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது" என்பதுதான். அப்படியிருக்க அதுபற்றி அவர் கேட்ட உபகேள்வி ஒன்றுக்கு "தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்" என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வது சரியா?

The Hon. Sri V. Ramaiah : அவர் கேட்ட மூலக் கேள்விக்குச் சரியான பதிலை நான் சொல்லியிருக்கிறேன். அவர் போட்ட உப கேள்வி வேறு விவரம் பற்றித் திரும்பியதால் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன் என்பதாகச் சொன்னேன்.

[15th December 1959]

SRI K. ANBAZHAGAN : சர்க்கார் உதவியோடு "மிடில் கிளாஸ் ஹவுஸிங் ஸ்கீம்" என்று ஆரம்பித்திருக்கிற திட்டத்தில் 500 ரூபாய் வருமானத்திலிருந்து ஆயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்கள் வரையில் சேரலாம் என்ற விதி இருப்பதில் இந்த அளவு வருமானம் என்று நிர்ணயித்திருப்பது அதிகமாக இருப்பதாக அரசாங்கம் கருதவில்லையா? அல்லது அரசாங்கத்தில் மேல் பதவியில் உள்ளவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கும்படியான நோக்கத்தோடு இதை அமைத்திருக்கிறார்களா?

THE HON. SRI V. RAMAIAH : மாதம் 500 ரூபாய்க்கு மேல் வாங்குகிறவர்களை மிடில் கிளாஸ் இல்லையென்று தீர்மானிக்கத் தேவையில்லை. அதை நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்துத்தான் இந்த விதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

SRI J. MATHA GOWDER : தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க தொழில் அதிபர்களுக்கு பண உதவி செய்வதாக அரசாங்கம் சொன்னாலும் கூட சில தொழில் அதிபர்கள் அந்த உதவியை வாங்கிக்கொண்டு தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க விரும்பாத காரணத்தினால் பல தொழிலாளர்கள் வீட்டு வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்படி நாம் உதவி செய்வதாகச் சொன்ன போதிலும் கூட அந்த உதவியை ஏற்றுக்கொண்டு தங்கள் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க முன் வராத தொழில் அதிபர்களுக்கு தண்டனை அளிக்கும் விதியை இங்கே கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : இன்று இருக்கிற நிலைமையில் நாம் ஒன்றும் நிர்ப்பந்தம் செய்ய முடியாது. ஆனால் பல தொழில் சம்பந்தப்பட்டிருக்கிற தொழில் அதிபர்களை நமது கைத்தொழில் இலாகா அமைச்சர் அவர்கள் நேரிடையாகச் சந்தித்துப் பேசி, ஒரு ஆண்டு காலத்திற்குள் தங்களிடம் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அவர்களே முன் வரவேண்டும், இல்லாவிட்டால் கண்டிப்பாக வீடு கட்டிக்கொடுக்க நிர்ப்பந்தம் செய்யும் சட்டம் ஒன்றைக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படும் என்கிற எச்சரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள்.

SRI R. SRINIVASA IYER : Arising out of the answer to question 197 may I know whether the Government will consider the possibility of constructing type design houses for lower income groups and Government servants and letting them to them, recovering a percentage of their salary as rent to relieve the congestion in the city, municipalities and the major panchayats?

THE HON. SRI V. RAMAIAH : As I have already said I do not have the information with me now. Though I do not have the direct answer with me for this question, I may mention from recollection that even the low income group people are benefited under certain schemes. If the hon. Member puts a separate question I will get the details and give him the information.

SRI S. LAZAR : Sir, since the subsidised industrial housing scheme is only an optional scheme and the Government are aware that it has not been made use of by private industrialists. Will the Government consider the possibility of making this a compulsory scheme so far as those industrialists who are making a huge profit?

THE HON. SRI V. RAMAIAH : Sir, as it stands today we are appeaing to the industrialists concerned to undertake building of houses for their employees. Up to now only 10 of them have come forward to utilise the benefits under the scheme. We still find their response is not very happy. Immediately after the Hon. Minister for Industries returns from abroad, a conference will take place to impress upon the employers to build more houses under these schemes for their employees. If it fails then the Government will have to consider the question of making it compulsory.

Ceramic industry

* 198 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state the impression gathered and the opinion expressed in detail by Wr. William Mosach, the German Ceramic Expert, about the ceramic clay found and glazed pottery produced in the various factories in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The German Ceramic Export has not given any opinion to the State Government on the clays handed over to him.

* 199 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether the project reports on Ceramic Industries prepared by the State Industries Development Committee will be laid on the Table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The project report on Ceramic Industries, prepared by the Sub-Committee of the State Industries Development Committee has not yet been finalised. Government have, however, issued a press note on the 1st August 1959 giving a summary of the project report and the data available therein for use by the interested people and entrepreneurs.

Wool Processing Centre at Vinnamangalam

* 200 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா விண்ணமங்கலத்தில் கம்பளம் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை எப்பொழுது ஆரம்பிக்கப் படும்?

(ஆ) இது சம்பந்தமாக மைசூர் அரசாங்கத்திற்கும் சென்னை அரசாங்கத்திற்கும் நடைபெற்றுவரும் கடிதப் போக்கு வரத்துக்களின் விவரங்கள் யாவை?

15th December 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Wool processing Centre at Vinnamangalam could not be stated in April 1959 as anticipated due to the difficulty experienced in obtaining certain essential items of machinery. Action is being taken for the import of these machines. The Centre is expected to start production early in 1960.

(b) There is no correspondence between the Government of Mysore and this Government about this. But the Government of Mysore are aware that the production in the Centre has not yet been started due to non-receipt of some of the machines.

SRI P. G. MANICKAM : *இந்தக் கம்பளி தொழிற்சாலையை நிறுவுவதற்காக மூலதனம் எவ்வளவு தேவைப்படும்? அதற்கு நமது சர்க்காரும், மைசூர் சர்க்காரும் எவ்வளவு தொகை போட சம்மதித்திருக்கிறார்கள்? இந்திய அரசாங்கத்திலிருந்து ஏதாவது இதற்கு உதவி கிடைக்குமா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *மதிப்பிட்ட மொத்த மூலதனம் 13,10,250. கட்டிடத்திற்காக மாத்திரம் 4,20,250 ஆகிறது. இது இரண்டு சர்க்கார்களும் சேர்ந்து மத்திய சர்க்காரின் உதவியை வைத்துக்கொண்டு இது நிறைவேற்றப்படயிருக்கிறது.*

Power-boring drills

• 201 Q.—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) how many power boring drills are owned by the State;

(b) how many of them are in working condition; and

(c) where they are working at present?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement* is placed on the table of the House.

SRI R. SRINIVASA IYER : Sir, it is stated that all the available 29 drills excluding the 3 calyx type drills are working in several districts. Are spare parts available for repairing them, as I learn that many of them are not in working order? Have the Government any scheme for purchasing new drills as they are in very great demand?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that all the 29 drills are in working order but still for spare parts, foreign exchange is necessary and that is being arranged. It is also proposed to have some more power drills.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, under whose jurisdiction are these drills? Is it under the Director of Agriculture or under the Director of Industries?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Now it is under the Director of Agriculture.

SRI R. KRISHNASAMI NAIDU : *மேஜை மீது வைக்கப்பட்டுள்ள விவரங்களில் இருந்து ராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு*

*Printed as Appendix II on page 241 infra.

[Sri R. Krishnasami Naidu] [15th December 1959

பவர் ட்ரில்தான் பல வருடங்களாக இருந்து வருவதாக தெரிகிறது. ராமநாதபுரம் ஜில்லாவில் கூடுதல் பவர்ட்ரில்கள் வேண்டுமென்று பல ஆண்டுகளாக எத்தனையோ விண்ணப்பங்களும், நேரில் பல தட்வைகள் அதிகாரிகளைக் கண்டு சொல்லியும் பயனில்லை. அங்கு கூடுதல் பவர் ட்ரில்கள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். மற்ற ஜில்லாக்களிலிருந்து ராமநாதபுரம் ஜில்லாவிற்கு இடையிடையே அங்குள்ள ட்ரில்களை அனுப்பித்தரமுடியும் என்று தெரிகிறது. ஆகவே, இதற்கு சௌகரியம் செய்து தர அரசாங்கம் நல்லதொரு திட்டத்தை செய்து தர முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ராமநாதபுரம் மாவட்டத்திற்கு மேலும் பவர் ட்ரில்கள் வரவழைத்துக் கொடுக்க இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN: வட ஆற்காடு, சேலம் இவைகள் எல்லாம் ஆலைகள் நிறைந்த ஜில்லாக்கள். அங்கு, எங்கு பார்த்தாலும் கிணறுகள் வெட்டினால், பாறைகள்தான் வரும் என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? ஆகவே, உடனடியாக அங்கு கூடுதலாக பவர் ட்ரிர்கள் வரவழைத்துக் கொடுக்க சர்க்கார் முன்வருமா?

MR. SPEAKER: இப்படி ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்கள் ஜில்லாக்களைப்பற்றி கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றி அளித்த விடை மற்ற மாவட்டங்களுக்கும் பொருந்தும்.

SRI R. SWAMINATHA MERKONDAR: தற்போது Ford Foundation உதவியின் கீழ் தஞ்சை ஜில்லாவை எடுத்திருக்கும்போது தஞ்சை ஜில்லாவில் ஒரத்தநாடு பாகத்தில் மட்டும்தான் இந்த ட்ரில் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் வரண்ட பிரதேசங்கள் அதிகமாக யிருப்பதால் அதிகப்படியான பவர் ட்ரில்ஸ் அங்கு தருவதற்கு அமைச்சர் அவர்கள் உதவி செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வேறு மாவட்டங்களிலும் அதிகப்படியான வரண்ட பிரதேசங்கள் இருக்கிறது என்பது அங்கத்தினருக்கு தெரியும்.

Use of Regional Languages on post cards, etc.

*202 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

1959-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் தேதி 117-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி மணியார்டர், கார்டு, கவர்கள் பிராந்திய மொழிகளில் அச்சடிக்க வேண்டுமென்று மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்கு செய்த சிபாரிசுக்கு என்ன பதில் வந்துள்ளது?

15th December 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM: No reply has been received so far. However, there was very recently a news-item in the Press to the effect that bilingual inscriptions (Hindi and English) will be adopted from 9th September 1959 in all kinds of post cards.

I may also inform hon. Members that we have verified post-cards and money orders and found that both Hindi and English inscriptions have been used now.

SRI S. M. ANNAMALAI: இப்பொழுது, ஆங்கிலத்தில் மட்டும் அச்சிட்டு வருவதாக சொன்னார்கள். ஏன் பிராந்திய மொழியில், தமிழ் மொழியில் சாதாரணமாக அச்சிட இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தக் கூடாது?

THE HON. SRI C. SUBRAMANIAM: தமிழில் மட்டும் இருக்குமானால் இந்த ராஜ்யத்திற்குள்ளே மட்டும்தான் மணி ஆர்டர் அனுப்ப முடியும். மற்ற ராஜ்யங்களுக்கு, பக்கத்து ராஜ்யங்களுக்கு அனுப்பினால் கஷ்டங்கள் ஏற்படும் ஆகவே ஆங்கிலத்தில் தற்போது இருப்பது நல்லது.

SRI S. NAGARAJA MONIGAR: மணி ஆர்டர் பார்ம்ஸ், கார்டுகள், கவர்கள் ஆகியவைகள் எல்லாம் எந்த பிராந்திய மொழியைச் சேர்ந்தது என்று கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

SRI A. V. P. ASAITHAMBI: தபால் தலையில் திருவள்ளுவர் படத்தை விரைவிலே போட இருப்பதாக டாக்டர் சுப்பராயன் அவர்கள் அறிவித்தார்களே. அதைப்பற்றி இந்த சர்க்காருக்கு ஏதாவது தகவல் உண்டா? திருவள்ளுவர் படத்தை போட்டால் எந்தப் படம் போடப்படும்? அந்த . . .

MR. SPEAKER: இந்தக் கேள்வி மொழியைப் பற்றியது. படத்தைப் பற்றியது அல்ல.

SRI S. M. ANNAMALAI: என் கேள்வி தமிழ் மொழியையும் சேர்த்து ஏன் அச்சிடக் கூடாது என்பது. ஆங்கிலத்தில் மட்டும் அச்சிட்டால் ஆங்கிலம் தெரிந்தவர்கள் இந்த நாட்டில் அதிகமாக இருக்கிறார்கள் அல்லது ஹிந்தி தெரிந்தவர்கள் இந்த நாட்டில் அதிகமாக இருக்கிறார்கள் என்று இந்த சர்க்கார் கருதுகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆந்திராவை எடுத்துக் கொண்டாலும் மைசூரை எடுத்துக்கொண்டாலும் எந்த இடத்திலும் ஆங்கிலத்தை படித்து தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு ஆங்கிலம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். தமிழில் இருந்தால் தமிழ் நாட்டிற்குள்ளே மட்டும் போக சுலபமாயிருக்கும். வெளியிடங்களுக்கு போக கஷ்டமாகயிருக்கும்.

SRI P. S. CHINNADURAI : தமிழ் நாட்டில் உபயோகிக்கப் படுகிற கார்டுகள், கவர்கள் மணியார்டர் பாரம்கள் ஆகியவற்றில் தமிழிலும் சேர்த்து அச்சிடுவது நல்லது என்ற கருத்தை இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துரைக்குமா ? எனறும்

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

என்று திருவள்ளுவர் கூறியிருப்பதால் திருவள்ளுவரின் படத்தைப் போட்டால் தாடியோ மற்றவையோ இல்லாமல போடுவார்களா ?

MR. SPEAKER : I rule that the latter part of the question is out of order. Let the Hon. Minister please answer the first part of the question.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அரசாங் கம்தான் இதைப்பற்றி எடுத்துச் சொல்லவேண்டுமென்ற அவசிய மில்லை. இப்பொழுது மத்திய சர்க்காரில் இந்த இலாகாவின் நிர் வாகத்திலிருக்கும் அமைச்சர் அவர்களுக்கே எல்லோரும் இந்த யோசனையைச் சொல்லலாம்.

Takkavi loans

*203 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

குறுகிய கால கேள்வி எண் 17-க்கு 1958-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ம் தேதியில் அளித்த பதிலையொட்டி தக்காவிக் கடன்களை தள்ளிக்கொடுக்கும் விஷயமாக டிபார்ட்மெண்டார் தள்ளிவிட முடியாது என்று எடுத்த முடிவுக்குக் காரணங்கள் யாவை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : As the peculiar circumstances which led to the waiver of the loan arrears in the Telengana area of the Andhra State were not obtaining in this State and as there are specific provisions in the Takkavi Manual to enable writing off loans for bonafide reasons it was decided not to write off loan arrears relating to takkavi loans granted prior to 1952 in a general way.

SRI S. M. ANNAMALAI : இந்த தக்காவிக் கடன்கள் 1946-ல் கொடுக்கப்பட்ட கடன்கள். இந்தக் கடனை வாங்கினவர்கள் இன்று அவர்களுக்கு சொந்தமான நிலங்களை விற்றிருக்கிறார்கள். அல்லது இந்த கடனை வாங்கினவர்கள் அநேகம் பேர்கள் இறந்து போய் விட்டிருக்கிறார்கள். ஆகவே, ஏன் இந்தக் கடனை சர்க்கார் தள்ளிக் கொடுக்கக் கூடாது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கடன் வாங்கியவர்கள் இறந்து போயிருந்தால் இறந்தவர்களிடமிருந்து வசூல் செய்ய முடியாது. அவர்களுக்கு வாரிசுகள் இருந்தால் அவர்களிட மிருந்து வசூல் செய்யலாம்.

15th December 1959]

SRI K. VINAYAKAM: Sir, arising out of the answer given by the Hon. Minister, what are the peculiar circumstances that obtained in Telengana as to justify the writing off of the takkavi loan? Do the same circumstances exist in our State also?

THE HON. SRI M. A. MANICKAVELU: The conditions prevailing in Telengana were really peculiar. For instance, it was represented that the loan amount had not actually been paid to the loanees prior to the Police action, that repayment had not been properly accounted for and ryots had not been asked by the Revenue authorities to pay the arrears of those years. So, under those conditions, it was thought that the loan arrears in Telengana might be written off.

Grand Anicut Canal

* 201 *Q.*—SRI R. SRINIVASA IYER: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) what are the dimensions of the silting up of the Grand Anicut Canal;

(*b*) when the silting up was first noticed;

(*c*) the action taken for getting over the silting trouble permanently; and

(*d*) to what extent the off-take of water by the Grand Anicut Canal has been affected by the silting up?

THE HON. SRI P. KAKKAN: (*a*) The dimensions of silting in the Grand Anicut Canal are 1 foot average and 2·5 feet maximum depth over the original bed level for a distance of 30,000 feet.

(*b*) It has been drawing silt into it right from the time the canal started functioning.

(*c*) Remedial measures to exclude silt from entering into the canal have been carried out then and there. These have not had full effect. The Irrigation Research Station at Poondi is also making model studies for the exclusion of silt permanently from the Grand Anicut Canal.

(*d*) Even though the bed is silted up, full supply for the present ayacut can be drawn in the canal.

SRI R. SRINIVASA IYER: When is this research which is said to be taking place for about 7 or 8 years likely to be finished? When will Government come to a decision as to what steps should be taken for so improving this canal as not to draw off any more silt at least?

THE HON. SRI P. KAKKAN: I cannot say anything now. The Irrigation Research Station at Poondi is making studies for exclusion of silt permanently from the Grand Anicut Canal. I think as early as possible it will be taken up.

Joint Committees for Safety

* 205 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. Minister for Home be pleased to state the number of Joint Committees for Safety that have been constituted as envisaged under the Factories Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no provision in the Factories Act, 1948, for the constitution of Joint Committees for safety.

Nagercoil Transport Department

* 206 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI T. S. RAMASWAMY) : Will the Hon. the Minister for Electricity be pleased to state the total daily average collection in the Nagercoil Transport Department in the months of November and December 1956 and those of 1958–59?

THE HON. SRI V. RAMAIAH : The total daily average collections for the months of November and December 1956 and those of 1958–59 in repsect of the Kanyakumari Branch of the Madras State Transport Department are as follows :—

	RS.	NP.
November 1956	7,419	00
December 1956	7,715	00
1958–59 (from April 1958 to March 1959).	8,364	50

Cycle Factory at Tanjore

* 207 Q.—SRI P. S. CHINNADURAI (on behalf of SRI A. R. MARIMUTHU) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

தஞ்சையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் சைக்கில் தொழிற்சாலை எப்பொழுது துவங்கும்? முதலீடு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The cycle Assembly Unit at Tanjore is expected to start functioning by the end of March 1960. The estimated cost of the scheme is Rs. 7,50,782.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, இதில் மொத்தம் வருடம் ஒன்றுக்கு உற்பத்தியாகப்போகிற சைக்கிள்களின் எண்ணிக்கை எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 5,000 சைக்கிள் கள்.

Late Sri V. O. Chidambaram Pillai's house

* 208 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருநெல்வேலி ஜில்லா ஒட்டப்பிடாரத்தில் உள்ள உயர்திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையின் வீட்டை அரசாங்கம் வாங்கியுள்ளதா? அதை என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது?

15th December 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM: The Government have already purchased the house and site belonging to the late Sri V. O. Chidambaram Pillai at Ottapidaram and the construction of a spinning hall and Library-*cum*-Reading Room on the site is in progress.

Famine Relief Works

* 209 *Q.*—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

பஞ்ச நிவாரண வேலைகள் சிபாரிசு செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகியும் திருநெல்வேலி தாலுகாவில் இன்னும் ஆரம்பிக்காததற்கு காரணம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: The Government sanctioned Low Scale Famine Relief works for Tirunelveli Taluk in G.O. Ms. No. 2002, Revenue, dated 9th July 1959. Seven works have been taken up for the year 1959–60. Two works have been asked to be started in anticipation of sanction of estimates. The Collector has stated that all the works will be completed soon.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: நான் இந்தக் கேள்வியை அனுப்பி மூன்று மாதங்களாகிறது. இப்போது பதில் தருவதற்கு மூன்று மாதங்களாகிறது. இவ்விதம் ஆறு மாதங்களாகியும் இதுவரை அந்த ஜில்லாவில் எந்தவிதமான பஞ்ச நிவாரண நடவடிக்கைகளும் எடுத்திருப்பதாக தெரியவில்லை. ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பஞ்சம் ஏற்படும்பொழுது, அதன் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திலிருந்து அதிகாரிகளுக்கு உடனடியாக சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: பஞ்ச நிவாரண வேலைகள் முதலாவது நான்குநேரி தாலுகாவில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னால் கனம் அம்மையார் அவர்கள் சொன்னதின் பின்னால் வேறு பல இடங்களிலும் வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆகவே இதைப் பற்றி புகார் ஒன்றும் செய்யவேண்டிய தேவையில்லை என்று நினைக்கிறேன்.

Surplus waters of the rivers in Kerala and Andhra States

* 210 *Q.*—SRI PAKKIRISAMI PILLAI, SRI N. K. PALANISAMI, SRI V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there were any negotiations with the Kerala and Andhra State Governments for the utilization of the surplus waters in those States;

(*b*) if so, the details thereof; and

(*c*) the decisions, if any, reached?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) & (c) : The question of diversion of the waters of the Krishna and the Godavari has been taken up before the Southern Zonal Council. The Andhra Pradesh Government has given a report. The Chief Engineer for irrigation of this State has given his remarks thereon. No decision has yet been arrived at in regard to the question of the diversion of the waters of the Godavari and Krishna rivers. As regards the Parambikulam Aliyar Project a statement showing the main features of the tentative agreement reached between the Madras and Kerala Governments in regard to the diversion of the waters of the Parambikulam and other connected rivers was placed on the Table of the House on 12th March 1959 in reply to a Legislative Assembly Question by Sri N. K. Palanisamy, M.L.A. The attention of the Member is invited to pages 105—106 and 188—189 of the proceedings of the Assembly, dated 12th March 1959. (Madras Legislative Assembly Debates—Official Report Volume XXI—No. 2.)

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், ஆந்திர தேசத்திலுள்ள நதிகளின் தண்ணீரைக்கொண்டு வருவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதா? அல்லது இப்போது பரம்பிக்குளத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால் அதற்கு எப்படியும் பொருளாதார செலவை உத்தேசித்து இதை தாமதப்படுத்தி எடுத்துக்கொள்ளலாம் என்று ஏதாவது அரசாங்கம் எண்ணுகிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி மத்திய சர்க்காருடன் கலந்து பேசிக்கொண்டிருக்கிறோம். இதனுடைய வேலைகளைப்பற்றியுள்ள ஆந்திர ராஜ்யத்தின் சீப் என்ஜினீயரின் ரிப்போர்ட் ஸோனல் கௌன்ஸிலில் வைக்கப்படும். வருகின்ற ஸோனல் கௌன்ஸில் கூட்டத்தில் இதுபற்றி பேசப்படும்.

SRI P. S. CHINNADURAI : ஸார், கோதாவரியையும் காவேரியையும் இணைப்பதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டமிருக்கிறதா? ஏனென்றால், கங்கையையும் காவேரியையும் இணைக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அந்த மாதிரி இருக்கும்போது கோதாவரியையும் காவேரியையும் இணைக்கலாம் என்று இந்த அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனிக்கேள்வி வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பரம்பிக்குளத் திட்டத்திற்கான பேச்சு வார்த்தை கேரள அரசாங்கத்துடன் சீக்கிரமாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறபொழுது, ஆந்திரத்திலுள்ள உபரி நீரைக்கொண்டு வருவதற்கான பேச்சு வார்த்தைகள் நடப்பதற்கு இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்கு காரணமென்ன? சீக்கிரமாகவே பாலாற்றில் தண்ணீர் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

15th December 1959]

THE HON. SRI P. KAKKAN: கேரள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியது மாதிரியே ஆந்திர அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி இதில் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: ஆந்திர சர்க்கார் முன்னாலேயே இதைப்பற்றி அறிக்கை சமர்ப்பித்து விட்டதாகத் தெரிகிறது. அப்படியானால் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு காலதாமதம் ஏற்படுவதற்கு காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN: சீக்கிரமாகவே இது பற்றிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். இதைத்தவிர விசேஷ காரணங்கள் ஒன்றும் இல்லை.

SRI M KALYANASUNDARAM: நம்முடைய சீப்-இன்ஜினியர் அவர்களுடைய ரிபபோர்ட்டுக்கும், ஆந்திர தேசத்து சீப்-இன்ஜினியர் அவர்களுடைய ரிப்போர்ட்டுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? அவ்விதமென்றால் அது என்ன வித்தியாசம்?

THE HON. SRI P. KAKKAN: வித்தியாசம் இருக்கிறது, அதை இப்போது சொல்வதற்கில்லை.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN: தலைவர் அவர்களே, நாகார்ஜுன சாகர் அணைக்கட்டு தேக்க அளவுக்கு கிருஷ்ணாவிலுள்ள தண்ணீர் வர முடியாது என்று தெரிகிறது. ஆகவே கோதாவரியிலுள்ள தண்ணீரை அதற்கு உபயோகப்படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயம் இருந்து வருவதாக தெரிகிறது. இது நமது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

THE HON. SRI P. KAKKAN: இதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI N. K. PALANISAMI: ஆந்திர ராஜ்யத்திலுள்ள நதிகளிலும் கேரள ராஜ்யத்திலுள்ள நதிகளிலும் எந்த எந்த நதிகளிலிருந்து உபரி நீர் நமக்குக் கிடைக்கக்கூடும் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அந்த விவரம் என்ன?

THE HON. SRI P. KAKKAN: இதற்கும் தனிக்கேள்வி போட வேண்டும்.

MR. SPEAKER: Questions are over.

[Noto.—An asterisk(*) at tho commencomnet of a speech indicates rovision by tho Mombor.]

II.—ANNOUNCEMENT.

MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER: The following reply to the Motion of Thanks passed by the Assembly has been received from the Governor:— 10 00 a.m.

'I have received with great satisfaction your Resolution of Thanks for the Address with which I opened the present session of the Legislature 5.

[15th December 1959

III.—GOVERNMENT BILL.

THE MADRAS GENERAL SALES TAX (TURNOVER AND ASSESSMENT) RULES VALIDATION AND GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1959 (L.A. BILL NO. 24 OF 1959)—*cont.*

MR. SPEAKER : We shall now proceed with the General Sales Tax (Turnover and Assessment) Rules Validation and General Sales Tax (Amendment) Bill, 1959. I believe yesterday clause 2 was over. We now take up clause 3.

Clause 3 was put and carried.

Clause 4.

THE HON. SRI C. SUBRAMANIAM : We are withdrawing this clause, Sir.

MR. SPEAKER : I am sorry that, according to the rules, the Government have no option or right to give notice of withdrawal of a clause.

THE HON. SRI C. SUBRAMANIAM : Then we shall vote it out, Sir.

MR. SPEAKER : I was about to suggest that that was the only way out.

The clause was put and lost.

Clause 1.

MR. SPEAKER : The motion is—

In clause 1 do stand part of the Bill.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

In clause 1, *omit* the words and brackets " and General Sales Tax (Amendment) ".

MR. SPEAKER : The question is—

In clause 1, *omit* the words and brackets " and General Sales Tax (Amendment) ".

The amendment was put and carried.

The clause, as amended, was put and carried.

THE LONG TITLE AND THE PREAMBLE.

MR. SPEAKER : The motion is—

That the Long Title and the Preamble do stand part of the Bill.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

In the Long Title, *omit* the words and figures " and to amend the Madras General Sales Tax Act, 1959 ".

In the Preamble, *omit* the words, figures and brackets " and to amend the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959), for the purposes hereinafter appearing ".

MR. SPEAKER : The question is—

In the Long Title, *omit* the words and figures " and to amend the Madras General Sales Tax Act, 1959 ".

15th December 1959] [Mr. Speaker]

In the Preamble, *omit* the words, figures and brackets and to amend the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959), for the purposes hereinafter appearing ".

The amendments were put and carried.

The Long Title and the Preamble, as amended, were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

That the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules Validation and General Sales Tax (Amendment) Bill, 1959 (L.A. Bill No. 24 of 1959), as amended, be passed.

MR. SPEAKER: The question is—

That the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules Validation and General Sales Tax (Amendment) Bill, 1959 (L.A. Bill No. 24 of 1959), as amended, be passed.

The motion was put and carried and the Bill, as amended, was passed.

IV.—NON OFFICIAL BUSINESS

A. BILLS.

(1) THE MADRAS PRESERVATION OF PARKS, PLAY-FIELDS AND OPEN SPACES BILL, 1958 (L.C. BILL NO. 3 OF 1958).

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, I move—

That the Madras Preservation of Parks, Play-fields, and Open Spaces Bill, 1958 (L.C. Bill No. 3 of 1958), as passed by the Legislative Council, be taken into consideration.

SRI K. RAMACHANDRAN: I second the motion, Sir.

(Deputy Speaker in the Chair.)

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, this is an important Bill introduced in the Council by the learned Leader of the Opposition Dr. A. Lakshmanaswami Mudaliar. This Bill was considered very deeply and passed by the Council with the co-operation of all the parties including the members on the treasury bench. It has now fallen to my lot to move this Bill in this House. This is a very important Bill, Sir, and it is a good thing that Dr. Lakshmanaswami Mudaliar came forward to safeguard the parks, play-fields, and open spaces against encroachments—encroachments especially on the open spaces in the metropolitan areas. This Bill has been there before the Legislature for nearly three years, and a select committee of all the parties of both the Houses went through the Bill in detail and put forward their proposals. The Bill is now placed before the Assembly for its acceptance. Nobody can dispute the fact that for preserving the health of the nation and for giving the elementary amenities to adults and children for physical exercise, it is absolutely indispensable to maintain the parks, play-fields, and open spaces intact.

As a matter of fact, in the United Kingdom they have passed an Act by which they preserve all the open spaces. This is the position in almost all the western countries. From my recent experience of Australia and New Zealand, I can say that they go on preserving all these open spaces, and they consider that these open spaces add beauty to the metropolitan areas. They attract tourists. Tourism is considered as an industry in all those countries. Therefore it is but right that we also take steps to preserve all these open spaces.

Sir, some people may think that with the growth of population, some encroachment on the open spaces is necessary for the construction of houses, factories, etc. This is not correct. So far as our Madras City is concerned, it is growing rapidly, and so many suburban areas are coming up outside the Corporation area. Recently, Sir, some buildings have come up in the city in the open spaces that have been kept vacant for a very long time. If this thing is allowed to go on, I am sure it will tell upon the health of the people. Therefore, we must seriously consider one thing that is, we must preserve these open spaces at any cost and see that no encroachments are made on them and that they serve as beauty spots.

Sir, this Bill should be extended to the whole of the Madras State and to all the municipalities. The municipalities must see that these open spaces are preserved intact. For this purpose, the Government of Madras should arm the executive officers of the municipalities with full powers, and see that they enforce this legislation with all rigidity.

It requires no more elaboration. This is a very important Bill, and I hope it will receive the support of all the parties including the Government.

With these words, Sir, I move the Bill for the unanimous acceptace of this House. Thank you, Sir.

DEPUTY SPEAKER : Motion moved—

That the Madras Preservation of Parks, Play-fields, and Open Spaces Bill, 1958 (L.C. Bill No. 3 of 1958), as passed by the Legislative Council, be taken into consideration.

The motion is before the House for discussion.

SRI S. LAZAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிய கருத்து அடிப்படையில் நானும் வரவேற்கிறேன். நகரங்களைப் பொருத்தவரைக்கும் இது போன்ற ஒரு மசோதா தேவை என்ற ஒரு கருத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதிலும் துரிதமாக நாகரீகம் முன்னேறிக்கொண்டு வரக்கூடிய இந்த நேரத்தில், குறிப்பாக நகரங்களிலே ஜனத் தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வரக்கூடிய இந்த நேரத்தில், அதன காரணமாக வீடுகளும் மற்றைய தங்குவதற்கான வசதிகளும் நினைத்த இடங்களிலே—கொஞ்சமாவது காலி இடம் இருந்தாலும

15th December 1959] [Sri S. Lazar]

அதையும் ஆக்கிரமித்து—கட்டக்கூடிய நிலைமைக்கு இப்போது வந்துக் கொண்டிருக்கிறது. சுகாதார அடிப்படையிலும் இன்னும் மற்றைய டிராபிக் போன்ற வசதிகளையும் கருதிப் பார்க்கும்போது இது போன்ற, இப்போது இருந்துவரக்கூடிய இடங்களை யாவது— பார்க்குகள், காலி இடங்கள், இன்னும் இப்போது விளையாட்டிற்கு உபயோகப்படுத்தி வரக்கூடிய இடங்கள்—அப்படியே காப்பாற்றி வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனால் நகரங்களைப் பொருத்தவரைக்கும் இப்பேற்பட்ட ஒரு மசோதா இருந்த போதிலும்கூட நாளடைவிலே இதனுடைய பலன் கிடைக்காது என்பது எனது கருத்து. இப்போது இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப இந்த மசோதா உபயோகப்படும் என்று நாம் நினைக்க முடியுமே தவிர இன்னும் நாள் ஆக ஆக ஜன நெருக்கடி அதிகமாகிக்கொண்டு வரக்கூடிய நேரங்களிலே, இன்னொரு தீவிர நடவடிக்கை எடுத்தால்தான் உள்ளபடியே இப்போது சென்னை நகரத்திலும், இன்னும் ஜில்லாவிலே இருக்கக்கூடிய நகரங்களிலும் இருக்கக்கூடிய காலி இடங்களை நல்ல முறையில் காப்பாற்ற முடியும். இப்போது இந்த ஒரு மசோதாவை மட்டும் நிறைவேற்றி விட்டால் காலி இடங்களையெல்லாம் அப்படியே காப்பாற்றி விட முடியும் என்று வைத்துக்கொண்டால், இந்த மசோதா நாளடைவில் பலன் தராது. இதையடுத்து அரசாங்கம் செய்ய வேண்டிய முக்கிய நடவடிக்கை இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இது போன்ற நகரங்களில் சென்னை, இன்னும் மற்ற நகரங்களில்—ஜன நெருக்கடி இன்னும் அதிகமாக ஏற்படாதவாறு நடவடிக்கை எடுத்தாகவேண்டும். ஆனால் அதைப் பொருத்தவரைக்கும் நமது மதிப்பிற்குரிய அமைச்சர்—சுகாதார அமைச்சர்—வேறு ஒரு முறையைக் கையாளவேண்டுமென்று சொல்வார்கள். அதற்கும் நான் ஒப்புவதாக இல்லை. என்னைப் பொருத்தவரைக்கும் இது போன்ற ஜன நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு குடும்பக் கட்டுபாடு செய்தால் சரியாகப் போய்விடும் என்று ஒப்புக்கொள்வதற்கில்லை. அதற்கு பதிலான இன்னும் ஜன நெருக்கடி ஏற்படாதவாறு கட்டுப்பாடு செய்யவேண்டும். அதிகப்படியான ஜனங்கள் நகரங்களில் குடியேறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து. அதற்கு அரசாங்கமே சில முறைகளைக் கையாளுவார்களானால் நல்ல முறையில் இதை நடைமுறையில் கொண்டுவர முடியும். உதாரணமாக இது போன்ற நகரங்களில் இருக்கக்கூடிய சில காரியாலயங்களை—அன்றாட வேலைகளில் அரசாங்கத்தோடு கலந்து ஆலோசிக்க வேண்டிய அவசியம் இல்லாத காரியாலயங்களை வேறு இடங்களுக்கு மாற்றுவார்களானால் கண்டிப்பாக ஜன நெருக்கடி குறையும். அது மட்டுமல்ல. அவசியம் அல்லாது பொழுது போக்காக அல்லது ஏதாவது ஒரு தகராறு கிராமப்புறங்களிலோ அல்லது மற்ற இடங்களிலோ ஏற்படும்போது அதற்காக வேண்டி நகரங்களுக்கு வந்து குடியேறக்கூடிய மக்களைத் தடை செய்ய வேண்டும். அவர்கள் அவசியம் அல்லாது நகரங்களில் குடியேறுவதை நிறுத்திவிட்டால் எந்த நோக்கத்தோடு இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோமோ அது நிறைவேற முடியும். இன்றைய

தினம் எத்தனையோ காரியாலயங்கள் அந்த இடத்தில் இருக்க வேண்டிய அவசியம் இல்லாது இருக்கின்றன—சென்னை மட்டுமல்ல, மற்ற நகரங்களிலே கூட. இவைகளை பிற மொப்பூஸில் இடங்களுக்குக் கொண்டு போகும் பட்சத்தில் இப்போது இருக்கிற இட நெருக்கடி மிக மிகக் குறையும். அதோடு கூட இந்த நகரப்புறங்களில் இப்போது ஏற்பட்டு வருகிற சில தொழில் ஸ்தாபனங்களைக் கூட நாளுக்கு நாள் நாம் பார்க்கிறோம். சென்னையிலும், சென்னையைச் சுற்றி யிருக்கிற இடங்களிலும் பெரிய தொழில் ஸ்தாபனங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறதே தவிர வேறு வெளிப்புறங்களில் ஏற்படுவதில்லை. தனியார் துறையில் ஏற்படுகிற தொழில் ஸ்தாபனங்கள்தான் இப்படி இருக்கிறது என்பதல்ல, அரசாங்கம் நிறுவக்கூடிய தொழில் ஸ்தாபனங்கள் கூட நகரங்களைச் சுற்றியே வருகின்றன. இவைகளை வெளிப்புறங்களில் மாற்றி அமைத்தால் ஜன நெருக்கடி குறையும், அதன் வாயிலாக சுகாதாரம் மேம்படும் என்பது என் தாழ்மையான கருத்து.

மற்றப்படி இந்த மசோதாவிலே குறிப்பிட்டிருக்கிற ஒரு சில முக்கிய அம்சங்களைப் பார்க்கும்போது இவைகள் எல்லாம் சென்னை அல்லது மற்ற முனிஸிபல் நகரங்களுக்குப் பொருந்துமே தவிர அதை அடுத்து இருக்கும் பெரிய கிராமங்களுக்கும், சிறிய கிராமங்களுக்கும் பொருந்தாது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலாவது பிரிவிலே உடனடியாக இந்த மசோதாவை சென்னை நகரத்திற்கும் அதையடுத்து முனிஸிபல் நகரங்களுக்கும் கொண்டு வரப்படும் என்று சொல்லக்கூடிய நேரத்தில், பிறகு வேண்டுமானல் அவ்வப்போது அரசாங்கத்தினுடைய கருத்துக்கு ஒப்ப மற்றைய ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்களுக்குக்கூட இந்த மசோதாவை அமுலாக்கலாம் என்று இங்கே கண்டிருக்கிறது. நகரங்களைப் பொருத்தவரைக்கும் அதற்கு ஒரு எல்லை நிறுவப்பட்டிருக்கிறது. அந்த எல்லைக்குள் அநேகமாக விடு கட்டக்கூடிய இடங்களாக இருக்குமே தவிர, காலி இடங்களாக இருக்குமே தவிர சாகுபடி நிலங்கள் அதில் அடங்கி வராது. அதையடுத்து பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால்—மேஜர் அல்லது மைனர் எதுவாக இருந்தாலும்—பஞ்சாயத்து ஜூரிஸ்டிக்ஷனில் அந்த மாதிரி வீடு கட்டக்கூடிய காலி இடம் மட்டுமல்லாமல், அந்த கிராமத்திலேயிருக்கக்கூடிய சாகுபடி நிலங்கள் அத்தனையும் இதன் கீழ் வருகிறது. இந்த மசோதாவின் மற்றைய பிரிவின்படி காலி இடங்களில் அல்லது பார்க்குகளில்—பார்க்குகளைப் பொருத்த வரையிலும் சிரமம் இருக்காது என்று சொன்னபோதிலும்—காலி இடங்களை எடுத்துக்கொண்டால் அதைப் பொருத்தவரையிலும் சிரமம் ஏற்படும். விவசாயி நினைத்தால் குடிசையோ அல்லது வீடோ கட்டுவது என்று சொன்னலும், அல்லது மற்றபடி அந்த நிலத்தை உபயோகத்திற்குக் கொண்டுவருவது என்று சொன்னலும், அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யக்கூடிய சந்தர்ப்பத்திலே அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்று செய்யவேண்டும் என்று இந்த மசோதாவில் அமைந்திருக்கிற காரணத்தினல் இது நடைமுறையில் சாத்தியப்படாது என்று குறிப்பிட விரும்பு

கிறேன். இந்த மசோதாவைப் பொருத்தவரையிலும் சென்னை, மேலும் மற்ற நகரப்புறங்கள் இந்த இடங்களில் மட்டும் அமுல் நடத்தினால் நல்ல முறையில் பலன் தரும் என்பது எனது கருத்து.

அதையடுத்து இதிலே மற்றொரு பிரிவு கண்டிருக்கிறது. இப்போது அரசாங்கம் இந்த மசோதாவை அமுலில் கொண்டு வந்தவுடன், முனிஸிபாலிட்டியாக இருந்தால் கமிஷனரிடமிருந்து, சென்னை நகரத்தைப் பொருத்தவரையில் கார்ப்பொரேஷன் கமிஷனரிடமிருந்து, பஞ்சாயத்துக்களாயிருந்தால் பஞ்சாயத்து அதிகாரிகளிடமிருந்து லிஸ்டைத் தயார் செய்து அவர்களிட மிருந்து அரசாங்கம் வாங்கி அதைப் பிரசுரித்து அதன் பேரில் ஆட்சேபனைகளைக் கேட்டு, அதையடுத்து ஒரு முடிவான லிஸ்ட் தயார் செய்யவேண்டுமென்று ஒரு பிரிவு இருக்கிறது. அப்படி அந்த லிஸ்டிலே ஏதாவது மாறுபாடு செய்யவேண்டுமென்று சொன்னாலும், அரசாங்கத்தின் அனுமதியின்றி செய்ய முடியாது என்று மற்றொரு பிரிவு இருக்கிறது. இது போன்ற இடங்களில் லிஸ்ட் தயாரிக்கப்பட்டு, அந்த லிஸ்டிலே கண்டுள்ள இடங்களில் ஏதாவது கட்டிடத்தைக் கட்டவேண்டுமென்று சொன்னாலும், அல்லது அந்த இடங்களை வேறு காரியங்களுக்கு உபயோகிக்க வேண்டுமென்று சொன்னாலும் அரசாங்கத்தின் முன் அனுமதி பெறவேண்டும் என்று அமைந்திருப்பதானது நடைமுறையில் அதிக சிரமத்திற்கு இடம் கொடுக்கும். இது போன்ற இடங்களில் டீசென்ட்ரலைஸேஷன் இருந்தால்தான் செய்யக்கூடிய காரியங்கள் துரிதமாக இருக்க முடியுமே தவிர—சிரமம் இல்லாமல் இருக்க முடியுமே தவிர—அரசாங்கத்திற்கு வரவேண்டுமானால் கஷ்டமாக இருக்கும். முனிஸிபல் நகரங்களைப் பொருத்த வரையில் ஜில்லா கலெக்டருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால் இந்தத் தொல் லையைத் தவிர்க்க வசதி ஏற்படும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அதை அடுத்து நல்ல நோக்கத்தைக் கொண்டுள்ள இந்த மசோதாவைப் பிரேரேபித்த நண்பர் அவர்கள் இதிலே கொடுத் திருக்கும் விவரங்களைப் பார்த்தால், யாராவது ஒரு காகிதத்தைப் போட்டுவிட்டான் என்றால் கூட அவனுக்கு ஆறு மாத தண்டனை கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. அவர்களுக்கு இருந்த ஆவலின் காரணமாக, அவாவின் காரணமாக இப்படிக் கொண்டு வந்திருக் கிறார்களோ என்று நினைக்கிறேன். இது போன்ற ஷரத்தைக் கொண்ட ஒரு மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்திருக்கு மானால் எதிர்கட்சியிலிருந்து எந்த அளவுக்குக் கடுமையாக எதிர்ப்பு காண்பிக்கப்பட்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்க் காமல் இருக்க முடியவில்லை. பெரும் அளவுக்குத் தீங்கு விளைவிப் போருக்கு மட்டுந்தான் இது போன்ற தண்டனை கொடுப்பது நியாயமாக இருக்குமே தவிர ஏதோ ஒரு தூசியைப் போட்டால் கூட ஆறு மாதம் தண்டனை கொடுக்கக்கூடிய முறையில் அமைத் திருப்பது பொருத்தமாகாது என்று கருதுகிறேன்.

அது மட்டுமல்ல. மற்றொரு பிரிவைப் பார்க்கும்போது, இன்னின்ன இடங்களை இன்னின்ன முறையில் பாதுகாக்கவேண்டு மென்று அரசாங்கம் தாக்கீது கொடுப்பார்களேயானால் ஆங்காங்

குள்ள ஸ்தல நிர்வாகி நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். அவ்வாறு நிறைவேற்றத் தவறுவாரேயானல் அரசாங்கமே அந்தக் காரித்தைச் செய்து விட்டு அதற்கான செலவு அனைத்தையும் அந்த ஸ்தல நிர்வாகத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளவேண்டுமென்று அமைந்திருக்கிறது. இது போன்ற காரியங்களைப் பொறுத்தவரை அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஓரளவு அதிகாரம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கும் சில சந்தர்ப்பங்கள் கொடுக்க வேண்டும். இதற்குப் பொறுப்பாளி ஸ்தல நிர்வாகி என்று இருக்கிறதே தவிர ஸ்தல ஸ்தாபனம் என்று அமையவில்லை. ஒரு முனிசிபல் நகரத்திற்குத் தாக்கீது கொடுத்து ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவில்லையானல் அரசாங்கமே அதை மேற்கொள்ளுவது என்றில்லாமல் ஸ்தல ஸ்தாபனம் அதனுடைய கருத்தைத் தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். அதைக் கொடுக்காது அரசாங்கமே செய்துவிட வேண்டுமென்ற முறையில் இருப்பது அதிருப்தியையே ஏற்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த ஒருசில கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தக்கவாறு மாறுதல்களைச் செய்து இந்த மசோதாவை நிறைவேற்றக்கூடிய அதே சந்தர்ப்பத்தில் நான் ஆரம்பத்தில் சொன்னது போல் நகரப்புறங்களில் இருக்கும் இடங்களைப் பாதுகாப்பதோடு ஜன நெருக்கடியைத் தவிர்க்கக் கூடிய முறையிலும் இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri A. GOVINDASAMY** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை வரவேற்று நானும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவானது நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. நமது நகரங்களிலும், மேஜர் பஞ்சாயத்துகளிலும் உள்ள காலி இடங்களில் பள்ளிக்கூடக் குழந்தைகள் விளையாடுவதற்கும், மாலைக் காலத்தில் பொதுமக்கள் பூங்காவிலே சென்று வானொலி மூலம் நல்ல பல கருத்துக்களை அறியவும், நல்ல காற்று வாங்கவும் வசதியாக இடங்களை அமைப்பது குறித்து இந்த மசோதா நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. அத்தகைய இடங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நகரசபை கமிஷனருக்கும், மேஜர் பஞ்சாயத்துகளில் எக்சிக்யூட்டிவ் ஆபீசர்களுக்கும் இருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த நோக்கில் எங்களுடைய தலைநகராகிய கடலூரில், சென்னை ராஜ்யத்திலேயே மிகப் பெரிய மைதானம் என்று சொல்லக்கூடிய அளவில் உள்ள ஒரு மைதானத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்த மைதானத்தில் 1937-ம் வருஷத்தில் அப்போது சென்னை ராஜ்ய முதலமைச்சராக இருந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் சுப்பராயலு பார்க் என்ற ஒரு பார்க் நிருவப்பட்டது. சுப்பராயலு ரெட்டியார் என்பவர் கடலூர் நகரசபைத் தலைவர்களிலேயே முதல்வராகவும் நமது ராஜ்யத்தின் முதலமைச்சராகவும் இருந்து பணி

15th December 1959] [Sri A. Govindasamy]

யாற்றிய காரணத்தினாலும் அவர் நகர சபையை நல்ல திறமையோடு நடத்திய காரணத்தாலும் அவர் பெயரால் அந்தப் பார்க் நிறுவப்பட்டது. 1937-ல் நிறுவப்பட்ட அந்தப் பார்க்கை நல்ல முறையில் முனிசிபாலிடி கண்காணித்து வந்தது. ஆனால் கடந்த தேர்தல் சமயத்தில் நேரு அவர்கள் தமிழ் நாட்டிற்குச் சுற்றுப் பயனம் வந்த நேரத்தில் அந்த மைதானத்தில் அவர் பேசுவதற்கு ஒரு மேடை அமைத்தார்கள். அந்த மேடைக்கும் அந்தப் பார்க்குக்கும் இடையில் 200 கெஜத்திற்கு மேல் இருக்கும். அந்த நிலைமை இருந்தாலும்கூட அந்தப் பார்க் வரை கூட்டம் வரும் என்று எதிர்பார்த்து அந்தப் பார்க்கை அழித்துவிட்டார்கள். ஆனால் அந்த அளவுக்குப் பெரும் திரளான ஜனங்கள் கூடவில்லை. அதைப்பற்றி மாவட்ட கலெக்டரை விசாரித்தாலும் தெரியும். நகரசபைத் தலைவரை விசாரித்தாலும் தெரியும். அப்போது அழிக்கப்பட்ட பார்க்கானது மீண்டும் புதுப்பிக்கப்படவில்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பார்க்குகளைப் பாதுகாக்க வேண்டும்; பெரிய காலியிடங்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற தனிப்பட்ட முறையில் அங்கத்தினர் இந்த மசோதாவைக் கொண்டு வருகின்ற நேரத்தில் அரசாங்கமே, பார்க்குகளைப் பாதுகாக்கவேண்டிய அரசாங்கமே ஒரு நல்ல தலைவர் பேரில் நிறுவப்பட்ட பார்க்கை, அதுவும் அந்தச் சமயத்தில் முதலமைச்சராக இருந்த ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் கல் நாட்டப்பட்ட அந்தப் பார்க்கை அழிக்கிறார்கள் என்பது வருந்தத்தக்கதாகும். இன்றைய தினம் அந்த இடமானது பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. மீண்டும் அந்தப் பார்க்கை நல்ல முறையிலே புதுப்பித்தால் பொது ஜனங்களுக்கு நன்மை ஏற்படும், வசதி ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டி அதை மீண்டும் அரசாங்கமே புதுப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தப் பெரிய மைதானத்தில் டவுன் ஹால் கட்ட அரசாங்கத்தின் அனுமதி பெற்று ஒரு கட்டிடத்தைக் கட்டியிருக்கிறார்கள். அதன் பிறகு தென்னாற்காடு ஜில்லா காங்கிரஸ் கமிட்டியானது அதன் பக்கத்திலேயே அவர்களுடைய காரியாலயத்தை அமைக்க அரசாங்கத்தின் அனுமதி பெற்று ஒரு பெரிய இடத்தை இலவசமாகப் பெற்றிருக்கிறார்கள். அதற்கு அடுத்த காலி இடத்தை மெடிகல் சங்கம் கட்டிடம் ஒன்று கட்டக் கேட்டார்கள். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. டவுன் ஹால் கட்டுவதற்கும், காங்கிரஸ் காரியாலயம் அமைக்கவும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்க, மெடிகல் சங்கம் வைக்க அனுமதி கொடுக்காத தன்மையைப் பார்க்கும் போது, தேவைப்பட்டவர்களுக்கு வசதி அளிப்பதும், தேவையில்லாதாருக்கு அனுமதி மறுக்கப்படுவதுமான பாரபட்ச நிலைமையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

இந்த மாதிரி பார்க்குகளிலே எதாவது குப்பையைப் போட்டு விட்டால் 6 மாத தண்டனை என்று இருப்பது உண்மையிலேயே

கடுமையான தண்டனைதான். சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டு வந்தால் எதிர்க் கட்சிக்காரர்கள் எதிர்ப்பார்கள் என்ற கருத்தை சர்க்கார் தரப்பு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தாலும் அது சரியில்லை என்றால் சரியானதல்ல என்று மறுப்புக் கூற நாங்கள் தயங்க மாட்டோம், என்ற முறையில் அதைச் சுட்டிக் காட்டி அந்த தண்டனையைக் குறைக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தச் சட்டத்தை அமுலாக்கும் பொறுப்பு ஒரு ஹெட் கான்ஸ்டபிள் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தவித வாரண்டும் இல்லாமல் அந்தப் பார்க்கிலே தவறு செய்கிறவர்களை அரெஸ்ட் செய்கிற பொறுப்பு ஒரு சாதாரண ஹெட் கான்ஸ்டபிள் கையிலே ஒப்படைத்தால் அதனால் பல தீமைகள் ஏற்படக்கூடும். சாதாரணமாக இந்த மாதிரி மைதானங்களில் மாலை நேரத்தில் பொழுதுபோக்காக உட்கார்ந்து கொண்டிருக்கும் போது அங்கே மாலை நேரத்தில் பலகாரங்கள், பட்டாணி, சுண்டல் போன்ற சிற்றுண்டிகளை வாங்கிச் சாப்பிடும் பழக்கத்தை வைத்திருக்கிறார்கள். அதைச் சாப்பிட்டுவிட்டு அந்த காகிதத்தை
10 30 a.m. அவர்கள் போட்டால்கூட தண்டனைக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, இந்த தண்டனையைக் குறைக்க வேண்டுமென்றும், ஹெட் கான்ஸ்டபிளிடம் இந்த அதிகாரத்தைக் கொடுக்கக் கூடாதென்றும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், மேஜர் பஞ்சாயத்துகளிலே காலியாக உள்ள இடங்களில் சாதாரணமான நேரங்களில் எல்லாக் கட்சியினரும் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதிக்கவேண்டும். மேஜர் பஞ்சாயத்துக்குப் போதுமான பண வசதி இருந்தால், அம்மாதிரி காலி இடங்களில் ஒரு மேடை அமைத்து, அந்த மேடையை எல்லாக் கட்சியினரும் ஒரு சிறு கட்டணத் தொகையை செலுத்தி கூட்டங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ள வசதி செய்து தரப்பட வேண்டும். அம்மாதிரி வசதி செய்து கொடுத்தால்தான் அதனால் எல்லோரும் பயனடையக் கூடும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, மேஜர் பஞ்சாயத்திகளுக்கும், நகர சபைகளுக்கும் இது விஷயமாக ஏதாவது பண உதவி வேண்டுமென்றால் அதையும் அரசாங்கம் கொடுத்து உதவத் தயாராக இருக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா பொறுக்கு கமிட்டியிலே நன்றாக பரிசீலனை செய்யப்பட்டு, இன்னொரு மன்றத்தில் விவாதிக்கப்பட்டு, அங்கு நிறைவேற்றப்பட்டு, இப்பொழுது இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறது. இதில் ஒரு தனி விசேஷம் என்னவென்றால், அந்த மன்றத்திலும் எதிர்க்கட்சித் தலைவர்தான் இந்த மசோதாவை பிரேரேபித்தார். இந்த மன்றத்திலும் எதிர்க்கட்சித் தலைவர்தான் இதை பிரேரேபித்திருக்கிறார். இதன் முக்கியமான நோக்கம் பூங்கா, விளையாட்டு மைதானம், திறந்த வெளி மைதானம் இவை

15th December 1959] [Sri M. A. Manickavelu]

கள் எதற்காக ஏற்பட்டனவோ அதற்காகவே அவைகள் உபயோகப்படுத்தப்பட வேண்டும், அங்கே கட்டிடங்கள் கட்டி அதை விளையாட்டுக்கோ அல்லது பொழுதுபோக்குக்கோ உபயோகம் இல்லாமல் செய்யக்கூடாது என்றும், அந்த இடங்களை நல்ல மாதிரியாக கண்காணிக்க வேண்டுமென்பதும் தான். அரசாங்கம் இந்த மசோதாவிற்கு சம்மதிக்கிறது என்ற முறையிலே சில வார்த்தைகள் சொல்ல முன்வந்துள்ளேன்.

இந்த மசோதாவானது கார்பரேஷன், மற்ற முனிசிபாலிடிகளிலும் உடனடியாக அமுலுக்கு கொண்டுவரப்படும். மற்ற பிராந்தியங்களிலே அவ்வப்பொழுது எப்படி நிலவரம் இருக்கிறதோ, அதை அனுசரித்து ஒரு 'நோடிபிகேஷன்' மூலம் விஸ்தரிக்கப்படலாம். சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதுவும் சட்டப்படிப்பு படித்த அங்கத்தினர் ஒருவர் சொன்னார். ஏதோ தண்டனை ரொம்பவும் கடுமையாக இருக்கிறது, ஒரு ஊசியையோ அல்லது ஒரு காகிதத்தையோ போட்டு விட்டால்கூட தண்டனை விதிக்கப்படும் என்று சொன்னார். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. 'ரப்பிஷ்' என்ற வார்த்தையை சரியான முறையில் அர்த்தம் செய்யவேண்டும். அசுத்தப்படுத்தக்கூடிய பொருள்களைப் போட்டால் தான் குற்றமே தவிர, ஒரு ஊசியை போட்டுவிட்டதினால் அதற்காக எந்த நீதி மன்றமும் ஒன்றும் தண்டனை அளித்து விடாது. நமது எதிர்க்கட்சி நண்பர் அவர்கள் தண்டனை அதிகம் என்று சொன்னார். தண்டனை ஏட்டு அளவிலாவது சுமாராக இருக்கவேண்டும். அதாவது not exceeding six months imprisonment or fine என்ற முறையில்தான் இருக்கிறது. 'அண்டு' என்று கூட இல்லை. சட்டத்தில் அதிகப்பட்ச தண்டனை விதித்திருப்பதினால், உடனே அப்படியே தண்டனை கொடுத்துவிட மாட்டார்கள். முதல் குற்றத்திற்கு எச்சரிக்கை செய்வார்கள். பிறகு 1, 2 ரூபாய் அபராதம் விதிப்பார்கள். மறுபடியும் தொடர்ந்து குற்றம் செய்தால்தான் அதிகப்படியான தண்டனை விதிப்பார்கள். சட்டத்தில் விதிக்கப்பட்ட அளவு தண்டனையே கொடுக்க வேண்டுமென்பது இல்லை. அதுபற்றி ஒன்றும் பயப்படவேண்டாம்.

ஏதோ ஹெட் கான்ஸ்டேபிளைப்பற்றி சொன்னார். தடவித் தடவிப் பார்த்தேன். எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை (சிரிப்பு.) அரெஸ்டு செய்வதற்கு மாத்திரம்தான் ஹெட் கான்ஸ்டேபிளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. அதற்குப் பிறகு சார்ஜ் ஷீட்டு போட்டு, நீதி மன்றத்திற்கு போகவேண்டும். சாட்சி இருக்கிறது, விசாரணை இருக்கிறது. ஆகையால் ஒன்றும் பயமில்லை. தப்பு செய்கிறவர்களை கண்டுபிடிப்பதற்கு மட்டும்தான் அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தப்பு செய்வதை கண்டு பிடிப்பதற்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் வர முடியாது, இதையெல்லாம் கீழே உள்ள உத்தியோகஸ்தர்கள் தான் செய்ய வேண்டும். கீழேயுள்ள அதிகாரிகள் தான் இம்மாதிரி குற்றங்களை 'காக்னிஸன்ஸ்' எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்காக பெரிய

[Sri M. A. Manickavelu] [15th December 1959

அதிகாரி வருவது என்பது முடியாத காரியம். ஆகவே, அனுவசியமாக தப்பு செய்கிறவர்கள்தான் இதில் அகப்பட்டுக்கொள்ளுவார்கள்.

மேல்நாடுகளிலே ரொம்ப சுத்தமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். என்னுடைய ஒரு அனுபவம் சொல்லுகிறேன். வியன்னா நகரத்தில் ரொம்ப சுத்தமாக இருக்கும் என்று சொல்லுவார்கள். அங்கே சில வருஷங்களுக்கு முன்பு ஒரு கான்பெரன்ஸ் நடந்தது. இந்தியாவிலிருந்து அநேக டாக்டர்கள் அங்கே போனார்கள். அங்கு ஒரு நல்ல அழகான ஹோட்டலில் தங்கி இருந்தார்கள். அவர்களுக்கு அங்கே பெண்ஜாதி, பிள்ளைகளிடமிருந்து கடிதங்கள் வந்தன. கடிதத்தினுடைய உறையை தங்கியிருந்த அறையின் ஜன்னல் வழியாக வெளியே போட்டுவிட்டார்கள். கீழே நல்ல நந்தவனம் வைத்திருக்கிறார்கள். ஆதலால் அம்மாதிரி போடுவது குற்றமாம். உடனே மேலே ஆசாமி வந்து 'இங்கே அம்மாதிரி காகிதம் போடுவது குற்றம். உங்களை இந்தத் தடவை மன்னித்துவிடுகிறேன். நீங்கள் வெளி நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள். இனிமேல் அம்மாதிரி கீழே காகிதத்தைப் போட்டால் பிராசிகியூஷன் செய்துவிடுவார்கள்' என்ற சொன்னானாம். அந்தமாதிரி வகையிலே இங்கே ஒன்றும் சொல்லவில்லை. 'ரப்பிஷ்' போட்டால் தான் குற்றம். அம்மாதிரி சிறு காகிதங்களை கீழே போடக்கூடாது. ஜோபியில் போட்டுக்கொள்ளவேண்டும். மேல்நாடுகளில் அம்மாதிரி பழக்கம் இருக்கிறது. இங்கே பக்கத்தில் இருப்பவர்கள் மீது விழும்படி மூக்கை கையால் சிந்திப் போடுகிறார்கள். மேல்நாடுகளில் மூக்கை கையில் சிந்தி ஜோபியில் போட்டுக்கொள்ளுவார்கள். அம்மாதிரி நல்ல பழக்கங்களை இங்கேயும் கொஞ்சம் கொஞ்சமாக வரவேண்டும். ஜனங்களை இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக திருத்திக் கொண்டிருக்கிறோம். ஆபாசமான பழக்கங்கள் இருக்கக்கூடாது. அதற்காகத்தான் கொஞ்சம் கொஞ்சமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறோம். ஆகையினால் இந்த மசோதா நல்லபடியாக அமைந்திருக்கிறது. இந்தச் சபை இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Dces the Hon. the Leader of the Opposition want to say anything?

SRI V. K. RAMASWAMY MUDALIAR : No, Sir.

MR. SPEAKER : The question is—

"That the Madras Preservation of Parks, Play-Fields and Open Spaces Bill, 1958, (L.C. Bill No. 3 of 1958) as passed by the Legislative Council be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clauses 3 to 11 were put and carried.

15th December 1959]

Clause 12.

MR. SPEAKER : The motion is :

"That clause 12 do stand part of the Bill."

SRI A. GOVINDASAMY : ஹெட்கான்ஸ்டேபில் அரெஸ்ட் செய்யலாம் என்று இருக்கிறது. 'அரெஸ்டு' என்பதற்குப் பதிலாக 'சார்ஜ்' என்ற திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI S. LAZAR : For clause 12, I heard the Hon. Minister giving some explanation. Clause 12 reads as follows : "Whoever throws any rubbish into any park, . . . " I am sure that rubbish include waste paper, not necessarily easing out or any such thing. Even a waste paper ball will be a rubbish, and this comes under the provision of clause 12. As was pointed out by Sri A. Govindasamy even a Head Constable can immediately arrest a person without warrant for doing any of these things. Even throwing a bit of paper according to him is rubbish but according to others it may not be. Though the Head Constable may, think a piece of paper, waste paper, which may be useless for him, if we throw it in the Park, we will be committing an offence punishable under clause 12. The Hon. Minister was saying after all the maximum punishment is 6 months. We have seen Magistrates imposing even the maximum punishments for the offences. Therefore I am narrating an extreme case where a man just throwing a paper into the park is liable to be punished with imprisonment upto 6 months as the clause stands now. This further provision under sub-clause (2) that even the Head Constable can arrest without a warrant is too much. I can understand the arrest with a warrant. If a Police Officer, even a Head Constable makes up his mind to punish or annoy a particular individual, it may be even a Member of this House, well he can immediately take him into custody. That is what I was trying to point out.

* **SRI S. NAGARAJA MONIGAR :** ஸார், இம்மாதிரியான சட்டத்தை நாம் கொண்டுவரும்பொழுது இரண்டில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். நம் நாட்டிற்கு இது கொஞ்ச காலத்திற்கு உகந்தது அல்ல. இதை கொஞ்ச காலத்திற்கு ஒத்திவைக்க வேண்டுமென்று சொன்னால், ஒத்திவைக்கலாம். இதை மனதில் கொண்டுதான் கார்ப்பரேஷன், முனிசிபாலிடி இவைகளில் மாத்திரம்தான் இப்பொழுது இது அமுலுக்குக் கொண்டுவரப்படுகிறது. பிற்பாடு இது சரிப்படுமா, சரிப்படாதா என்பதைப் போகப்போகப் பார்த்து கெஜட் நோட்டிபிகேஷன் மூலம் மற்ற இடங்களுக்கு விஸ்தரித்துக் கொள்ளலாம் என்றுதான் அரசாங்கம் கருதி, இம்மாதிரி மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது என்று நாம் கொள்ளவேண்டியிருக்கிறது. அப்படிக் கொண்டு வந்த பிறகு ஒரு பூங்காவில் ஒரு காகிதத் துண்டு போடுவது குற்றம் ஆகிறது, ஒரு ஹெட்கான்ஸ்டேபிளுக்கு அரெஸ்டு செய்யக்கூடிய அளவுக்கு அதிகாரம் இருப்பதினால் சட்டசபை அங்கத்தினராக இருந்தாலும்

அவரை அரெஸ்டு செய்து விடுவார் என்று சொன்னதானது எனக்கு அவ்வளவு பொறுத்தமாகப்படவில்லை. இம்மாதிரி பூங்காவிலே போய் தெரிந்தோ, தெரியாமலோ, ஒரு பீடித் துண்டையோ, சிகரட் கேசையோ ஒவ்வொருவராக போட்டு விடுகிறார்கள். கிராமங்களிலே மக்களெல்லாம் எப்படியும் இருக்கலாம். அவர்களைபற்றி நாம் இப்போதைக்கு அக்கரை கொள்ளவில்லை.

மற்றொரு விஷயம். மேல் சபையிலும், இந்த சபையிலும், எதிர் கட்சித் தலைவர்கள் இம்மாதிரி மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும் விவாதத்தை எழுப்பியிருக்கிறார்கள் என்றும் மகிழ்ச்சியையும், ஒருவித சந்தோஷத்தையும் தெரிவித்தார்கள். நகர மக்கள் பற்றியும், பூங்காக்கள் பற்றியும், இப்பொழுது நாம் பாதுகாக்க வேண்டும் என்று செய்கிறோம். மக்கள் மறந்து கண்ட இடங்களில் குப்பைகளைப் போடுகிறதனால், அசிங்கம் எற்படுகிறது. நகர மக்கள் அழகாக, ஆடம்பரமாக வாழவேண்டும் என்றும், நகரப் புறங்களில்தான் இம்மாதிரி முதலில் கொண்டு வரவேண்டும் என்றும் செய்யப் படுகிறது. ஒரு ஊசியையோ, கல்லையோ கண்ட இடத்தில் போட்டுவிட்டால், குழந்தைகளுக்குக் காலில் குத்தி அவதி உண்டாகும். ஆகவே, இம்மாதிரி சட்டம் செய்வது மிகவும் பொருத்தமானது என்று அபிப்பிராயம் சொல்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: In view of the elaborate explanation given by some hon. Members from the other side I accept the view that sub-clause (2) may be deleted. I may be permitted to mive an amendment for the deletion of sub-clause (2).

I move—

'that in clause 12: (i) sub-clause (2) be deleted; and (ii) in sub-clause (1), the brackets and figure '(1)' be omitted."

The amendments were duly seconded.

MR. SPEAKER: The question is—

"that in clause 12: (i) sub-clause (2) be deleted; and (ii) in sub-clause (1) the brackets and figure '(1)' be omitted."

The amendments were put and carried.

Clause 12 as amended was put and carried.

Clauses 13 and 14 were put and carried.

The Schedule was put and carried.

The preamble and clause 1 were put and carried.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker sir, I move—

'that the Madras Preservation of Parks, Play-Fields and Open Spaces Bill, 1958 (L.C. Bill No. 3 of 1958) as amended be passed'.

15th December 1959][Sri V. K. Ramaswamy Mudaliyar]

Mr. SPEAKER : The question is—

'that the Madras Preservation of Parks, Play-Fields and Open Spaces Bill, 1958) L.C. Bill No. 3 of 1958) as amended be passed'.

The motion was put and carried and the Bill as amended was passed.

Mr. SPEAKER : The Hon. Member Sri N. K. Palanisami is not in his place. It is deemed he is not pressing his Bill.

We will take up the next non-official Bill.

(2) THE MADRAS "SWAYAMARIYATHAI" MARRIAGES VALIDATION BILL, 1959.

Sri S. M. ANNAMALAI : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras "Swayamariyathai" Marriages Validation Bill, 1959.

Mr. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras 'Swayamariyathai' Marriages Validation Bill, 1959".

The motion was put and carried and leave was granted.

Sri S. M. ANNAMALAI : Sir, I introduce the Bill.

Mr. SPEAKER : The Bill is introduced.

B. RESOLUTIONS.

Mr. SPEAKER : According to the Agenda before me, the Resolution standing in the name of hon. Member Sri K. Anbazhagan has priority. I will therefore call upon him to move the Resolution.

UPWARD TREND IN PRICES OF FOODGRAINS AND OTHER ESSENTIAL ARTICLES.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் இந்த அவையின்கண் முன் மொழிகிறேன் :—

"உணவுத் தானியங்கள், இதர அத்தியாவசியமான பொருள்கள் விலையேற்றத்தைத் தடுக்க அரசாங்கத்தார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் தோல்வியுற்றன வென்றும், இச்சபை கருதுகிறது. எனவே, உணவு தானியங்கள் இதர அத்தியாவசியப் பொருள்களில் வியாபாரம் செய்பவர்கள் தமது ஆதாயத்துக் காகச் செய்யும் காரியங்களைத் தடுக்கவும், பொதுமக்களுக்கு உணவு தானியங்கள் நியாயமான விலைகளில் கிடைக்கச் செய்ய வும், அதே சமயம் விவசாயிகளுக்கு நியாயமான விலை நிச்சய மாகக் கிடைக்கச் செய்யவும் சித்திகரமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு இச்சபை அரசாங்கத்தாருக்கு சிபாரிசு செய்கிறது."

[15th December 1959

Sri P. U. SHANMUGAM : I second the resolution, Sir.

Mr. SPEAKER : The hon. Member Sri Kalyanasundaram who has given notice of an amendment is not in his place. Therefore amendment is deemed not moved. The resolution is before the House for discussion.

Sri P. S. CHINNADURAI : I have also given notice of an amendment Sir.

Mr. SPEAKER : There is no other amendment before me, I will have it examined. (After a pause) I understand the hon. Member has given it now. How does he expect it to be circulated to Members so soon?

The Hon. Sri C. SUBRAMANIAM : We are taking up the Resolution without sufficient notice. Hon. Member should have some time to give amendments. I would rather request the Hon. Speaker to give some time to hon. Members to move amendments because the main resolution itself was given only yesterday and by agreement we are bringing the resolution before the House to-day. If any hon. Member wants to move an amendment they must be given some time.

Sri P. S. CHINNADURAI : I have given the amendment already to the Secretary.

Mr. SPEAKER : I am not objecting to it. But the Hon. Leader of the House is placing the Speaker in an embarrassing position. Today is a non-official day. Instead of coming to an agreement before hand the Government and the opposition decide and come before me with this resolution this morning. There is not enough time to receive amendments and circulate them to the House and yet you now complain that enough time has not been given for moving amendments. I am asking both sides of the House, is it fair to the Speaker? It is very unfair. The Speaker is not aware of the agreement between the Government and the Opposition as to what exactly is the resolution that they are going to sponsor. I got notice of it this morning. I have not been given sufficient time to receive and circulate amendments. I have only one amendment before me. If I do not give time the Hon. Leader of the House blames me. The whole thing is a vicious circle.

The Hon. Sri C. SUBRAMANIAM : It is not that we are blaming you. Because of the agreement, we are bringing forward the resolution which did not have sufficient notice. That is why we request you to give time for giving notice of amendments. I may have information about it and some hon. Members might have information about it. But others were completely ignorant about it. That is why we request that sufficient time should be given to the hon. Members to give notice of amendments if they want. I may repeat it is not a question of blaming you.

15th December 1959]

MR. SPEAKER : Well, I have no objection to that.

SRI M. KALYANASUNDARAM : Sir, regarding my amendment, I am sorry that I was not in my seat when the Chair called me. I may be permitted to move my amendment.

MR. SPEAKER : I hope the House gives leave to the hon. Member, Sri Kalyanasundaram, to move his amendment, now

SEVERAL HON. MEMBERS : Yes, Sir.

MR. SPEAKER : The House gives leave and the hon. Member can move his amendment.

SRI M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir, I move the following amendment :—

Add at the end the following :—

" In order to achieve the above objective, this House recommends that the Government be pleased to take the following measures :—

(1) to purchase at fixed prices paddy from the production on the lands of land-holders owning more than ten acres of paddy lands, by means of a graduated scale, thus leaving the small land-holders free from any control. Religious institutions should be treated as land-holders for the purpose of levy;

(2) to build a buffer stock both from local purchases and by securing two lakh tons of rice from the Central Pool;

(3) to open 1,000 more Fair Price Shops and ensure supply of at least 50 per cent of the requirements of population in cities and major Panchayat towns, at a rate of not more than 75 nP. per Madras measure, by subsidising loss if any;

(4) to fix a Fair Price for the paddy;

(5) to take stern and deterrent action against those who indulge in hoarding and profiteering in food-grains and other essential commodities;

(6) to take more effective measure to help the agriculturists to increase production, by extending credit facilities and ensuring adequate supply of fertilisers, insecticides, and other needs at controlled prices, and subsidised prices, wherever necessary."

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I second it.

SRI S. LAZAR : Sir, are we to understand that the Resolution itself has been moved without the knowledge of the Chair? Further, I want to make just one submission. As per the agenda given to us, certain other resolutions are given notice of and we are told that it has been done as per the ballot. But all of a sudden we have been circulated—I think it was last night—certain

[Sri S. Lazar] [15th December 1959

other resolution which is to be taken up today and most of us were taken unawares. May I request the Chair that at least in future when such a revoluntionary change is made at least those resolutions which have already been ballotted and included in the Agenda should also find a place in the Agenda because some of us have come prepared to speak on some other Resolutions but to-day we find that some other resolution has been brought forward before this House.

Mr. SPEAKER : Rule 145 of the Assembly Rules says—

'A member who wishes to move a resolution shall give fifteen clear days' notice of his intention to move the resolution and shall, together with the notice submit the text of the resolution which he wishes to move . . .'

This is generally what is done but the proviso to this Rule also says—

'Provided that the Speaker, with the consent of the Minister in charge of the department concerned, may allow a resolution to be entered on the list of business with shorter notice than fifteen days and without the procedure of a ballot under rule 25 and also fix this order of precedence in such list.'

Now it is under this proviso that this Resolution has come up before this House.

The Hon. Sri C. SUBRAMANIAM : It contemplates at least shorter notice. The hon. Member's complaint is that no notice has been given at all.

Mr. SPEAKER : Therefore, the Chair has to give permission to move this Resolution but the Chair got notice of this agreement only this morning and I have permitted it under the proviso to Rule 145. Having done that, hon. Members should have given notice of amendments earlier and not now. Anyhow, this shall not be a precedent and I appeal to hon. Members to give sufficient notice of their amendments in future. The hon. Member, Sri P. S. Chinnadurai, can now move his amendment.

Sri P. S. CHINNADURAI : Mr. Speaker, Sir, I move the following amendment :—

Add at the end the following :—

"This House, therefore recommends that the Government be pleased to take the following measures :—

(1) securing from the Union Government a supply of two and a half lakh tons of rice;

(2) augmenting the above supply by purchasing one lakh tons of rice inside the State;

(3) opening of at least 1,000 more Fair Price Shops before the end of this year, and continuing the Fair Price Shops in the deficit areas in the State even after the next harvest;

15th December 1959] [Sri P. S. Chinnadurai]

(4) distributing rice through Fair Price Shops on the basis of family cards and at a price of 75 nP. per Madras Measure;

(5) equitable distribution of sugar, without discrimination between urban and rural areas;

(6) fixation of remunerative price for paddy;

(7) fixation of fair prices for other articles of daily consumption like tamarind, chillies, firewood, charcoal, etc.;

(8) taking stern and deterrent action against those who indulge in hoarding, profiteering or black-marketing in foodgrains or in other articles of daily consumption; and

(9) ensuring to the agriculturists adequate and easy supply of fertilisers, insecticides and agricultural implements at controlled prices.''

The amendment was duly seconded.

MR. SPEAKER: Now the Resolution and the amendments are before the House for discussion.

SRI K. ANBAZHAGAN: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, உணவு பிரச்னையைப் பொறுத்து இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் நான் முன்மொழிகிறேன். இதன் மூலம் அரசாங்கத்தைக் கண்டிக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் அல்ல. இன்றைக்கு உணவு நிலைமை எந்த அடிப்படையில் இருக்கிறது, மிக மிக சிக்கலான ஒரு சூழ் நிலையில். அதைப்பற்றி அரசாங்கத்திற்கு அறிவுறுத்த வேண்டுமென்ற நிலையில் தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். உண்மையாகவே உணவுப் பிரச்னையைக் குறித்து வாதம் இந்த சட்ட மன்றத்தில் 1957-ம் ஆண்டு, செப்டம்பர் என்று கருதுகிறேன், அது முதற்கொண்டு தொடர்ந்து நாலைந்து முறை நடைபெற்று வருகிறது. அதேபோல் வரவு செலவு திட்டம் சம்பந்தமான விவாதத்தின் போதும் இன்னும் பல விதமான நேரத்திலும், கவர்னர் பெருமான் உரையின் மீது விவாதிக்கும்போதும் இதைப்பற்றி விவாதிக்கப்படுகிறது. ஒவ்வொரு நேரத்திலும் இந்த உணவு பிரச்னையைப்பற்றி விவாதிக்கும்போதும், முக்கியமாக எதிர் கட்சியினரும், ஆளும் கட்சியில் பல அங்கத்தினர்களும் இதைப்பற்றி எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். இந்த சட்ட மன்றத்தில் உறுப்பினர் ஆன காலம் முதலாக ஏறத்தாழ இரண்டே முக்கால் ஆண்டுகாலமாக இந்தப் பிரச்னையைப்பற்றி திரும்பத் திரும்ப பேசி பல கோணங்களில் இதை எப்படியாவது தீர்க்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. இன்றைக்கும் இந்தப் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவையும் தெளிவான நிலைமையையும் ஏற்படுத்தவில்லை என்ற காரணத்தால்தான் இந்த அரசாங்கம் உடனடியாக தீவிரமாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டுமென்பதை வற்புறுத்துவதற்காக இத்தகைய தீர்மானத்தை நான் இங்கே தர நேர்ந்திருக்கிறது. உண்மையாகவே உணவு பொருள் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில் மக்களுடைய இன்றியமையாத

[Sri K. Anbazhagan] [15th December 1959

தேவை என்ற அடிப்படையை வைத்து அந்தத் தேவையை நிறைவேற்றுவதனுல்தான் இந்த ஜனநாயக சர்க்கார் நல்ல முறையில் இயங்குவதற்கு வழி ஏற்படும் என்ற காரணத்தால்தான் இந்த பிரச்னையை நான் வற்புறுத்துகிறேன். அரசாங்கம் இது சம்பந்தமாக இந்தப் பிரச்னையை சரியான முறையில் தீர்க்கவில்லை என்பதை எடுத்துக் காட்ட மட்டும் அல்ல. அரசாங்கத்தின் குற்றம் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்கு அல்ல, அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற சில கொள்கையில் இருக்கிற குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற ஆசையால் அல்ல, இந்தச் சிக்கலை எப்படியாவது தீர்த்து வைக்கவேண்டும் என்பதை மாற்றுக் கட்சிகள் எடுத்துச் சொல்வதன் மூலம் எப்படியாவது இப்பொழுதுள்ள அக்கரையை விட அதிகமாக அக்கரை செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையால்தான் உண்மையாகவே இன்றைய தினம் உணவு அமைச்சராக இருப்பவர் இந்த உணவு பிரச்னையைப்பற்றி இந்தச் சட்ட மன்றத்தில் இதற்கு முன்னதாக நாலைந்து முறை நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தியிருக்கிருர். அவர்கள் பேசுகிறபோதெல்லாம் உணவுச் சிக்கலைத் தீர்க்க ஒவ்வொரு முறையிலும் ஒவ்வொரு காரணத்தை எடுத்துக் காட்டியிருக்கிருர். ஒவ்வொரு நேரத்திலும் ஒரு விதமான காரணத்தை எடுத்துக்கூறியிருக்கிருர். அப்படி ஒவ்வொரு முறையும் ஒரு காரணத்தைக் காட்டி மாற்றுக்கட்சிகளை ஏமாற்றக் கூடிய அளவில் ஒவ்வொரு காரணத்தையும் எடுத்துக்காட்டியிருக்கிருர். எப்படியாவது உணவு பிரச்னையை அரசாங்கத்தார் தீர்த்து வைப்பார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டாலும் மறுமுறை வேறு ஒரு காரணத்தையும் காட்டி வந்திருக்கிருர். முதல் முறை 1957-ம் ஆண்டு பேசுகிற நேரத்தில் உணவு அமைச்சர் அவர்கள் இந்த ஸோனல் வட்டார அமைப்பு தமிழ் நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் உணவு கொடுப்பதற்கு அல்லது குறைந்த விலையில் உணவு கிடைக்கும்படி செய்வதற்கு இடையூருக இருக்கிறது என்ற காரணத்தை மட்டும்தான் தெரிவித்தார்கள். அதை அடியோடு கண்டிக்காவிட்டால் அப்பொழுது இருந்த நிலைமையை எடுத்துக் காட்டியும் ஏறத்தாழ மூன்று ஆண்டு காலமாக உணவு விலை ஏறிக்கொண்டேதான் இருந்திருக்கிறது. 1957-ம் ஆண்டிலிருந்து கேரளாவிற்குப் போகிற அரிசி ஏறத்தாழ 2½ லட்சம் டன் என்றும், நமக்குக் கிடைக்கும் அரிசி ஏறத்தாழ 39 ஆயிரம் டன் ஆகத்தான் இருந்திருக்கிறது என்ற கணக்கை எடுத்துக் காட்டி தெரிவித்தார்கள். அது எப்படி இருந்தாலும் இந்தப் பிரச்னையை எப்படியாவது சமாளிப்பதற்கு வழிவகை செய்யப்படும் என்றும் தெரிவித்திருக்கிருர்கள். மறுமுறை அவர் இந்தச் சட்ட மன்றத்தில் பேசுகிற நேரத்தில் உணவு பண்டப் பிரச்னைக்கு சிக்கல் ஏற்படுவதற்கும் காரணம் வணிகர்கள் செய்கிற தவறுகள் என்றும் அவர் தெரிவித்திருக்கிருர். இன்னொரு தடவை அவர் பேசும் போது ஸோனல் வட்டார அமைப்பு தடையாக இருக்கிறது என்று கருதவேண்டாம் அந்த வட்டார அமைப்பு இருப்பதால்தான் நமது டில்லி சர்க்காரிடமிருந்து நாம் உதவி பெறுவதற்கு வழியாக

15th December 1959] [Sri K. Anbazhagan]

இருக்கிறது என்று கருதுகிறோம் என்றும் தெரிவித்திருக்கிறார்.
நமது உணவு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையின் அடிப்
படையை ஆராய்கிற நேரத்தில் ஒரே ஒரு வாதம்தான் இதற்கு
முக்கியத்துவம் என்று எடுத்துச் சொல்வதாக இருந்தால் எதிர்
கட்சிகள் அந்தப் பிரச்னையை சமாளிப்பதற்கு துணையாக ஒரு
வழியில் தங்கள் கருத்தைச் சொல்வதற்கும், ஆளும் கட்சியினர்
அதை செயலாற்றுவதற்கும் வழி ஏற்படும். அப்படியின்றி
தங்களுடைய வாதத்தை மாற்றி மாற்றி ஒன்றையும் வற்புறுத்
தாமல் பேசுவதால் எதிர்க் கட்சிகளை ஒரு பக்கத்திலும் சிந்திக்க
விடாமல் தடுக்க முடியுமே தவிர, பிரச்னையைத் தீர்க்க சரியான
பரிகாரம் ஆகாது. வட்டார அமைப்பு பொறுத்த வரையில்
உண்மையாகவே ஒத்துழைப்பாக இருந்தால் அந்த வட்டார
அமைப்பை வரவேற்க விரும்புகிறேன். சென்னை மாநிலத்தின்
பக்கத்தில் இருக்கிற ஆந்தராவுடனும் அல்லது இன்னொரு பக்கத்
தில் இருக்கிற கர்நாடகத்துடனும் அல்லது கேரளாவுடனும் மாறு
பட்டு நிற்க வேண்டும், அல்லது அவர்களுடன் பகை உணர்ச்சி
கொள்ளவேண்டும் என்று கருத்துடையவன் அல்ல நான். ஆனால்
இதே முறையில் வட்டார அமைப்பிலுள்ள யாருக்கும் ஒரு மாகாண
தைச் சேர்ந்தவருக்கும் அடியோடு திருப்தி இல்லாமல் இருக்கு
மானால் அதனால் சிக்கல் ஏற்படுவதற்கு இடம் கொடுத்து விடக்
கூடாது என்று நான் கருதுகிறேன். இரு மாகாணங்களுக்கு
அதிருப்தி ஏற்படக்கூடிய அளவில் இந்த வட்டார அமைப்பு
இருந்தால் அந்த வட்டார அமைப்பு முறை கட்டாய முறையாக
ஆகும். ஆனால் இந்த வட்டார அமைப்பு ஒரு மாகாணம் வேண்
டாம் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது
தங்களுக்கு நன்மை அளிக்காது என்று சொன்னால் அதை ஏற்றுக்
கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக்கொள்ளாமல் இருந்தால்
அந்த வட்டார அமைப்பு கட்டாய முறையில் அமைப்பதாக ஆகும்.
ஆனால், உண்மையாகவே சென்னை மாகாணமோ அல்லது ஆந்திர
மாகாணமோ அந்த வட்டார அமைப்பு தேவையில்லை என்று
கருதினால் அதை ஏற்படுத்தக்கூடாது. ஆனால் இந்த வட்டார
அமைப்பை மத்திய சர்க்கார் வற்புறுத்துகிறார்கள் என்று நமது
உணவு அமைச்சர் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார். இப்படி
உணவு விலைவாசியின் உயர்வுக்கு காரணம் இந்த வட்டார
அமைப்பு மட்டுமல்ல. இந்த வட்டார அமைப்பை எடுத்துவிட
வேண்டும் என்று உத்தரவு போட வேண்டும் என்று மத்திய 11-00 a.m.
அரசாங்கத்திற்கு நாம் தெரிவிக்கிறோம். வட்டார அமைப்பை
ஏற்படுத்தி, வட்டாரத்திற்குள் இருக்கிற ஒரு மாநில வட்டாரத்தை
விட்டு வெளியே போய்விட வேண்டும் என்று கோருவதற்கு
உரிமை கிடையாது என்று சொல்லுகிறபோது, வட்டாரத்திற்குள்
ளேயே இருந்து தங்களது உணவுப் பிரச்னைகளை எல்லாம் தீர்த்துக்
கொண்டுவிடவேண்டும் என்று வற்புறுத்துகிறபோது இந்த
வட்டாரத்தில் இருந்து அரிசி ஏற்றுமதி அளிப்பதற்குத் தானே
உரிமை வழங்குமானால் இந்த வட்டார அமைப்புக்கு என்ன
பெருமை இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

வட்டார அமைப்பை வற்புறுத்தி டெல்லி சர்க்கார் ஏற்படுத்தினாலும், அதைச் சென்னை சர்க்கார் ஏற்றுக்கொண்டு தங்களுடைய சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்கு உரிமை இருக்குமானால் அப்போதுதான் வட்டார அமைப்புக்குப் பெருமை தந்ததாகும். அந்த வட்டார அமைப்புக்குப் பெருமை தருவதாக இருந்தால் வட்டார கவுன்ஸில் கூடித்தான் தங்கள் வட்டாரத்தின் ஏற்றுமதி இறக்குமதியைப்பற்றித் தீர்மானிக்கவேண்டும் என்கிற உரிமையை அளிக்கவேண்டும். அதுவும் உணவுப் பொருள் சம்பந்தப் பட்டவரை—வெளியில் இருந்து எவ்வளவு உணவு தானியம் வந்தாகவேண்டும். இங்கிருந்து எவ்வளவு அனுப்பி வைக்கலாம் என்பது போன்ற இந்த விஷயங்களை நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள், அல்லது ஆந்திர உணவு அமைச்சர் அவர்கள் அல்லது நான்கு மாகாணத்தையும் சேர்ந்த அமைச்சர் அவர்கள் தான் தீர்மானிக்க உரிமை இருக்கவேண்டுமே தவிர டெல்லி சர்க்காருக்கு இருக்கக் கூடாது. வட்டார கவுன்சில் என்று ஏற்படுத்துகிற வரையில் டெல்லி சர்க்காரிடம் அந்த உரிமைகள் இருந்தாலும், வட்டார கவுன்சில் என்று அமைத்துவிட்ட பின்னல் முழு அதிகாரமும் அந்த வட்டார கவுன்சிலினிடத்திலேயே ஒப்படைக்கப்பட்டாக வேண்டும்.

The Hon. Sri C. SUBRAMANIAM: வட்டார கவுன்சில் என்று இப்போது ஒன்றும் இல்லை. அப்படி இருப்பதாக நினைக்கக் கூடாது.

Sri K. ANBAZHAGAN: நம்முடைய வட்டாரத்தில் இருந்து அரிசி வெளியில் போகவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. சில நாட்களுக்கு முன்பாகக் கேட்ட கேள்வி ஒன்றுக்குக் கூட ஆந்திராவில் இருந்து வெளியே அரிசி போவதாக இருந்தால் மத்திய சர்க்காரின் அனுமதியைப் பெற்றுத்தான் போகும் என்று அவர் தெரிவித்திருக்கிறார். வட்டார கவுன்சில் என்று ஏற்படுத்தி அதற்குத்தான் நீங்கள் இருக்கவேண்டும் என்று நம்மை வற்புறுத்துகிறபோது, நம்முடைய உணவுப் பிரச்னையை நாமே தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகிற போது இங்கிருந்து வெளியே உணவு தானியம் போவதற்கு மத்திய அரசாங்கத்தார் உத்தரவிடுகிறார்கள். இந்த இரண்டுக்கும் இடையே உள்ள வேற்றுமை இந்தப் பிரச்னையில் அதிக சிக்கலை உண்டாக்குகிறது, இதை நிரந்தரமானதொரு பிரச்னையாகவும் ஆக்கிவிடுகிறது. வட்டாரத்தை அமைத்தால் வட்டாரக் குழுவினருக்கு முழு அதிகாரமும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட குழு இல்லையென்றால் அதை அமைக்கவேண்டும். அதனிடத்தில் முழு அதிகாரமும் ஒப்படைக்கவேண்டும். ஆனல் இன்றையதினம் வட்டார அமைப்பை திணித்து, வட்டார அமைப்பை மாநில சர்க்கார்கள் நடத்துகிற நேரத்தில் மாநில சர்க்கார்களின் உரிமை எந்த அளவுக்குப் பறி போகிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

15th December 1959] [Sri K. Anbazhagan]

உண்மையாகவே இன்றையதினம் உணவுப் பிரச்னையைப் பொறுத்த முதல் கடமை மாநிலங்களுக்குத்தான் இருக்கிறது. இரண்டாவது தான் மத்திய சர்க்காரின் கடமை. இரண்டாவது கடமையைப் பெற்றிருக்கக்கூடிய மத்திய சர்க்கார், முதல் கடமையைப் பெற்றிருக்கக்கூடிய மாநில சர்க்கார்கள் தங்கள் கடமையைச் சரியான முறையில் நிறைவேற்ற முடியாத அளவுக்கு இன்றையதினம் தலையிடுகிறார்கள். அவர்களுடைய தலையீட்டினால் தான் பிரச்னை மிகுந்த அளவு பாதிக்கப்படுகிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய சர்க்காரின் அதிகாரம் இன்றை தினம் பல துறைகளில் வளர்ந்து போகிறது போல, மாநில சர்க்காரின் கடமையாக இருக்கிற விஷயத்தில்கூட, அவர்கள் செய்ய வேண்டிய, செய்ய விரும்புகிற நல்ல முறைகளில் கூடத் தலையிடுவது அதிகமாக வளர்ந்துவிட்டது.

உணவுப் பண்டத்தைப் பொறுத்தவரையில் அது மக்களின் முதல் தேவை என்ற காரணத்தினால், அந்த முதல் தேவையைப் பூர்த்தி செய்வது மாநிலத்தில் உள்ளவர்களின் முதல் கடமை என்கிற காரணத்தினால் அந்தப் பிரச்சனையில் உள்ள கஷ்ட நஷ்டம் அத்தனையும் மாநில அரசாங்கங்களுக்குத்தான் தெரியும். அப்படி இருக்க மத்திய சர்க்காரின் தலையீடு இந்தப் பிரச்சனையில் அதிக மாக இருக்கிற காரணத்தினால்—ப்ளக்சுவேஷன்—விலைவாசிகளின் ஏற்றத்தாழ்வு வளர்ந்துகொண்டே போகிற காரணத்தினால் இந்தப் பிரச்சனை சமயத்திற்கு சமயம் சிக்கல் நிறைந்ததாகப் போய்க் கொண்டிருக்கிறது. உடனடியாக இப்பிரச்சனையை கவனிக்க வேண்டியவர்கள் மாநில அரசாங்கத்தார்கள்தானே தவிர மத்திய அரசாங்கத்தார் அல்ல. மத்திய சர்க்காரில் "உணவு அமைச்சர்" என்று தனியாக ஒரு அமைச்சர் இருக்கவேண்டியது அவசியமே இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. அண்ணா அவர்கள் இதைச் சட்ட மன்றத்திலேயே குறிப்பாக எழுப்பியிருக் கிறார்கள். ஆக இன்றைக்கு மத்திய அரசாங்கத்தில் உணவு அமைச்சர் அவர்கள் பேருக்கு ஒரு அமைச்சராக இருந்தாலும் மாநில அரசாங்கங்கள் உணவுப் பிரச்சனையைத் தாங்களே தீர்த்துக்கொள்ளட்டும் என்று தலையிடாமல் இருந்தால் ஒருவகை யில் நமக்கு அதனால் இடையூறு இல்லாது போகும். அப்படி யின்றி பலவகையிலும் அவர்களது குறிக்கீடு இருப்பதன் காரண மாக இந்தப் பிரச்னை மிகுந்த சிக்கல் உள்ளதாக நாளுக்குநாள் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, நமது உணவு அமைச்சர் அவர்கள் இந்த அவையி லேயே முன்பு ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். "சென்னைக்கு அப்பால் உணவு தான்யம் செல்லக்கூடாது என்பது முக்கியமான ஏற்பாடு. அது இன்றையதினம் அனுசரிக்கப் பட்டு வருகிறது" என்று குறிப்பிட்டார்கள். ஆனால், ஆந்திராவில் இருந்து வடக்கே அரிசி போகிறதே, அதைத் தடுக்கக் கூடாதா என்றதற்கு "அந்த உரிமை எங்களுக்கு இல்லை" என்று தெரிவிக்

கிறார். வட்டார அமைப்பு முறை இருக்கிற வரையிலும் வட்டார அமைப்புக்கே எல்லாவிதமான அதிகாரமும் இருக்கவேண்டும் என்பதை தயவுசெய்து வற்புறுத்தி பூர்ண அதிகாரத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள். வட்டார அமைப்பை வைத்துக்கொள்ள நீங்கள் விரும்பவில்லையென்றால் அதை எடுத்துவிட வேண்டும் என்று வற்புறுத்துங்கள். நாங்கள் தனியாகத்தான் இருப்போம், பிற ராஜ்யங்களோடு இணைக்கப்படுவதை ஒப்பமாட்டோம். நாங்கள் விரும்பினால் எங்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களை பிறரிடத்தில் இருந்து கோரிப் பெறுவதற்கும், பிறர் கோரும் போது பிறருக்குக் கொடுத்து உதவுவதற்கும் எங்களுக்குப் பூரண அதிகாரம் வேண்டும் என்று வற்புறுத்திப் பெறுங்கள். சில நாட்களுக்கு முன்பு வரையில் இதே கருத்தைத்தான் அமைச்சர் அவையைச் சேர்ந்தவர்கள் வெளியில் தெரிவித்திருக்கிறார்கள். "இந்த வட்டார அமைப்பு முறையை நாங்கள் எதிர்த்து மத்திய சர்க்காரிடம் தெரிவித்திருக்கிறோம். நிச்சயமாக மற்றவர்களும் இந்தக் கருத்தைத்தான் வற்புறுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்" என்று சொல்லி வந்தார்கள். வட்டார அமைப்பில் இருந்து வெளியேறுவதை மத்திய சர்க்கார் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்றால் நாங்கள் என்ன இங்கே உட்கார்ந்து கொண்டு ஆட்சி செலுத்துகிற அமைச்சர்களா என்று உணர்ச்சியோடு முதல் அமைச்சர் அவர்கள் ஓரிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பற்றி நான் கேள்விப்பட்ட நேரத்தில் உணவுப் பிரச்சனை இந்த நாட்டு மக்கள் எல்லோருடைய பிரச்சனையாகும் என்பதை உணர்ந்து நமது முதல் அமைச்சர் அவர்கள் இவ்வளவு தைரியமாக இருக்கிறார்கள் என்று கருதினேன். பிற்பாடு டெல்லி அமைச்சர் இங்கே வந்திருந்தபோது அவரோடு சந்தித்துப் பேசிய பின்னால் "இந்தப் பிரச்சனையைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்" என்று சொன்னதையும் கேட்டேன். பிறகு பரிசீலனை செய்து முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்று தெரிந்தது. இப்போது வட்டாரத்தைப் பிரிப்பதாக இல்லை. வடநாட்டிலும் கூட வட்டாரத்தை அமைக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் வட நாட்டில் வட்டாரத்தை ஏற்படுத்த எடுத்துக்கொள்ளும் முயற்சி தோல்வி ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த முயற்சி தோற்றுவிட்டால் வட்டார முறையையே எடுத்துவிடலாமா என்பது பரிசீலனை செய்யப்படும் என்று ஓரிடத்தில் உணவு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே எதிர்பார்த்தது வடநாட்டில் அமைக்க இருக்கிற வட்டார அமைப்பு முயற்சி பலவீனப்பட்டுவிடும் என்பது. அது பலவீனப்பட்டால் இதுவும் போய்விடலாம் என்கிற நம்பிக்கையில் தெரிவித்திருக்கிறார். இல்லையென்கிறபோது இப்போது வட்டார அமைப்பை ஒன்றும் பாதகமாகப் போகாது என்று நினைப்பதாகப் பேசுகிறார்.

மற்றொன்று, உணவுப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மத்திய சர்க்காரிடத்தில் இருந்து உணவு தானியம் பெற வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. இவர்கள் 2 லட்சம் டன் அரிசி நம்முடைய

15th December 1959] [Sri K. Anbazhagan]

மாநிலத்திற்குத் தேவையாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். நாம் அவர்களிடத்தில் கோரிய அந்த இரண்டு லட்சம் டன்னை யாவது இவர்கள் வற்புறுத்திப் பெற்றார்களா என்றால் அதில் நான்கில் ஒரு பங்கு, ஐந்தில் ஒரு பங்குகூடப் பெறவில்லை. அந்த இரண்டு லட்சம் டன் வந்திருக்குமானால் இந்த அளவு உணவு தானியத் தட்டுப்பாடு, விலையேற்றம் எல்லாம் கட்டுக்கு மீறிப் போகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இவர்கள் ப்ரொக்யூர்மென்டு 2 லட்சம் டன் செய்வோம் என்று தெரிவித்தார்கள். ஒரு லட்சத்து இருபத்து மூன்று ஆயிரம் டன் கொள்முதல் செய்யப்பட்டது. எந்தக் காரணத்தைக் கொண்டு அந்த அளவுக்கு மேல் கொள்முதல் தேவையில்லையென்று அரசாங்கத்தார் திடீரென்று நிறுத்திவிட்டார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. கொள்முதல் நிறுத்திவிட்டதற்குக் காரணம் உணவுப் பிரச்சனை தீர்ந்துவிட்டதா? விலைவாசிகள் குறைந்து, தேவைக்கு அதிகமாக உணவு தானியம் கையிருப்பில் இருக்கிறதா? எந்தவகையில் திருப்திகரமான சூழ்நிலை அமைந்தது? எந்தக் காரணத்தைக் கொண்டு கொள்முதல் நிறுத்தினார்கள் என்பதற்கு விளக்கம் கொடுக்கப்படவில்லை. அப்படிப் பட்டதொரு நிலைமை இருந்து அதன் காரணமாக கொள்முதலை நிறுத்தச் செய்தார்கள் என்றால் சரி. அப்படிச் செய்தார்கள் என்று சொல்வதற்கு இடம் இல்லை.

மத்திய சர்க்காரிடம் கோரியிருந்த தானியம் பூராவையும் வற்புறுத்திப் பெறவில்லை. இவர்கள் திட்டமிட்டிருந்தபடி கொள்முதல் முழுவதும் நடைபெறவில்லை. இடையிலும் நிறுத்தினார்கள்.

கொள்முதல் செய்த காலத்திலும் அது எவ்வாறு நடந்தது என்பது நமக்குத் தெரியும். அதிகாரிகள் கொள்முதல் செய்கிற போது இன்னார் இடத்தில் இருந்தெல்லாம் வாங்கக் கூடாது என்று செல்வாக்குள்ளவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். கொள்முதல் செய்கிற முறையில் மட்டும் பல குறைபாடுகள் நடக்க வில்லை. கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களை விநியோகம் செய்கிற முறையிலும் பல குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதை நான் சொல்வதற்குக் காரணம் கொள்முதல் கூடாது என்பதால் அல்ல. லெவி முறையை ஏற்படுத்தக் கூடாது என்றும் நான் சொல்ல வரவில்லை. உணவுப் பிரச்சனையை எந்த எந்த வகையில் எல்லாம் திருப்திகரமாகத் தீர்க்க முடியும் என்று மாற்றுக் கட்சியினர்களால் ஆலோசனை சொல்ல முடியும். ஆனால் ஆட்சி பீடத்தில் உள்ளவர்கள்தான் அதைச் சரியான முறையில் செயலாற்ற முற்படவேண்டும். தங்களுடைய நிர்வாக இயந்திரத்தின் குறைபாடு அவர்களுக்குத்தான் தெரியும் என்பதால் நான் இதைச் சொல்கிறேன். நிர்வாகத்தில் குறைபாடு ஏற்படாமல் எந்த எந்த வகையில் எந்த எந்த முறைப்படி திட்டமிட்டு நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்ற நுணுக்கமான அறிவு படைத்த அவர்கள் அதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் மேற்கொள்ள வேண்டும். அந்தக் காரணத்தினால்தான் மாற்றுக் கட்சியில் உள்ள

நாங்கள் பொதுவான கொள்கைகளை வற்புறுத்திக்கொண்டே வருகிறோம். இன்றைக்கு நிர்வாகத் துறையில் ஏற்பட்டு வருகின்ற குறைபாடுகள் எல்லாம் அவர்களுக்குத் தெரியாது என்று நான் கருதவில்லை. கூட்டுறவு பண்டகசாலையில் இருந்த ஒரு லட்சம் அல்லது இரண்டு லட்சம் தானியம் திடீரென்று காணுமல் போய் விட்டது. இவர்களது கொள்முதல் திட்டப்படி கொள்முதல் செய்யப்படுகிற தானியங்களின் நிலைமை இந்த அளவில் இருக்கு மானுல் பொதுமக்களுடைய மனதில் சர்க்கார் இந்தப் பிரச் சனையை செம்மையாக, ஒழுங்காகத் தீர்க்கும் என்கிற நம்பிக்கை ஏற்படுவதற்கு என்ன வழியிருக்கிறது என்று கேட்க விரும்பு கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கொள்முதல் திட்டம் இருக்கிறது. கொள்முதல் செய்யப்படுகிற தானியம் அவ்வாறு காணுமல் போகிறது என்று கனம் அங்கத்தினர் சொல்கிருரா என்று அறிய விரும்புகிறேன்.

SRI K. ANBAZHAGAN : கூட்டுறவு முறையில் சேமிக்கப்பட்ட தானியம், அந்தக் கூட்டுறவு கிடங்கில் இருந்து காணுமல் போய் விட்டது ஓர் ஆண்டு காலத்திற்கு முன்பாக. அதற்குக் காரணம் என்ன என்பதும் தெரிந்தது. தானியம் எங்கே போயிற்று என் பதும் தெரிந்தது. குறிப்பிட்ட கடைக்கு சப்ளை செய்ய வேண்டிய தற்குப் பதிலாக எவ்வாறு சப்ளை செய்யப்பட்டது என்பதும் தெரியவில்லை. இதே முறையில் கொள்முதல் செய்யப்படுகிற தானியம் ஆகாதபடி பார்த்துக்கொள்ள என்ன வழிவகை செய்யப் பட்டிருக்கிறது? விநியோகம் செய்யப்படுகிறபோது மிகவும் மட்ட மான தான்யம் கடைக்கு அளிக்கப்படுகிறது. சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் ப்ரொக்யூர்மெண்டு செய்யப்பட்டு விநியோ கிக்கப்படுகிற தானியம் மிகவும் மட்டரகமானதாக இருக்கிறது என்பது கடந்த பல மாதங்களாகவே பொது மக்களால் சொல்லப் பட்டு வருகிறது. அதை ஓரளவு அரசாங்கமும் ஆராய்ந்து பார்த் திருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த அரிசியைக் கொடுப்ப தற்குக் காரணமாக இருந்த கூட்டுறவு பண்டகசாலை ஐந்து மூட்டை கொடுத்துவிட்டு பத்து மூட்டை கொடுத்ததாகக் கணக்கு வைப்பதும், அவ்வாறு வைக்கப்பட்ட தானியம் அதற்குப் பின்னுல் கேரளாவிற்கு அனுப்பப்பட்டதும், ரயிலில் போய்க்கொண்டிருக்கிறபோதே அரசாங்க ஒற்றர்களுக்கு தெரிந்து, அவர்களும் நடவடிக்கை ஒன்றும் எடுக்க முடியாமல் போனதும்—இவை எல்லாம் அரசாங்கத்திற்குத் தெரி யாது என்று நான் நினைக்கமாட்டேன். இதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். குற்றம் குறை சொல்வது எதிர்க்கட்சியினர் வேலை என்று பொதுப் படையாக எதையும் சொல்லிவிடலாம்.

ஆனுல் பொது மக்களின் நன்மைக்காக கூட்டுறவு சொஸைட்டி கள் மூலம் ஒவ்வொரு நாளும் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் மூட்டைகள் விநியோகிக்கப்படுகிற இடத்தில், இப்படி விநியோ

கிக்கிற அரிசி தவறான வழியில் வெளியேறுகிறது என்று சொன்னால் அப்படி வெளியேற இடம் கொடுக்கக் கூடாது. இந்தக் குறைகளை நான் சொல்லக் காரணம், ப்ரொக்யூர்மென்ட் முறையா அல்லது லெவி முறையா என்று மாற்றுக் கட்சியினரைப் பார்த்துக் கேட்கிற அரசாங்கத்தார் குற்றங்குறைகள் இல்லாத முறையில் எப்படிச் செய்தால் பொது மக்கள் நன்மை அடைவார்களோ அந்த முறையை கையாளுங்கள் என்று எடுத்துச் சொல்வதற்காகத்தான். குற்றங்குறைகள் நடைபெறும்போது உணவுப் பிரச்னையைப் பொறுத்தமட்டில் உடனடியாக விசாரணை செய்ய வேண்டும். பல பெரிய செல்வர்கள், பெரிய நிலச்சுவாந்தார்கள் பல தவறுகள் செய்கிறார்கள். அவர்களை உடனடியாக கேட்கும் முறையில் அரசாங்க நிர்வாக இயந்திரம் இன்றையதினம் இயங்கவில்லை. எளிய மக்களைத்தான் விரட்ட முடிகிறது, ஆனால் செல்வந்தர்களை விரட்ட முடிவதில்லை. செல்வாக்கு பெற்றவர்களை விரட்ட முடிவதில்லை. இந்த நிலை மாற்றப்பட்ட வேண்டும். உணவுப் பிரச்னை, உயிர் பிரச்னையாகும். உணவின் பேரில் நடைபெறுகிற தவறுகள் எல்லாம் நல்லதொரு அரசாங்கத்திற்குக்கூட பழியை உண்டாக்கும். அந்தப் பழி வராதபடி தடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் பாரபட்சமற்ற முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கைகள் எடுக்க, நல்ல அரசாங்கம் என்று சொல்லிக்கொள்கிற இந்த அரசாங்கம், மக்களின் வாக்குகளை பெற்று வந்திருக்கும் இந்த அரசாங்கம், ஜனநாயக முறைப்படி இங்கு வந்திருக்கும் அரசாங்கம், எந்த முறையைக் கையாண்டாலும் சரி, உணவுப் பண்டங்களை சேகரிக்க கையாண்டாலும் சரி அல்லது அதை பாதுகாக்க கையாண்டாலும் சரி அதில் வருகிற குற்றங்குறைகளை உடனடியாக தவிர்க்க வேண்டும். கடுமையான சொற்களை நான் உபயோகிக்க வேண்டுமென்றால், பதுக்கல்காரர்களை தூக்குமேடையில் மாட்டுங்கள் என்றுகூட சொல்லலாம். ஆனால் அமைச்சர்கள் பதுக்கல்காரர்களின் மேல் கையைக்கூட வைக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். பின் அவர்களை எப்படி தூக்குமேடையில் ஏற்றுங்கள் என்று சொல்லமுடியும் ? அவர்களின் மேல் வழக்கு தொடர்ந்தால்தானே குற்றத்தை நிரூபிக்க முடியும். ஆக, நான் சொல்வது குற்றங்குறைகள் எங்கு நடந்தாலும் அவைகள் உடனடியாக தவிர்க்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மற்றொன்று, உணவு நியாயவிலைக் கடைகளில் கிடைப்பது என்றால், உணவு நியாயமான விலையில் கிடைப்பது என்று சொல்வது மட்டும் நியாயவிலைக் கடைகளுக்கு சிறப்பாகாது. நியாயவிலைக் கடைகளில் மக்கள் எவ்வளவு பேர்கள் வந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் அன்றையதினம் அரிசி கிடைக்க வாய்ப்பு இருக்க வேண்டும். ஐந்நூறு பேர்கள் க்யூவில் நின்றார்கள் என்றால் 200 பேர்களுக்கு அரிசி கொடுத்தவுடன் அரிசி தீர்ந்துவிட்டதென்று சொல்லி அரை மணி நேரம் அல்லது முக்கால் மணி நேரம் அரிசிக்காக நின்றவர்களுக்கு கொடுத்துவிட்டு 2 அல்லது 3 மணி நேரம் அரிசிக்காக க்யூவில் நின்றவர்களுக்கு அன்று அரிசி கிடைக்கவில்லை என்று சொன்னால், அது நியாயவிலைக் கடைகளுக்கு அழகாகாது. ஆகவே, நான்

[Sri K. Anbazhagan] [15th December 1959

வற்புறுத்திக் கேட்டுக்கொள்வேன், எல்லோருக்கும் நியாயவிலைக் கடைகளில் அரிசி கிடைப்பதற்கு வழி வகை காணவேண்டும். ஒரு நாளைக்கு இவ்வளவு அரிசி விநியோகிக்கிறது என்று சொல்லி 100 பேர்களுக்கு அரிசி கொடுத்துவிட்டு மீதியுள்ள 500 பேர்களுக்கு அரிசி இல்லை என்று சொல்வது வேதனை தரும் காரியமாகும். நியாயவிலைக் கடைகளில் அரிசி கிடைத்தால் வெளியே உள்ள வேறு கடைகளில் கிடைக்கும் அரிசியின் விலை குறையும். வெளியில் கிடைக்கக் கூடிய அரிசி நல்ல தரமாக இருப்பதால் அவர்களுக்கு விலை அதிகமாக கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வளர்ச்சியை இந்த நியாயவிலைக் கடை ஏற்பாடு கட்டுப்படுத்த வில்லை. ஆகவே, நியாயவிலைக் கடைகளில் கிடைக்கும் அரிசியின் தரத்தைப் பார்த்து அதன் விலையை கொஞ்சம் குறைத்துத் தருவ தாகயிருந்தால் வெளியிலே விற்கப்படும் அரிசியின் விலை இறங்கி வர முடியும். அரிசியின் விலை இறக்கம் பற்றி, 477 புள்ளி இருந்தது 474 புள்ளியாக வந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் மூன்று புள்ளி குறைந்திருப்பதை எடுத்துக் காட்டி மகிழ்ச்சி அடையலாம். ஆனால் கணக்கில் மூன்று புள்ளி குறைந்ததால் மக்கள் தங்கள் துன்பகரமான நிலையிலிருந்து மீட்கப்பட்டுவிட்டவர்களாக மாட்டார்கள். குறிப்பிடத்தக்க அளவிற்கு விலை குறைவு ஏற்பட வேண்டுமானால் நியாயவிலைக் கடைகளில் 14¾ அணு விற்கு விற்கப்படுகிறது 12 அணு அளவிற்கு வரவேண்டும். அப்படி வரும்போதுதான் வெளியில் உள்ள அரிசி நியாய மான விலைக்கு வரும். அரிசி விலையைக் குறையுங்கள் என்று கேட்கிறபோது விவசாயிகளுக்கு கிடைக்கிற வருமானம் குறைந்து போய் விடுமே, விவசாயிகள் இதனுல் பெரும் துன்பத்திற்கு ஆளாவார்களே, அதனுல் கிராம மக்கள் பாதிக்கப் படுவார்களே என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கக் கூடும். அப்படி மற்றவர்கள் இங்கு சொல்லியிருக்கிருர்கள். ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் முன்னுள் விவாதத்தில் விவசாய மக்களுக்கு கிடைக்கக் கூடியதில் எந்தக் குறைவும் ஏற்படக்கூடாது என்று வற்புறுத்தித் தெரிவித்தார்கள். கிராம மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்பதில் மாறுபட்டவன் அல்ல, நான். ஆனல் கிராம மக்களுக்கு நன்மை கிடைப்பதற்கு வேறு வழிவகைகள் அரசாங்கம் சிந்திக்க வேண்டும். உணவுப் பண்டங்களின் விலைகள் ஏறி ஏழை மக்கள் பாதிக்கப்பட்டால்தான் கிராம மக்கள் வாழ்க்கை நடத்த முடியும் என்ற நிலைமையை மாற்றுவதற்கான வழிவகைகள் காணவேண்டும். கிராமங்களில் குறைந்த நிலத்தை வைத்துக்கொண்டு விவசாயம் செய்கிறவர்கள், அல்லது வேறு நிலங்களில் வேலை செய்கிறவர்கள் நன்மை அடைய வேண்டு மென்ருல் அவர்களுக்கு அவசியமாக இருக்கும் அல்லது அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கக்கூடிய வேறு பொருள்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும். அவர்களுக்கு, எரு தேவைப்படுகிறது. பல எருக்களின் பெயர்கள் பட்டியலில் இருந்தாலும் அவர்களுக்கு ஒரு சில எருக்கள்கூட நல்ல முறையில் கிடைப்பதில்லை. அவர் களுக்கு அவைகள் நல்ல முறையில் கிடைக்க வசதி செய்வது

15th December 1959] [Sri K. Anbazhagan]

மட்டுமல்ல, அவைகள் குறைந்த விலைகளில் அவர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கிடையில் ப்ளாக்மார்க்கெட் நடக்கிறது. அதில் பல ஏமாற்றங்கள் நடக்கின்றன. அவைகள் தவிர்க்கப்பட வேண்டும். விவசாயக் கருவிகள் குறைந்த விலையில் கிடைப்பதற்கு வழிவகை செய்து தரவேண்டும். நல்ல விதைகள் நல்ல அளவிற்கு குறைந்த விலையில் அவர்களுக்கு கிடைக்கச் செய்யவேண்டும். ஆனால் விதைப் பண்ணைகள் 360 நடத்தப் போகிறோம் என்று ஆரம்பித்து 170 நடத்தி அதிலும் நஷ்டம் எவ்வளவு என்று கணக்கிட்டு இனி எப்பொழுது அவைகளுக்கு மூடு விழா என்று சொல்லாமல் இருக்கும் நிலையைத்தான் இன்று நாம் காண்கிறோம். முதலில் பெரிய திட்டம், அதை நிறைவேற்றியதில் அல்லது நிறைவேறிய அளவில் பல குறைகள், பல குற்றச் சாட்டுகள். இப்படிப்பட்ட நிலை தவிர்க்கப்பட்டாலொழிய பொது மக்களின் குறைகள் எப்படி நிவர்த்தியாகும்? விதைப் பண்ணைகள் பற்றி மட்டும் நான் சொல்ல வில்லை. இப்படிப்பட்ட குறைகள் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் சங்கிலி போல் வளர்ந்து கொண்டே போகிறது. எரு விநியோகிப்பதிலும் சரி, விவசாயக் கருவிகள் தருவதிலும் சரி, சில பல துணைக் கருவிகள் தேவைப் படும்போதும் சரி, விவசாயிகள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் இருப்பதால் அவர்கள் விவசாய உற்பத்தியில் உற்சாகமாக ஈடுபட முடியவில்லை. ஆக, விவசாயிகளுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களின் விலையும் குறைவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அமெரிக்கா செல்வம் கொழிக்கும் நாடு என்றிருந்த போதிலும், அங்குள்ள விவசாயிகளின் நிலையை எடுத்துப் பார்ப்போமேயானால், அங்குள்ள விவசாயிகளுக்கு இம்ப்ளிமென்ட்ஸ் வழங்க கூட்டுறவு சொஸைட்டிகள் வைத்திருக்கிறார்கள். கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் அவர்களுக்கு தேவையான எந்தப் பொருளும் கடனுக்குக்கூட கிடைக்கும், விலை மலிவாகவும் கிடைக்கும். இப்படிப்பட்ட பண்ணைகள் நமது கிராம மக்களுக்கு இன்றையதினம் இல்லை. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் வேறு வகையான சொஸைட்டிகள் இருக்கிறது. அதிலும் செல்வாக்கு பெற்றவர்கள் தான் உடனடியாக பலன் பெறுகிறார்கள். செல்வாக்கு இல்லாதவர்கள் பலன் பெறமுடியாது. நிலம் இல்லாத விவசாயிகள் அந்தப் பலனை பெற முடியாது, உடனடியாக. பண்ணையில் வேலை செய்பவர்களுக்கு கடன்கூட கிடைப்பதில்லை. விவசாயிகள் உற்பத்தி செய்வதற்கு என்ன செலவு செய்திருக்கிறார்களோ அதைவிட கூடுதல் தொகை அவர்களுக்கு கணிசமாக கிடைப்பதற்கு அரசாங்கம் உறுதிமொழி அளிக்கவேண்டும். இதே சட்டமன்றத்தில் மின்சாரத்தைப்பற்றி பேசும்போது மின்சாரம் வேறு பல காரியங்களுக்காக பயன்படுத்தப் படுவதைவிட உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, பயன்படுத்துவது வரவேற்கத்தக்கது என்று கூறியுள்ளேன். தண்ணீர் கிடைக்காவிட்டாலும் தண்ணீரிலிருந்து எடுக்கப்படுகிற மின்சாரம் விவசாயத்திற்காக குறைந்த கட்டணத்தில் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்றும் நான் ஏற்கனவே இந்த சட்டமன்றத்தில் கூறியுள்ளேன். விவசாயத்திற்

காக மின்சாரம் குறைந்த கட்டணத்தில் அளிக்கப்படுவதில்லை. மற்றவர்களுக்கு யூனிட் 4½ அணா என்றால், அல்லது 29 புதுக்காசு என்றால் விவசாயத்திற்காக கொடுக்கப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 14 புதுக்காசு என்று ஏன் கொடுக்கக்கூடாது? டீஸல் எண்ணைக்கு விற்பனை வரி போட்டபோது அந்த விற்பனை வரி நிச்சயமாக கிராமத்திலுள்ள விவசாய மக்களை பாதிக்கக் கூடாது, லாரி, பஸ்கள் போன்றவைகளுக்காக டீஸல் ஆயில் பயன் படுத்துகிறபோது அப்பொழுது எவ்வளவு வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள், ஆனால் கிராம மக்கள் விவசாயத்திற்காக தண்ணீர் இறைக்க அதைப் பயன்படுத்துகிறபோது டீஸல் எண்ணைக்கு இந்த வரியில் எந்தவிதமான ஏற்றமும் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் விவசாயத்திற் காக, நீர் பாய்ச்சுவதற்காக மோட்டார் வைக்க வேண்டுமானால் காரண்டி தர வேண்டியிருக்கிறது. ஆனால் வீடுகளில் விளக்கு போடுவதற்கு காரண்டி இல்லை. ஒருவேளை அதிகம் தேவைப் படுகிற . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM: விவசாயத்திற்கு கொடுக்கிற மின்சாரம் என்ன கட்டணத்திற்கு கொடுக்க வேண்டு மென்று சொல்கிறீர்கள். அதை நான் சரியாக கேட்கவில்லை.

SRI P. U. SHANMUGHAM: பர்ஸென்டேஜ் கணக்குத்தான் சொன்னார்கள்.

THE HON. SRI V. RAMAIAH: யூனிட் ஒன்றுக்கு 14 நயாபைசா வீதம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா?

SRI K. ANBAZHAGAN: அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னை யைப்பற்றி தெளிவாக புரிந்துகொள்ள விரும்பியதுபற்றி, எனது நன்றி. அன்பழகன் தவறு செய்து விடலாம், ஆனால் அமைச்சர் அவர்கள் தவறு செய்யாத அளவில் வல்லமை பெற்றவர்கள் என்று நான் நினைக்கிறேன்.

நான் சொல்லுகின்ற புள்ளிவிவரங்களின் இடுக்கல்களில் அமைச்சர் அவர்கள் நுழைந்து கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்கள் என்றால் அது பொதுமக்களின் முன்னால் பயன் அளிக்காது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நான் கொடுப்பது எனக்குத் தெரிந்தவரையுள்ள புள்ளிவிவரங்களை சொல்வேன், ஆனால் நான் புள்ளிவிவரங்களே சொல்லவேண்டிய தேவையில்லை. நான் சொல்லுகின்ற கருத்து, அரசாங்கம் எடுக் கின்ற நடவடிக்கைகள் எல்லாம் பொதுமக்களுக்கு திருப்தி யளிக்கக்கூடியதாக இல்லை என்பதுதான். மின்சாரத்துறையில் கிடைக்கின்ற வசதியை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் மின்சாரத்தில் பலவிதமான கஷ்ட நஷ்டங்கள் இருக்கின்றன என்று தெரிவிக்கின்றார்கள். அதிலும் முக்கியமாக—தஞ்சை மாவட்டம் போன்ற இடங்களில் வேண்டுமென்றால் இயற்கையாகவே நீர்வளமுள்ளதாக இருக்கலாம்

15th December 1959] [Sri K. Anbazhagan]

ஆனல் தென் ஆற்காடு, வட ஆற்காடு முதலிய மாவட்டங்களில் எல்லாம் மின்சாரம் போதிய அளவில் கொடுக்கப்படுவதில்லை. அதிலும் குறைந்த கட்டணத்தில் கிடைக்கவில்லை என்ற அளவில் அவர்கள் பெரும் துன்பமும் தொல்லையும் அனுபவித்து வருகிறார் கள். இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற முறைப்படி—மினிமம் கியாரண்டி—அதாவது மூன்று மாதம் அல்லது ஆறு மாதத்திற்கு சேர்த்து கொடுப்பது—என்கின்ற முறைகளினாலும் விவசாயி களுக்கு பலவித தொல்லைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் நான் ஏன் தெரிவிக்கிறேன் என்றால், விவசாயி களுக்கு வேண்டிய பொருட்களின் விலையை எல்லாம் குறைப் பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். அப்போதுதான் விவசாயிகள் உணவு உற்பத்தியில் அதிகமாக ஈடுபடுவதற்கு உற்சாகம் அளிப்பதாக இருக்கும். அதல்லாமல் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கவேண்டும் என்ற காரணத்தை காட்டி, உணவுப் பொருட்களின் விலை ஏறிக்கொண்டிருக்கட்டும், விவசாயி களல்லாதவர்கள் எல்லாம் பட்டினி கிடந்து எப்படிவேண்டு மானாலும் போகட்டும் என்கிற எண்ணத்தை இந்த அரசாங்கம் கொண்டிருக்குமானால், அது இந்த அரசாங்கத்திற்கு அழகல்ல என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு அதிகமான அளவில் லாபம் கிடைக்கவேண்டும் என்று இங்கு அடிக்கடி பேசப்படுவதின் காரண மாக இவ்விதம் அமைச்சர் அவர்கள் எண்ணக்கூடாது என்பதற் காகவே இதைச் சொல்லுகிறேன். உண்மையிலேயே விவசாயிகள் நல்ல முறையில் பாதுகாப்புப் பெற வேண்டுமென்றால், அந்தந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு என்னவெல்லாம் குறைகள் இருக்கின்றன என்பதை கணக்கிட்டுப் பார்த்து அவை களை தீர்ப்பதற்கு தகுந்த பரிசீலனை நடத்தவேண்டும். தஞ்சை மா வட்டத்தை எடுத்துக்கொண்டால், அது இயற்கையாகவே நீர்வள முள்ள பிரதேசமாக இருக்கிறது. அந்த மாவட்டத்தில் "போர்ட்" ஸ்தாபனத்தின் மூலம் உதவி கிடைக்கிறது என்று இருந்தால், அந்த பிரதேசம் வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று எண்ணி அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதைப்பற்றி கவர்னர் அவர்களும் தனது உரையில் குறிப்பிட் டிருக்கிறார்கள். அதே நேரத்தில் நீர்ப்பாசன வசதி இல்லாத இடங்களில் எல்லாம் என்ன வழிவகைகள் செய்தால் நீர்பாசன வசதியை பெருக்க முடியும் என்பதைப்பற்றி அரசாங்கம் தீவிர மாக ஆலோசனை செய்யவேண்டும். அவ்விதம் இல்லாவிட்டால் நமது நோக்கங்கள் நிறைவேறாமல் போய்விடும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மற்றொன்றையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஏறத்தாழ மூன்று கோடி மக்கள் இருக்கின்றார்கள், இவர்களுக்கு வேண்டிய உணவுத் தேவை ஏறத்தாழ 32 லட்சம் டன் அல்லது 33 லட்சம் டன் என்று அடிக்கடி அமைச்சர் அவர்கள் இங்கு தெரிவிக்கின்றார்கள். இன்றையதினம் நம் நாட்டிலுள்ளவர்களுடைய பழக்க வழக்கங் களை எடுத்துப் பார்க்கும்போது அதிகமாக எல்லோரும் அரிசியை

[Sri K. Anbazhagan] [15th December 1959

பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய தேவையை எடுத்துக்கொண்டால், அரசாங்கம் கணக்கிட்டு தந்திருப்பதைவிட அதிகமான அளவிலேயே தேவைப்படும் என்று சொல்லலாம், அரிசி உணவையே அதிகமாக பழக்கமாக கொண்டிருக்கிறார்கள். இந்த முறையில் பார்த்தால் இன்னும் இரண்டு லட்சம் டன் அரிசி கூடுதலாகவே தேவைப்படும், அது மட்டுமல்ல, பாதுகாத்து வைக்கப்படும் இடங்களில் புழு, பூச்சி இவைகளின் இரையாகி போய்கொண்டிருக்கிற அளவையும் சேர்த்தால் உண்மையிலேயே இதைவிட கூடுதலாக தேவைப்படும். ஆகவே, இப்போது மதிப்பிட்டிருப்பதைவிட இன்னும் கணிசமான அளவிலேயே மதிப்பிட வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலைமையில் இன்னும் நமக்கு வேண்டியது ஒரு லட்சம் டன்தான், அது பருவ மழை சரியாக பெய்தால் கிடைத்துவிடும் என்று—ஏறத்தாழ ஜோஸ்யம் சொல்வது போல—சொல்லப்படுகிறது. இது உண்மையிலேயே மகிழ்ச்சியை தருவதாக இல்லை என்பதை நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, நமது தேவையை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். அதற்கேற்ற திட்டவட்டமான கொள்கையை அரசாங்கம் வகுக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய தேவையை நாம் சரியாக பூர்த்தி செய்துகொள்ள முடியும். அடுத்து நான் சொல்ல விரும்புவது, விலையேற்றத்தைப் பற்றி குறிப்பிடும்பொழுது, அரிசியின் விலை குறிப்பிடத்தகுந்த அளவுக்கு இல்லையென்றாலும் பொதுவாக விலை குறைந்து வருகிறது என்று அமைச்சர் அவர்கள் திருப்தி அடைகிறார்கள். அரிசியை மட்டும் நாம் உபயோகிப்பதில்லை. அதற்குத் துணைப் பொருட்களாக இருக்கக்கூடியவைகளையும் நாம் பார்க்கவேண்டும். நம் நாட்டிலுள்ளவர்களை எடுத்துக்கொண்டால், பரம்பரையாக முன் காலத்திலிருந்தே—வடநாட்டுக்காரர்களைப் போலல்லாமல்—அவர்களுக்கு வேண்டுமென்றால், கோதுமைக்கு சர்க்கரையும், நெய்யும், வெண்ணெயும் போதுமானதாக இருக்கலாம்—புளி, உப்பு, மிளகாய் போன்றவைகளைத்தான் துணைப்பொருட்களாக உபயோகித்து வந்திருக்கிறார்கள். எவ்வளவு வறுமையில் இருந்தாலும்கூட உப்பு, மிளகாய் இவைகள் இல்லாமல் காலந்தள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள் இந்நாட்டிலுள்ள மக்கள். இவற்றினுடைய விலையேற்றத்தைப்பற்றி இன்று நாட்டிலுள்ள மக்கள் எல்லாம் மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். ஏழை மக்கள் எல்லாம் இந்த விலையேற்றத்தின் காரணமாக மிகவும் கஷ்டப்பட்டு திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் போக்கினால் புளியின் விலை கூடினது மட்டுமல்ல, மக்களின் வயிற்றிலும் புளியை கரைக்கக்கூடிய அளவுக்கு நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது. புளியின் விலையேற்றத்தைப்பற்றி பலவிதமான காரணங்கள் சொல்லப்படுகின்றன, பரம்பரையாக புளியமரத்தை வெட்டி, விறகுக்கு உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதினால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது ஒரு பக்கத்தில், இன்னொரு பக்கத்தில் சிலரால் விசித்திரமான காரணமும் கூட சொல்லப்படுகிறது, புளியங்கறியைத்தான் அக்ரகாரத்தில் அதிக

15th December 1959] [Sri K. Anbazhagan]

மாக உபயோகித்து வருகிறார்கள், அதன் காரணமாகத்தான் புளி விலை ஏறிவிட்டது என்று சொல்லப்படுகிறது. உண்மையிலேயே பரம்பரையாக—15 அல்லது 20 வருடங்களாக புளியமரத்தை வெட்டித்தான் விறகாக உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த சுயராஜ்ய சர்க்கார் ஏற்பட்டு, ஏறத்தாழ 12 வருடங்கள் ஆகின்றன, அப்போது எல்லாம் இதை தடுக்காமல் இந்தச் சர்க்கார் என்ன செய்தது என்பதுதான் நமக்குத் தெரியவில்லை. இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கும் நேரத்தில் திடீரென்று புளியின் விலை கூடுவதற்கு என்ன காரணம் என்பதைப் பார்த்தால், புளி தமிழ் நாட்டிலிருந்து வெளியே ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கமுடியும். தமிழ் நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கின்ற நிலையை எடுத்துக்கொண்டால் கால் அணா அல்லது அரை அணாவுக்கு புளி வாங்கி தங்களது வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த நிலைமை மாறி ஒரு அணாவுக்கு புளி வாங்கினால் யானம் கழுவுவதற்குக்கூட போதவில்லை என்று குறைபடக்கூடிய அளவுக்கு புளியின் விலை ஏறியிருக்கிறது என்றால், அதை போக்குவதற்கு இந்த அரசாங்கம் இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், புளி வேண்டாம் எலுமிச்சம் பழத்தையே உபயோகித்துக்கொள்ளுங்கள் என்று அரசாங்கம் சொல்ல நினைக்கிறதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். நான் சொல்லுகின்றபடி தமிழ் நாட்டிலிருந்து புளி ஏற்றுமதியாகி வெளியே போய்க்கொண்டிருக்கிறது என்றால் அதை நிறுத்துவதற்கு இந்த அரசாங்கம் உண்மையிலேயே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அல்லது இந்த அரசாங்கத்திற்கு அதற்கு போதிய அதிகாரம் இல்லையென்றால் மத்திய சர்க்காரிடம் இதைப்பற்றி வற்புறுத்தப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். நம் நாட்டிலிருந்து வெளியே போய்கொண்டிருக்கும் . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வெளிநாட்டுக்கு புளி ஏற்றுமதியாவது கிடையாது.

SRI K. ANBAZHAGAN : நான் வெளியே போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்வது, தமிழ் நாட்டிலிருந்து வெளியே போய்க்கொண்டிருக்கிறது என்பதுதான் . . .

MR. SPEAKER : I want to ask the House, its opinion as to whether it wants the discussion on this resolution to be finished to-day or whether it is prepared to continue the discussion on another day?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to submit that the discussion on this resolution may conclude to-ady. Because, Iw ould like to reply to the discussion to-day. Otherwise, the discussion will have to be postponed to the next non-official day and all the criticisms made now on the floor of the House will remain unanswered till we meet on the next non-official day to have a discussion on the resolution. Therefore,

I very strongly urge that we should conclude the debate on this resolution to-day and that I should be given an opportunity to reply to the debate.

Mr. SPEAKER : So, I take it that the desire of the House is to conclude discussion on this resolution to-day.

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes.

Mr. SPEAKER : In that case, how long will the Hon. Minister take to reply?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would like to have half an hour for reply, Sir.

Mr. SPEAKER : All right. I shall call the Hon. Minister at 1 o'clock to reply to the discussion. In my list, I have got a number of names of hon. Members who wish to take part in the discussion. So, I request hon. Member Sri Anbazhagan to finish his speech in another three minutes. I now fix a time-limit of 10 minutes for the succeeding speakers.

11-30 a.m. Sri K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் வெளியே போக வில்லை என்று சொல்லுகிறார்கள், நம் நாட்டை அடுத்து இருக்கும் மைரிசூரிலும், பெங்களூரிலும் இருக்கும் சேட்டுகள் எல்லாம் கிருஷ்ணகிரி, சேலம் போன்ற இடங்களிலிருந்து புளியை வாங்கிக் கொண்டு போய் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் எந்த நாட்டுக்கு அனுப்ப வைத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் சேர்த்து வைத்திருந்து விலை அதிகமான பிறகு விற்கலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ அதுவும் தெரியவில்லை. அப்போதுதான் நமக்கு அந்தப் புளி கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருக்கின்றேன். ஆனால் இன்றைக்கு புளியின் மீது ஏற்பட்டிருக்கின்ற விலையேற்றத்தை பார்த்தால், 1956-ல் 112 ரூபாயாக இருந்தது, 1957-ல் 125 ரூபாய் என்று உயர்ந்தது, 1958-ல் 130 ரூபாய் என்று உயர்ந்தது, 1959-ல் 214 ரூபாய் என்று உயர்ந்தது, சென்ற மாதத்தில் 380 ரூபாயி லிருந்து 400 ரூபாய் வரையிலும் விலை உயர்ந்திருக்கிறது. இவை யெல்லாம் என்னுடைய சொந்தக்கணக்கு அல்ல, வணிகர்களின் கணக்கு. புளியினுடைய விலையைப் போன்றுதான் மிளகாயி னுடைய விலையில் உயர்ந்து போய்க்கொண்டிருக்கிறது. 60 ரூபாயி லிருந்து 116 ரூபாய் என்ற அளவில் விலை உயர்ந்திருக்கிறது. இவையெல்லாம் துணைப்பொருள்கள், இவையெல்லாம் நமக்கு மிக மிக தேவையானது என்பதும் நம் அனைவருக்கும் தெரியும். அதே போன்றுதான் சர்க்கரையினுடைய வினியோகத்தை ஏற்றெடுத் துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் பாரி அன்ட் கோ-வி லிருந்து அரசாங்கம் வினியோகப் பொறுப்பை மேற்கொண்டது. அதிலும் கூட ஒரு ரூபாய் 62 காசு என்று இருந்தது, இப்போது ஒரு ரூபாய் 72 காசு என்ற அளவில் விலையேறியிருக்கிறது. இவ் விதம் விலைவாசி போய்க்கொண்டிருந்தால் பொதுமக்களுடைய

15th December 1959] [Sri K. Anbazhagan]

நிலைமை என்ன ? விவசாயிகளுக்கு வாழ்வு அளிக்கவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் இம்மாதிரிப்பட்ட பொருட்களின் விலைகள் எல்லாம் ஏறிக்கொண்டிருக்க வேண்டும் என்பது அர்த்தமா அல்லது அவர்களுக்கு தேவையான பொருட்களின் விலையை எல்லாம் குறைப்பதற்கு வழி செய்யவேண்டும் என்பது அர்த்தமா? உண்மையாகவே மக்களுக்கு இன்றைய தினம் நியாய விலைகள் மூலம் ஓரளவுக்கு குறைந்த விலையில் அரிசி கிடைத்துக்கொண்யிருக்கிறது என்று சொன்னல், இன்னும் ஓர் ஆயிரம் கடைகளை திறந்து அவற்றின் மூலம் வேண்டிய அளவுக்கு அரிசி கிடைக்கும் படியாக செய்து, அதற்காக அரசாங்கத்திலிருந்து ஏதாவது ஸப்ஸிடி கொடுத்து இந்த விலையேற்றத்தை தடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். புளி வெளியே போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்லும் நேரத்தில் வெளியே ஏற்றுமதியாகவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிளகாயை எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 500 டன் வெளியேற்றப்பட்டிருக்கிறது. இவ்விதம் மிளகாய் போய்க்கொண்டிருப்பதை ஏன் தடுத்து நிறுத்தக் கூடாது? நம்முடைய அரசாங்கத்திற்கு அதற்கு போதிய அளவு அதிகாரம் இல்லை என்று எண்ணிக்கொண்டிருக்கலாம். அவ்விதமிருந்தால் மத்திய அரசாங்கத்திலிடம் ஆறு மாதம் அல்லது மூன்று மாதம் என்று அனுமதி பெற்று வெளியே போய்க்கொண்டிருப்பதற்குத்தான் அனுமதி கொடுக்கவேண்டும். அவ்விதமில்லாமல் எவ்வளவு வேண்டுமானுலும், எந்த நேரத்தில் வேண்டுமானல் போய்க்கொண்டிருக்கலாம் என்று இருந்தால், இந்த அரசாங்கத்தில் எட்டு மந்திரிகள் அல்ல, 16 மந்திரிகள் இருந்தாலும் சரி, அல்லது 64 மந்திரிகள் இருந்தாலும் சரி, இவற்றை யெல்லாம் தடுத்து, நல்ல முறையில் செயலாற்ற முடியாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவே நான் குறிப்பிட்ட கருத்துக்களை எல்லாம் சிந்தித்துப்பார்த்து, அதன் மூலமாக மக்களுக்கு நல்ல முறையில் உணவுப்பொருள்கள் கிடைப்பதற்கு வழி வகை செய்யவேண்டும், அதற்கேற்ற முறையில் அமைச்சர்கள் கொள்கைகளை வகுத்துக்கொள்ள வேண்டும். அதன் மூலம் செயல்பட வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தின் மூலம் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. SPEAKER : Mr. Chinnadurai seems to be anxious to speak. I will have to give change to everybody in the order of one from the Opposition and two from the Congress. I hope, Mr. Chinnadurai will get his change before one of the clock. But I cannot definitely say.

* SRI R. SRINIVASA IYER : கனம் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானமும் இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்களும் அவசியமில்லை என்ற காரணத்தைக் கொண்டு இவைகளை எதிர்த்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். உணவுப் பொருள்கள் விலையேற்றம் சில எதிர்பாராத கார்ணங்களினல் தாற்காலிகமாக ஏற்பட்டது. சென்ற வாரம் தான் கவர்னர்

[Sri R. Srinivasa Iyer] [15th December 1959

உரையின் பேரில் பேசும்போது உணவு சம்பந்தமாக நிறையப் பேசினோம். அப்படி இருக்கும்போது, சில எதிர்பாராத காரணங்களினால் ஏற்பட்ட விலையேற்றத்தைப் பொருட்படுத்தி இப்போது இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டியது அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். இந்தத் தீர்மானம் எதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது? இந்தத் தீர்மானங்களுக்கு ஆதரவாக குறிப்பிடும் புள்ளி விவரங்கள் ஒருவருக்கும் விளங்கவில்லை. சொல்வதையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். சர்க்கார் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்வதில் பிரயோசனமில்லை. சமீபத்தில் ஒரு பத்திரிகையில் "விலை இறங்கிவிட்டது, இறங்கப் போகிறது" என்று அடிக்கடி சொல்லிவந்தால் மட்டும் போதாது என்று தலையங்கம் கூட எழுதப்பட்டிருந்தது. அதே பத்திரிகையில் இந்த மாதம் 12, 14-ம் தேதிகளின் இதழ்களில், நிருபர்கள் அந்தப் பிராந்தியத்தில் விசாரித்து நெல், அரிசி, புளி, மிளகாய் உள்பட உணவு தானியங்களின் விலைகள் இறங்கி இருக்கின்றன என்று எழுதியிருக்கிறார்கள். இந்தச் செய்தியை கனம் அங்கத்தினர் பார்த்திருந்தால் அவர் இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்க வேண்டியதில்லை. நேற்று மாலை மெயில் பேப்பரை அவர் பார்த்திருந்தால், இந்தத் தீர்மானத்தை அவர் பிரேரேபித்திருக்க வேண்டியதில்லை. நெல் ஜாஸ்தியாக ஏற்றுமதியாகக்கூடிய இடங்களாகிய தஞ்சாவூர் ஜில்லாவில் குற்றாலம் முதலிய இடங்களில் நெல்லின் விலை மூட்டைக்கு 2-3 ரூபாய் குறைந்திருக்கிறது என்றும், அரிசியின் விலை மூட்டைக்கு 4 ரூபாய் குறைந்திருக்கிறது என்றும், கேரளத்திலிருந்து விசாரிப்பவர்கள் இல்லை என்றும் செய்தி வெளியாகியிருக்கிறது. அரிசியின் விலையை 75 நயா பைசாவுக்கு குறைக்க வேண்டும் என்றும், மேலும் சென்னை நகரத்தில் 55 சதவிகிதம் உள்ள நபர்களுக்கு அதே விலைக்குக் கொடுக்க வேண்டும் என்றும், அதையும் சர்க்கார்தான் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னால், உணவு உற்பத்தி பெருகுமா? அவ்வாறு சொன்னால் உற்பத்தியாளருக்கு ஊக்கம் ஏற்படுமா? உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் ஒருவன் உழவு, நாற்று விடுதல், நாற்றுப் பிடுங்கி நடுவது முதல் கதிர் அறுக்கும் வரையில் என்ன பிரயாசைப்பட வேண்டியிருக்கிறது? அவன் எவ்வளவு கூலி கொடுக்க வேண்டியிருக்கிறது? அவன் என்ன லாபத்தை எதிர்பார்க்க முடியும்; இதையெல்லாம் ஆலோசித்து விவசாயிக்கு நியாயமாக இருக்கும் விலையை இந்தப் பொருள்களுக்கு நிர்ணயித்தாலொழிய, உணவு உற்பத்தி பெருகாது. விவசாயிக்கு நியாயமான விலை இல்லாவிட்டால், என்ன உரங்களை எவ்வளவு ரூபாய்க்குக் கொண்டுவந்து கொட்டினாலும் விவசாயிக்கு ஊக்கம் ஏற்படாது. உற்பத்தி பெருகாது. எனவே சர்க்காரின் கொள்முதல் விவசாயிக்கு நியாயமான விலையில் இருக்க வேண்டும். விவசாயிகளின் உண்மையான நிலையை அறிய வேண்டுமானால் கிராம மக்களை விசாரித்துப்பார்க்க வேண்டும். விவசாயிகள், நாற்று நடுவதிலிருந்து கதிர் அறுக்கும் வரையில் அவ்வப்போது

15th December 1959] [Sri R. Srinivasa Iyer]

கூலிகளுக்கு தானியத்தில் சம்பளம் கொடுக்கிறார்கள். விவசாய வேலை செய்யும் ஒரு ஆண் பிள்ளை 3 மரக்கால் நெல்லைக் கூலியாக வாங்கி அதை குறைந்த விலைக்கு விற்றால் பிறகு அவன் தனக்கு வேண்டிய மற்ற சாமான்களை எப்படி வாங்கிக்கொள்ள முடியும்? முன்பு நான்கணவிற்கு விற்ற ஒரு முழம் துணி இப்போது ஒரு ரூபாய்க்கு விற்கிறது. இன்று, ஹார்பரில் கூலி வேலை செய்தால் தினசரி மூன்று ரூபாய் கிடைக்கிறது என்று கிராமத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் பட்டணத்திற்கு வருகிறார்கள். இந்தத் தீர்மானம் கிராம மக்களுக்கு ஊக்கமளிப்பதற்கு அனுசரணையாக வில்லை. சர்க்கார் இதுவரை எடுத்துள்ள நடவடிககைகள் போதாது என்றும் பத்து ஏக்கருக்கு மேல் நிலமுடையவர்களிடமிருந்து உணவு தானியங்களை கட்டாயமாகக் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் இந்தத் திருத்த தீர்மானம் கூறுகிறது. இந்த நடவடிக்கையை எடுத்தால்தான் அதன் பலன் என்னவாக இருக்கும் என்று நாம் பார்க்க வேண்டும். இப்போது விலை இறங்கவில்லையா? நியாய விலைக் கடைகளில் அரிசி குறைந்த விலைக்கு விற்கவில்லையா? இன்று, நியாய விலை கடைகளில் அரிசியை வாங்குவதற்கு ஆட்களே இல்லை என்று கனம் எதிர்க் கட்சி அங்கத்தினர்களே சொல்லவில்லையா? அப்படி இருக்க, விலை ஏறி விட்டது என்று திரும்பத் திரும்பப் பேசுவது கட்சிப் பிரசாரத்திற்காகவே சொல்லப்படுகிறது. பொதுஜனங்களுக்கு இந்த சர்க்காரின் பேரில் ஒரு அருவருப்பு ஏற்படவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். லோக சபையிலும், ராஜ்ய சபையிலும் மத்திய உணவு மந்திரி உணவுப் பிரச்னை சம்பந்தமாக நேற்றுவரையில் பேசியிருப்பது ஹிந்து பத்திரிகையில் இன்று வெளியாகியிருக்கிறது. உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுத்துவருவதாக அவர் கூறியிருக்கிறார். மேலும், நாம் உணவு மண்டலத்திலிருந்து பிரிந்துபோய்விட வேண்டும் என்று சொல்வதில் பிரயோசனமில்லை. நமது ராஜ்யம் இந்தியாவில் ஒரு ராஜ்யம். இதர ராஜ்யங்களுக்கும் நாம் சப்ளை செய்ய வேண்டியதுதான். இப்போது, இந்தியா பூராவிலும் சராசரி உணவு உற்பத்தி எக்கருக்கு 830 பவுண்டு. அது நம் ராஜ்யத்தில் 1,360 பவுண்டு. 1955-ம் வருஷம் விலை ரொம்பவும் குறைந்தது. விவசாயிகளுக்குக் கட்டுபடியாகாதென்று அப்போது சர்க்கார் சப்ஸிடி கொடுத்து அதை வாங்கி நியாய விலைக்கடைகளில் விற்க ஏற்பாடு செய்தார்கள். ஆனால் விலை கொஞ்சம் ஏறிவிடவே அந்த நடவடிக்கையை கைவிட்டார்கள். 1959-ம் வருஷ அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டில் எல்லா விவரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. (Report of the Agriculture Department for 1957-58. நாம் முன்பு 48 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்துவந்தோம். இப்போது அது 10 வருஷங்களுக்குள் 56 லட்ச ஏக்கராக அதிகரித்திருக்கிறது. இது 60 லட்சம் ஏக்கராக ஆனால் நமது தேவைக்கும் அதிகமாக அரிசி உற்பத்தியாகும். ஆனால் எவ்வளவு உரங்களைக் கொண்டுவந்து

கொட்டினாலும், விவசாயிக்கு நியாயமான விலைக்கு தானியங்கள் விற்காவிட்டால் உற்பத்தி பெருகாது. உற்பத்தியில் ஈடுபடாதவர்கள் உணவு தானியங்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. விலையைக் குறைத்தால் இப்போது கிடைக்கும் அரிசி கூடக் கிடைக்காது. விலையைக் குறைக்க வேண்டும் என்று சொல்பவர்கள் உற்பத்தி பெருக என்னென்ன செய்யவேண்டும் என்று ஆலோசனைகள் சொன்னால் நன்றாக இருக்கும்.

ஸ்ரீ கல்யாணசுந்தரம் கொடுத்திருக்கும் திருத்தங்களில் 2, 4, 6 ஆகிய திருத்தங்கள் தான் நியாயமானவை. அவர் இவைகளை தீர்மானமாகக் கொடுத்திருந்தால் நான் ஆதரித்திருப்பேன். இவைகளை அவர் முதல் தீர்மானத்தை ஆதரித்து மற்ற திருத்தங்களுடன் சேர்த்து திருத்தங்களாகக் கொடுத்திருப்பதால் இவைகளையும் மற்ற திருத்தங்களுடன் சேர்த்து எதிர்க்க வேண்டியவனாக இருக்கிறேன்.

இந்தியா பூராவிலுமாக இப்போது உற்பத்தியாகும் அரிசியை இன்னும் அதிகரிக்க முடியும் என்றும் கோதுமை உற்பத்தியையும் அதிகரிக்க முடியும் என்றும் நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது இந்தியாவில் சராசரி ஏக்கருக்கு 843 பவுண்டு அரிசி உற்பத்தியாகிறது. இதை 2,400 பவுண்டாக அதிகரிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஏக்கருக்கு 650 பவுண்டு உற்பத்தியாகும் கோதுமையை ஏக்கருக்கு 1,500 பவுண்டாக அதிகரிக்க முடியும் என்றும் நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு இந்தியா பூராவிலுமே வழிவகுக்க வேண்டும்.

உணவு தானியங்களின் விலையை நிர்ணயிக்க ப்ரைஸ் ஃபிக்ஸேஷன் போர்டு அமைக்கப்படும் என்று மத்திய சர்க்கார் உணவு மந்திரி சொல்லியிருக்கிறார். அந்த போர்டில் எல்லாக் கட்சிகளும் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்று கூட அவர் சொல்லியிருக்கிறார். நம் ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், சென்ற வருஷம் மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலையை நாம் ஒத்துக்கொள்ள முடியாமல் ரொம்பவும் குறைவாக இருந்ததால் நாம் அதை அமுலுக்குக் கொண்டுவர முடியவில்லை. இதை நமது அரசாங்கம் உணர்ந்து, நமது ராஜ்யத்திற்கு தனியாக ஒரு ப்ரைஸ் ஃபிக்ஸேஷன் போர்டு தேவை என்று வற்புறுத்த வேண்டும். அத்துடன் . . .

MR. SPEAKER: Since there are many Members wanting to speak, I must insist on the ten minutes' limit being observed by Members strictly.

SRI R. SRINIVASA IYER: After the first bell rings, I have two minutes. If I have not got any more time, I shall not continue my speech.

MR. SPEAKER: I want to give a chance to everybody. When I ring the bell, they must sit down. Otherwise, I will get up and call the next Member.

15th December 1959]

Sri R. SRINIVASA IYER : One more minute will do for me, Sir.

நெல்லை சர்க்காரே கொள்முதல் செய்ய ஆரம்பித்தால் நெல்லின் விலை கண்டிப்பாக ஏறும், இறங்கவே இறங்காது. அவரவர்களிடம் இருக்கும் உபரியான நெல்லை அவரவர்கள் விற்றுத்தானகவேண்டும். இப்போது வரப்போகும் அறுவடையை உத்தேசித்து இதுவரை வைத்திருந்த நெல்லை வெளியில் கொண்டுவந்து விற்கிருர்கள். தாற்காலிகமாக ஏற்பட்ட விலை உயர்வைப் பொருட்படுத்திக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கூறி இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன்.

Sri A. V. P. ASAITHAMBI : On a point of information, Sir. . . .

Mr. SPEAKER : பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் இப்போது ஒன்றும் அனுமதிக்க முடியாது. ஏனென்ருல் ஒவ்வொரு நிமிடமும் நமக்கு இப்போது வேல்யுவபிளாக இருக்கிறது. கனம் ராமகிருஷ்ண தேவர் அவர்கள் . . .

Sri S. RAMAKRISHNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை எதிர்த்துச் சில வார்த்தைகள் பேச முன் வருகிறேன். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு நாம் அதிகமான பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே விவசாயிகள் விற்கக் கூடிய விலையை நிர்ணயம் செய்ய வேண்டும், அவர்களுடைய பொருள்களின் மீது ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்று சொல்வது முற்றிலும் பொருத்தமற்ற ஒரு காரியம் ஆகும். ஏனென்ருல் விவசாயப் பொருள்கள் நம் நாட்டில் அதிகமாக உற்பத்தியாகி விட்டால், ஒவ்வொரு பகுதியிலும் அதிகமாக உற்பத்தியாகும் நிலைமையை உண்டு பண்ணிவிட்டால் அந்த விலையானது தானகக் குறைந்துவிடும். அதே நேரத்திலே மற்ற பொருள்களும் அதே மாதிரி—அதாவது விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு உபயோகப்படக் கூடிய அத்தனை உதவிப் பொருள்களும்—உற்பத்தி அதிகமானல் இந்த பொருள்களின் விலைகள் தானகக் குறைந்துவிடும். நான் ஒரு விவசாயி. சாதாரணமாக என்னுடைய நிலங்களிலிருந்து விளைந்த பொருள்களையே பட்டிணம் படி 90 படி கொண்ட கலத்தை 3 ரூபாய்க்கு விற்றிருக்கிறேன், அப்போது எந்த கண்ட்ரோல் இருந்தது? அப்போது எந்த வரம்பு இருந்தது? ஏன் அப்படி விற்க முடிந்தது என்ருல் அப்போது நல்ல முறையில் விளைச்சல் இருந்ததால்தான் குறைந்த ரேட்டில் விற்க முடிந்தது. அப்போது மற்ற பொருள்களும் இதே மாதிரி குறைந்த ரேட்டில் கிடைத்தது. அப்படி இருந்ததால்தான் சாதாரணமாக அவர்கள் ஜீவிக்க முடிந்தது. மற்ற உதவிகளும் இருந்தது. இந்த நிலையில் இப்போது இந்த வருஷத்தில் எடுத்துக்கொண்டாலும் நாற்று வேரற்றுப் போன இடங்களில் வேண்டிய தேவைக்கு நாற்று இருக்கும் இடத்திலிருந்து—அதாவது 100 முடிச்சுகள் ஒரு குப்பம்

என்று சொல்வார்கள்—இப்படி ஒரு குப்பம் ஒன்று 6 ரூபாய் அடக்கம் ஆகிறது அந்த கிராமத்திற்குக் கொண்டுபோக. ஒரு ஏக்கருக்கு 18 குப்பம் வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் நாற்றுக்களை கொண்டு போய், பிரயாசைப்பட்டு, உற்பத்தி செய்து வரக்கூடிய விளைபொருள்களைக் குறைந்த விலைக்குக் கொடுத்தால் எத்தனை வருஷம் இம்மாதிரி விவசாயம் செய்ய முடியும்? அவர்கள் நிலை என்னவாகும்? அவர்கள் நாளாவட்டத்தில் க்ஷீணித்துப் போகிறார்கள். நல்ல முறையில் விவசாயம் செய்த குடும்பங்கள் இப்போது வரி கூட கட்ட முடியாத நிலையில் இருக்கின்றன. விவசாயப் பொருள்கள் நல்ல முறையில் உற்பத்தியானால், அதன் விஷயத்தில் எந்த விதமான கண்ட்ரோலும், வரம்பும் இல்லாது இருந்தால் நாட்டு மக்களுக்கு உணவுப் பொருள்கள் சாதாரணமாகக் கிடைக்கும். இந்த நிலையிலே, எத்தனையோ அபிவிருத்தி அடையக்கூடிய ஸ்தாபனங்களெல்லாம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும்போது, இந்த விவசாயிகளுக்கு மாத்திரம் இம்மாதிரி நிலை ஏற்படுமானால் ரொம்பவும் கீழ்த் தரமான நிலைக்குப் போய்க்கொண்டிருப்பார்கள். ஒரு பகுதி நல்ல முறையில் வருகிறபோது மற்றொரு பகுதி வசதியற்ற நிலையில் இருக்கிறது. இந்த நிலையில் அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து நல்ல முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்வார்களானால், இப்போது இருக்கக் கூடிய நிலை மாறி ஜனங்களுக்கு நல்ல முறையில் உணவுப் பொருள்கள் கிடைக்க ஏதுவாகும். ஆகையால் உணவுப் பொருள்களுக்கு எந்த விதமான கண்டரோலோ அல்லது விலை நிர்ணயமோ இருக்கக் கூடாது என்று வலியுறுத்த விரும்புகிறேன். மற்ற பொருள்கள்—விவசாயத்திற்கு உதவியாக இருக்கக் கூடிய பொருள்கள்—அதிகமாக உற்பத்தியானால், மக்களுக்கு உணவுப் பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்கும். முன்னர் ரூபாய்க்கு 30 படியாக இந்த நாட்டில் நெல் விற்றுக் கொண்டிருந்தே இப்போது இந்த விலையேற்றத்திற்கு என்ன காரணம்? அப்போது மற்ற பொருள்களும் அதே குறைந்த ரேட்டில் கிடைத்ததால்தான் ரூபாய்க்கு 30 படி நெல் கொடுக்க முன் வந்தார்கள். மற்ற பொருள்களெல்லாம்—விவசாயத்திற்கு உதவியாக இருக்கக் கூடிய மற்ற பொருள்களெல்லாம்—விலை ஏறி விட்டதால் விவசாயப் பொருள்களையும் அதிக விலைக்கு விற்க முன் வருகிறார்கள். அப்படி எல்லாப் பொருள்களும் எல்லா இடங்களிலும் ஒரே விதமாக வந்து விட்டால் விவசாயப் பொருள்களும் மற்ற எல்லாப் பொருள்களும் மக்களுக்குச் சாதாரண முறையில் கிடைக்கும் என்று சொல்லிக் கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் ஆட்சேபிக்கிறேன்.

Sri K. Ramachandran: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். உணவுப் பொருள்களின் விலைவாசியைப் பொறுத்த வரையில் பொதுவாக நான் எதிர் பார்த்ததெல்லாம், ஓரளவு தாற்காலிகமாக இருந்தாலும் எப்படியும் இதனுடைய நிலைமை திருந்தக் கூடும் என்றுதான் நான் எதிர்

15th December 1959] [Sri K. Ramachandran]

பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனல், அதை முடிவு செய்யக் கூடிய நிலைமையாக இப்போது நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. ஏனென்றுல் இப்போது பருவ மழை ஓரளவு சுமாராகப் பெய்திருக்கிறது பல இடங்களில். அதோடுகூட தஞ்சை முதலிய இடங்களில் குறுவை சாகுபடி முடிந்து விட்டது. இந்த ஒரு நிலையை வைத்துப் பார்க்கும்போது இந்த மாதிரி விலைவாசி அவ்வளவு அதிகமாகக் குறையாத முறையில், குறைந்த அளவுக்குத் தான் குறைந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்து தெரிவதால், இது தாற்காலிகமாக இருக்கக் கூடியதாகச் சொல்ல முடியவில்லை. அதோடு கூட சென்ற சில வருஷங்களாகவே பார்க்கும்போது, இந்த உணவுப் பொருள்களின் விலை சற்று அதிகமாகவே வந்துக்கொண்டிருக்கிறதேயொழிய குறைந்து கொண்டிருப்பதாகச் சொல்ல முடியவில்லை, அல்லது குறைவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுவதாக வில்லை என்று ஊன்றிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி இருக்கக் கூடிய விலைவாசியைக் குறைக்க வழிவகைகள் செய்ய வேண்டியிருந்தும், இதிலே கட்சிப் பிரதிகட்சிகளை எடுத்துக் கொண்டு, இவர்களுக்கு நல்லது, அவர்களுக்கு நல்லது என்று இந்தப் பிரச்னையைப் பார்ப்பது சரியல்ல என்று சொல்லிக்

(Sri T. Karia Gounder in the Chair.)

கொள்ள ஆசைப்படுகிறேன். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் இதை இப்படியே வைத்துக் கொள்ளவேண்டும், இது விவசாயிகளுக்கு நன்மை பயக்குகிறது என்று பேசுவது மிகவும் விசித்திரமாக இருக்கிறது. அவர்களுடைய வாதம், உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது நன்மையாக இருக்கிறது என்று சொல்லுவது, மிகவும் வியப்பாக இருக்கிறது. ஏனென்றுல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களிலே பல தரப்பட்டவர்கள் இருக்கிறுர்கள். அதிலே பணக்காரர்கள் இருக்கிறுர்கள், அதோடு 2 அல்லது 3 ஏக்கர்கள் வைத்துக் கொண்டிருப்பவர்கள் இருக்கிறுர்கள். ஏதோ எதிர்க் கட்சியிலிருப்பவர்களெல்லாம் உற்பத்தியில் ஈடுபடாதவர்கள் போலும், ஆளும் கட்சியிலுள்ளவர்கள்தான் உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் போலும், அதிகமாக விலை கொடுக்க வேண்டும் என்று கூறுவது ஆச்சரியமாக இருக்கிறது. எதிர் கட்சியிலிருப்பவர்களும் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறுர்கள். இன்றைய தினம் பல தரப்பட்ட விவசாயிகளைப் பார்க்கிறேம். எப்படி உற்பத்திச் செலவை சரிக்கட்ட முடியும் என்று ஆராய்ந்து பார்க்கிறேம். அந்த நிலையை ஆராய்ந்து பார்த்தாலும் இந்த விலையேற்றமானது அபாயகரமான நிலையில் இருக்கிறது. நகரத்திலும், பட்டணத்திலும் இருக்கக் கூடிய மக்கள் மட்டுமல்ல, விவசாயிகளும் ரொம்பவும் ஆபத்தான நிலையில் இருக்கிறுர்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆரம்பத்தில் நகரங்களிலுள்ளவர்களுக்கு மட்டும் ஃபேர் பிரைஸ் ஷாப் ஏற்படுத்திய போது கிராமங்களிலிருந்து முறையீடுகள் வரவில்லை. இப்போது கிராமங்களில் கூட இந்த நியாய விலைக் கடைகள் ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கும் தானியங்கள் குறைந்த விலையில்

[Sri K. Ramachandran] [15th December 1959

கிடைக்கவேண்டும் என்ற முறையீடுகள் அமைச்சர் அவர்கள் எனது பகுதிக்கு வந்த போது வந்தது; அதே போல் பத்திரிக்கையிலும் பார்க்கிறோம். ஆக, இந்த பிரச்னை முக்கியமாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்னை; சர்வ கட்சிகளும் சேர்ந்து முடிவு காண வேண்டியிருக்க ஒரு கட்சி எதிர்த்துப் பேசவேண்டுமென்றும் ஒரு கட்சி ஆதரித்துப் பேச வேண்டுமென்றும் எண்ணுவது சரியல்ல என்று நினைக்கிறேன். கவர்னர் அவர்களே கூட இந்த மாதிரி விலை உயர்வது ஆபத்தானது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆளும் கட்சியினர் விலை உயர்ந்துதான் ஆகவேண்டும் என்று சொல்லுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? ஆகவே, நல்ல முறையில் மக்களுக்கு குறைவான விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்க நீண்டகாலத் திட்டம் இருக்கிறது. நீண்டகால திட்டமாக உணவு விலையைக் குறைக்கச் சில திட்டங்களைப் போடுவது அவசியம். "பர்டிலைசர்" கொடுப்பது; "இரிகேஷனல் பெசிலிடிஸ்" கொடுப்பது ஆகியவைகள் எல்லாம் நீண்டகாலத் திட்டத்தில் வரும். நம்முடைய பிராந்தியத்தைப் பொறுத்த வரை பல ஆறுகளை நீர்ப்பாசனத்திற்குக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. "பர்டிலைசர்ஸ்"-ஐப் பொறுத்தவரை நியாயமான குறைந்த விலையில் அதிகமான அளவுக்கு நம்முடைய விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும். இவற்றை விநியோகிக்கப்படுவதை அதிகமாகப் பயன் படுத்தவேண்டுமென்று பட்டீல் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அந்த முறையில் விவசாய உற்பத்திப் பெருக்கத்தை அதிகப்படுத்த நீண்டகாலத்திட்டங்களை வைத்துக்கொள்ள வேண்டும். உடனடியாக இப்போது ஏற்பட்டுள்ள விலை உயர்வைக் குறைக்க என்ன வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்பதைக் கண்டிப்பாக உற்று நோக்க வேண்டும். இன்றைக்குப் பேசிய மத்திய விவசாய அமைச்சர் அவர்களே சொல்லுகிறார்கள்—50 லட்சம் டன் கோதுமை, அரிசி தானியங்களை "பஃபர்" ஸ்டாக்காகச் செய்யப் போகிறேன் என்று. இந்த நிலைமையில் ஆளும் கட்சி அங்கத்தினர்கள் உண்மையிலேயே விலைவாசி அதிகமாகவில்லை; பற்றாக்குறை இல்லையென்று கருதுகிறார்களா?

இன்று இரண்டாயிரம் நியாய விலைக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள். விலைவாசி இறங்கவில்லை. "ஓப்பன் மார்க்கட்" அதே நிலைமையில்தான் இருக்கிறது. ஆகவே, விலையை இன்னும் அதிகமாகக் குறைக்கவேண்டுமானால் "பஃபர் ஸ்டாக்" பண்ணவேண்டியது ரொம்ப அவசியம். அதையும் இப்பொழுதே தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். குறுவை அறுவடை முடிந்து விட்டது. சம்பா அறுவடை வரப் போகிறது. இப்போதே அதை எடுத்துக்கொண்டால்தான் ப்ரொக்யூர் செய்யவோ லெவி மூலமாகக் கொள் முதல் செய்யவோ, ஏதோ ஒரு முறையில் செய்ய முடியும். முன்பே ஒரு முறை காலந்தவறி சிந்தித்து அறுவடை முடிந்த பிறகு இந்த மாதிரிச் செய்யவேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது.

15th December 1959] [Sri K. Ramachandran]

ஆகவே, இப்போதும் அந்த மாதிரிக் காலந்தாழ்த்தாமல் இதைச் செய்யவேண்டும். இது சரியான தருணம். இந்தத் தருணத்தை விட்டுவிட்டால் பிரச்னையை சமாளிக்க முடியாத நிலைமை உருவாகிவிடும் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். "பஃபர் ஸ்டாக்" கண்டிப்பாகக் கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இந்தச் சம்பா அறுவடைக்கு முன்னதாகவே அரசாங்கம் விலை ஏற்றத்தைத் தடுக்கவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை அரசாங்கம் கண்டிப்பாக உணரவேண்டும். இரண்டாயிரம் நியாய விலைக்கடைகள் திறந்திருப்பது போதாது. நம் சேர்த்து உணவு கிடைக்கவேண்டுமானால் மேலும் அதிகமான அளவில் நியாய விலைக் கடைகளை திறக்க வேண்டும். உணவு ஸ்டாக் பண்ணிக் கொண்டு விநியோகம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் "ஓப்பன் மார்க்கட்"டிலும் விலை குறையக்கூடிய நிலைமை உண்டாகும்.

விவசாயச் செலவு அதிகமாக இருக்கும் காரணத்தினால் விலை குறையக்கூடாதென்று சர்க்கார் தரப்பு அங்கத்தினர்கள் பேசினார்கள். இந்த விலை ஏற்றத்தினால் உண்மையிலேயே சாதாரண விவசாயிகள் ஒன்றும் பயன் அடையவில்லை. விவசாயச் செலவைக் குறைக்க சர்க்கார் நல்ல பல திட்டங்களைப் போடலாம். "ஃபர்டிலைசர்" குறைந்த விலையில் கிடைக்கும்படி செய்யலாம். விவசாயக் கருவிகள், விதைகள் முதலியவைகளை அவர்களுக்குக் குறைந்த விலையில் பெற்றுத் தரலாம். அதற்காக பட்ஜட்டில் எத்தனை கோடி வேண்டுமானாலும் ஒதுக்கட்டும். ஆகவே உணவு தானியங்களின் விலை இந்த முறையில் இருக்கவேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. உற்பத்திச் செலவைக் குறைக்கவேண்டுமென்று நானும் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன். அதற்கு சப்சிடி ஏற்படுத்தி ஃபர்டிலிசர், விதைகள், உபகரணங்கள் ஆகியவைகளைக் கொடுக்கத் திட்டம் வகுக்கவேண்டும். அதற்காக கடன் உதவி அளிக்கலாம். இப்படிச் செய்தால்தான் கண்டிப்பாக உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும். இந்த விலை உயர்வினால் உண்மையில் சாதாரண விவசாயிகள் லாபம் அடையவில்லை. சாதாரண விவசாயி தன்னிடம் உள்ள உபரி தானியத்தையெல்லாம் அறுவடை காலத்திலேயே மார்க்கட்டில் விற்றுவிடுகிறான். பெரிய வியாபாரிகளுக்கும், நிறைய நிலம் வைத்திருக்கக்கூடியவர்களுக்குந்தான் இந்த விலையேற்றத்தினால் பலனடைந்திருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணரவேண்டுமென்று கூற விரும்புகிறேன். உணவுப் பொருள்களின் விலை இறங்கி மற்றப் பொருள்களின் விலை தானாக இறங்கும். அதற்காக நடவடிக்கைகளை நல்ல முறையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI N. P. M. CHINNIAH KAVUNDER : மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, நான் இந்த தீர்மானத்தை முழு மனதுடன் எதிர்த்து சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இந்த விலையைக் குறைக்கவேண்டுமென்று மாற்றுக் கட்சி அங்கத்தினர் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். குறைக்கவேண்டுமென்று சொல்லுவதிலே ஒரு நியாயம் வேண்டும். நான் ஒரு

[Sri N. P. M. Chinniah Kavunder] [15th December 1959

விவசாயி. இந்த விலையைக் குறைக்கவேண்டுமென்று சொன்னுல் உண்மையிலேயே இன்றைக்கு விவசாயிகளுக்கு ரொம்பச் சங்கடமாக இருக்கிறது. இந்த விவசாயத்திலே எங்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்று சொன்னுல், ஒரு முடை உற்பத்தி செய்வதில் குறைந்த ரேட் 40 ரூபாய் விலை கிடைக்கிறது. 100-க்கு 80 விவசாயிகள் இருக்கும் நமது நாட்டில் விலை குறைந்தால் பாதிக்கப்படும் விவசாயிகள் ரொம்ப அதிகம். இந்த விலையைக் குறைக்க வேண்டுமென்று எங்கள் ஊர்களில் எல்லாம் கூட ஊர்வலங்களும் கூட்டங்களும் நடந்தன. 12 அணுவுக்கு அரிசி விற்கவேண்டுமென்று சொல்லுகிருர்கள். 1½ ரூபாய்க்கு விற்கும் போது 1 ரூபாய்க்கு விற்கவேண்டுமென்று சொன்னுர்கள். 1 ரூபாய் விற்கும்போது 14 அணுவுக்கு விற்கவேண்டுமென்று சொன்னுர்கள். 14 அணு விற்கும்போது 12 அணுவுக்கு விற்கவேண்டுமென்று சொல்லுகிருர்கள். சும்மா கொடுத்தால் கூட நல்லதுதான் என்று சொல்லுவார்கள்போல் தெரிகிறது. "ரேஷன்" நடக்கும் போது இடையிலே ஊருக்குப் போனேன். எனக்கு ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறது. உப்பு வாங்கிப் போடலாம் என்று போனேன். 30 படி உப்பு ஒரு மூட்டை கற்பூரம் 70 ரூபாய் 11 அணு ஆயிற்று. 5 அணு குறைத்துக் கொடுத்தால் கூட வாங்கமாட்டேன் என்று சொல்லுகிருன். போன வருஷம் 300 ரூபாய் செலவு செய்தேன். 11 மூட்டை நெல் கிடைத்தது. அந்த நெல்லை என்ன விலைக்குக் கொடுப்பது? அந்த மாதிரி விவசாயிகள் ரொம்பக் கஷ்டப்படுகிருர்கள். என் வீட்டில் கூட நியாய விலைக் கடை இருக்கிறது. 40, 50 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் கூட அரிசி வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் ரொம்ப வெட்கப்படுகிருர்கள். அந்த மாதிரி நிலைமையில் விவசாயிகள் இருக்கிருர்கள். எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடு என்று பேசப்படுகிறது. எங்கள் மணப்பாறை, புதுக்கோட்டை, பிரதேசங்களில் மழையே கிடையாது. உப்பு வாங்கப் போனுல் அது கூட அதிக விலை விற்கிறது. அந்த கடைக்கு வேண்டுமானுல் லைசென்சை ரத்து செய்துவிடலாம். அப்போது அது கூடக் கிடைக்காது. விவசாயிகளுக்கு வேண்டிய உரம், உபகரணங்கள் ஆகியவை குறைந்த விலையில் கிடைக்கும்படிச் செய்தால்தான் விலை இறங்குமே தவிர வேறு ஒன்றும் செய்யத் தேவையில்லை. அரை வட்டிச்
12 00 noon. சட்டம் போட்டு 1,000 ரூபாய்க்கு 2,000 ரூபாய் பாண்டு எழுதி 5,000 ரூபாய்க்கு டிகிரி வாங்கி இப்படியெல்லாம் செய்து 5,000 ரூபாய் முதல் வைத்துக்கொண்டு லேவாதேவி செய்ய ஆரம்பித்தவர்களெல்லாம் இன்று 5 லட்சம், 10 லட்சம் வைத்திருக்கிருர்கள். சில வருஷங்களுக்கு முன்னுல் விவசாயிகளுக்கு சாதகமாக இருக்கவேண்டுமென்று சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அந்தக் காலத்தில் சட்டம் போட்டார். அவர் அப்பொழுது என்ன நினைத்தாரோ அதற்கு நேர்மாருக இப்பொழுது சட்டம் மாறியிருக்கிறது. எல்லாம் விவசாயின் தலையிலே சுமந்து விட்டது. அதேமாதிரிதான் உணவுப் பொருள்களின் விலையை குறைக்கவேண்டுமென்று ஏதாவது சட்டம் போட்டால் அது தலைகீழாக மாறப்போகிறது. நீங்கள் நினைப்பதுபோல் விலை ஒன்றும் இறங்காது. 1½ ரூபாய்க்குத்தான் கிடைக்கும். மணப்பாறையில் ஒரு விவசாயத் தொழிலாளி இருக்கிருன். அவன்

15th December 1959] [Sri N. P. M. Chinniah Kavunder]

தம்பி மில்லில் வேலை பார்க்கிறன் மில்லிலே வேலை பார்ப்பவனுக்கு மாதத்திற்கு 70, 80 ரூபாய் கிடைக்கிறது. விவசாயத் தொழிலாளிக்கு ஒரு மாதத்திற்கு 20 ரூபாய்தான் கிடைக்கிறது. விவசாயம் செய்பவன் அந்த 20 ரூபாய் நிரந்தரமாகக் கிடைத்தால் போதும் என்று அவன் சொல்லுகிறன். ஆனல் மில் தொழிலாளி அந்த 80 ரூபாயும் போதாது என்று கொடி பிடித்துக்கொண்டு போராடுகிறன்.

(Mr. Speaker in the Chair.)

ஓரே குடும்பத்தில் இருக்கும் இரண்டு பேர்களுக்கும் இவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. விவசாயியும் 20 ரூபாயை வைத்துக்கொண்டு அவன் பெண்ஜாதி பிள்ளைக்கு சோறு போட்டாக வேண்டும். மில் தொழிலாளியும் 80 ரூபாயை வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்தியாகவேண்டும். விவசாயத் தொழில் இந்த நிலைமையில் இருக்கிறது. ஆகவே, எதிர்க்கட்சியினர் இம்மாதிரி தீர்மானம் கொண்டுவருவதற்குப் பதிலாக விவசாயிகளுடன் ஒத்துழைக்கும் முறையில் விவசாயிகள் உணவு உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகள், உரம், விதை முதலியவைகள் கிடைப்பதற்கு வேண்டிய வசதிகள் ஆகியவைகளை சர்க்கார் செய்துகொடுக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்திருந்தால் நான்கூட அவரோடு சேர்ந்துகொண்டு அந்தத் தீர்மானத்தை வரவேற்பேன்.

எங்கள் பக்கத்தில் மணப்பாறை சமீபம் ஒரு கிராமத்தில் பம்பு செட்டு போட்டிருந்தாலும், கமலையைக் கட்டித்தான் தண்ணீர் இறைக்கிறன். நஞ்சையில் கொண்டுபோய் கொள்ளு விதைத் திருக்கிறன். கிணற்றில் தண்ணீரே கிடையாது. மிகவும் மட்டமான நிலத்தில்தான் கொள்ளு விதைப்பது வழக்கம். பம்பு செட்டு வைத்து தண்ணீர் இழுத்தால் பக்கத்தில் ஊற்றமே இல்லாமல் போய்விடுகிறது. ஆகையால் கபலையைக் கட்டித்தான் இறைக்கிறன். பம்பு செட்டு போடுவதற்கும், 50 அடி 60 அடி போர் செய்யாமல் தண்ணீர் கிடைப்பதில்லை. விவசாயத் தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு 10 அணு, 8 அணு கிடைத்தால் போதும் என்று கருதுகிறர்கள். ஆனல் மில் தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு 2 ஆட்டம், 3 ஆட்டம் சினிமா போகவேண்டியிருக்கிறது. அதற்காக அவனுக்கு அரிசி ரொம்ப குறைந்த விலைக்குத்தான் விற்கவேண்டும்! அரிசி குறைந்த விலைக்கு கிடைக்க வேண்டுமென்றல், விவசாயம் செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் குறைந்த விலைக்கு கிடைக்கவேண்டும். விவசாயத்தைத் தவிர எனக்கு வேறு தொழில் தெரியாது.

புளி விலை ஏறிவிட்டது, மிளகாய் விலை ஏறிவிட்டது என்று சொல்லுகிறர்கள். இப்பொழுது ரோடில் இருக்கும் புளியங்காயை யெல்லாம் இரவில் பரித்துக்கொண்டு போய்விடுகிறர்கள். கண்டிராக்டர் 10 பொதி வரும் என்று எதிர்பார்த்தால், 2 பொதி தான் வருகிறது. காயாக இருக்கும்போதே பறித்துவிட்டால் எப்படி பழம் கிடைக்கப் போகிறது? இம்மாதிரியெல்லாம் நடக்கிறது. சாதாரணமாக கடலைப் பயிறுக்கு பூச்சி வராது. இப்பொழுது காலத்திற்கு ஏற்றவாறு புது புது பூச்சிகள் வருகின்றன.

[Sri N. P. M. Chinniah Kavunder] [15th December 1959

கடலைப் பயிறுக்கு பூச்சி வந்தது என்று இதுவரையிலும் எந்தக் காலத்திலும் கிடையாது. 14 அணு விற்றது இப்பொழுது 19, 20 ரூபாய் விற்கிறது, வெட்டிய உடனே. முன்னுல் 100 மூட்டை கிடைக்கும் என்றுல் இப்பொழுது அதே இடத்தில் 10 மூட்டை தான் கிடைக்கிறது. ஆகையினுல், விலை ஒன்றும் குறைந்து விடாது. விலையைக் குறைப்பதற்கு சட்டம் ஏதாவது போட்டால், அது நேர்மாருகத்தான் போகும். 12 அணு, 14 அணு விற்கும் என்று எதிர்பார்த்தால், 1½ ரூபாய்க்குத்தான் வந்துசேரும். ஆகவே, இம்மாதிரி தீர்மானம் கொண்டுவருவதற்குப் பதிலாக, உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகளை விவசாயிகளுக்கு செய்துகொடுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்திருந்தால், நான்கூட எதிர்க் கட்சியினரோடு சேர்ந்து அதை ஆதரித்திருப்பேன். நெல் ஒரு வருஷத்திற்குமேல் வைத்துக் கொண்டால் கெட்டுப்போய்விடும். அது ஒன்றும் இருப்புக் கட்டி வைக்கும் சங்கதி இல்லை. விவசாய உற்பத்திக்கு வேண்டிய சாதனங்களின் விலைகள் குறைந்தால், தாஞகவே நெல் விலை குறைந்துவிடும். உள்ளே இருக்கிற நெல் அனைத்தும் வெளியே வந்துவிடும். தாஞகவே விலை குறையும். ஏதோ எதிர்க் கட்சியினர் இந்த மாதிரி ஒரு தீர்மானத்தை சம்பிரதாய முறையில் கொண்டுவந்திருக்கிருர்களே தவிர வேறு ஒன்றுமில்லை, ஏதோ தொழிலாளிகளிடம் வோட்டு வாங்கவேண்டும் என்று சம்பிரதாய முறையில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே ஒழிய, அவர்களுக்கு விவசாயத்திற்கு வேண்டிய சாதனங்களின் விலை குறையாமல் விவசாய உற்பத்தியை அதிகரிக்க முடியாது, விலையை குறைக்க முடியாது என்பது தெரியாதது அல்ல 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்ற நிலைமை மாறி 'உழுதுண்டு வாழ்வாரே வீழ்வார்' என்ற நிலைமைக்கு வந்திருக்கிறது. மற்றவர்களெல்லாம் கொம்மாளம் அடிக்கிருர்கள். விவசாயத் தொழிலாளிகளுடைய நிலைமட்டும் மாறவில்லை. மிளகாய், புளி விலை ஏறிவிட்டது. எதற்கு எடுத்தாலும் கியூ வரிசை, அரிசி வாங்கினுலும் சரி, சினிமா ஆட்டத்திற்கு போவதாக இருந்தாலும் சரி, பஸ்ஸில் ஏறுவதாக இருந்தாலும் சரி, எல்லாவற்றிற்கும் கியூ வரிசையில்தான் நிற்க வேண்டியிருக்கிறது. ஒரு பண்ணையிலே ஒரு ஆள் வேண்டுமென்றுல், 20 ரூபாய் சம்பளம் கொடுத்தால் போதாது. அவனுக்கு ஒரு சைகிள் கொடுக்க வேண்டும், ஒரு புஷ்கோட்டு கொடுக்க வேண்டும். 5 மணி ஆனுல் சினிமா போவதற்கு காசு கொடுக்க வேண்டும். சாதாரண வேலை செய்வதற்கு பண்ணையாள் கிடைப்பதே இல்லை. ஏதாவது சொன்னுல் உடனே சம்பளம் போதாது என்று சொல்லி கொடியைப் பிடித்துக்கொண்டு 2,000 பேர்கள் வரிசையாக நிற்கிருர்கள். வேலை செய்வதென்றுல் கஷ்டம். ஒரு மரத்தைத் தூக்கி அப்பாலே போடவேண்டுமென்றுல், உடனே காபிக்கு காசு கொடுக்க வேண்டும், சாயந்திரம் சினிமாவுக்கு பணம் கொடுக்கவேண்டும். இம்மாதிரி நாட்டில் நிலைமை வளர்ந்து கொண்டே போகிறதே ஒழிய, வேறு அல்ல. சினிமா போவதற்கும், கொடி தூக்கிக் கொண்டு கூட்டமாகச் செல்வதற்கும் ஆள் இருக்கிருர்கள். விவசாயம் செய்வது அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. 20 மூட்டை நெல்தான் கிடைக்கிறது. ஒரு

15th December 1959] [Sri N. P. M. Chinniah Kavunder]

மூட்டைக்கு 30 ரூபாய் செலவழித்தால்தான் நெல் கிடைக்கிறது. தண்ணீர் கிடையாது. அதுவும் என்னைப்போல் சாமர்த்தியமாக ஏதோ விவசாயம் செய்தால்தான் அவ்வளவு நெல் கிடைக்கும். இல்லாவிட்டால் அதுகூட இல்லை. நிலைமை எப்படியிருக்கிறது என்றால் எவ்வளவு வந்தாலும் போதாதுதான். 80 ரூபாய் வாங்கும் தொழிலாளியும் போதாது என்றுதான் அழுகிறான். 150 ரூபாய் வாங்குகிறவர்களும்தான் அழுகிறார்கள். 1,000, 2,000 ரூபாய் வாங்குகிறவர்களும்தான் அழுகிறார்கள் எவ்வளவு வந்தாலும் திருப்தி அடையப் போவதில்லை. டாடா, பிர்லா, முத்தைய செட்டியார் போன்றவர்களும் போதும் என்று திருப்தி அடைவதில்லை. எப்படியிருந்தாலும் போதாது என்ற குறை இருந்துகொண்டுதான் இருக்கும். 12 அணா விற்றால், 11 அணா விற்க வேண்டும் என்று சொல்லுவார்கள். 11 அணா விற்றால் 10 அணா விற்க வேண்டும் என்று கூச்சல் போடுவார்கள். இப்படி 9 அணா, 8 அணா என்று போய்க்கொண்டே இருக்கும். இதற்கு அளவே இல்லை. விவசாய உற்பத்தி அதிகமாகி மூட்டை 10, 8 ரூபாய் விற்றால் தானாகவே விலை குறைந்து விடும். உள்ளே இருக்கும் நெல்லெல்லாம் வெளியே வந்து விடும். உற்பத்திக்கு வேண்டிய சாதனங்கள் குறைந்த விலைக்கு கிடைக்கவேண்டும். அப்படி இருந்தால் இந்தத் தீர்மானம் கூட தேவையில்லை. ஏதோ சம்பிரதாய முறையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏதோ ஒரு நாளைக்கு பொது மக்கள் பணம் இப்படி வீணாகட்டும் என்ற முறையில்தான் இது பலன் அளிக்குமே தவிர, விலையைக் குறைப்பதற்கு பயனளிக்கப்போவதில்லை. விவசாயப் பொருள்களின் விலையை குறைப்பதென்றால் எங்கள் உயிரே போகிறது. ஏதோ இம்மாதிரி பேசிவிட்டால் ஒன்றும் விலை குறைந்துவிடாது. எதை வேண்டுமானாலும் பேசிவிடலாம். எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்து விவசாயிகளுக்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய சாதனங்கள் குறைந்த விலைக்கு எளிதாக கிடைக்கும்படி செய்ய வேண்டும். அப்பொழுது தானாகவே விலை குறைந்துவிடும். ஆகவே, எதிர் கட்சியினர் ஒத்துழைத்து விவசாய உற்பத்திக்கு வேண்டிய சாதனங்களை குறைந்த விலைக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும், இதற்கு அரசாங்கமும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானம் அடியோடு கூடாது என்று எதிர்த்து என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*Sri T. KARIA GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் அன்பழகன் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் வாழ்க்கைச் செலவைப் பற்றி குறிப்பிட்டார்கள். நாம் சென்ற வாரம் பூராவும், கவர்னர் பெருமான் உரையின்மீது 5 நாட்களாக உணவுப் பிரச்னையைப் பற்றித்தான் இங்கு விவாதித்தோம். ஆகவே, இந்தத் தீர்மானம் இப்பொழுது இந்த சட்டமன்றத்தின் முன் அவசியமா இல்லையா என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. அமைச்சர் அவர்களும் கவர்னர் அவர்களின் உரையின் பேரில் நடந்த விவாதத்திற்கு பதில் அளிக்கையில் உணவுப் பிரச்னையைப்பற்றி விளக்கமாக தெரிவித்துவிட்டார்கள். வாழ்க்கைச்

[Sri T. Karia Gounder] [15th December 1959

செலவில் ஏற்படுகின்ற சர்க்கார் புள்ளி விவரத்தை ஒட்டிப் பார்க்கும் பொழுது, உற்பத்தி பெருக்கத்துடன் செலவை கணக்கிட்டு சர்க்கார் மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று நான் மிகவும் பணிவோடு சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். உற்பத்திச் செலவைப் பார்க்கும்போது, அந்த செலவானது வாழ்க்கைச் செலவை விட 474-லிருந்து, 900 சத விகிதம் உயர்ந்திருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்குத் தெரியாதது இல்லை. ரூ. 100-க்கு வாங்கின உழவு மாடுகள், இன்று 1,000 ரூபாய் கொடுத்தால் கூட கிடைப்பதில்லை. பத்து மடங்கு உற்பத்திச் செலவு பெருகியிருக்கிறது. மாட்டு தீவனத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, இதர உற்பத்திச் செலவை எடுத்துக் கொண்டாலும் சரி, அவை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது, சமீபத்தில் ஏதோ துரதிர்ஷ்ட வசமாக நிலச் சீர்திருத்தச் சட்டம் அடுத்த கூட்டத்திலேயே தயாராக்கப்பட்டு விடும் என்று தெரிவிக்கப்பட்டது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தை விரும்பாத, உச்ச வரம்பை விரும்பாத என் போன்ற மக்கள் இருப்பார்கள் என்பது சொல்லாமலே தெரியும். நாட்டிலே உற்பத்திப் பெருக்கத்தை கவனிக்கும் போது, சர்க்கார் மக்களுக்கு நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தினார்கள். நியாய விலைக் கடைகளிலேயும் ஒன்றும் சரியாக நடைபெறவில்லை என்று சொல்கிறார்கள். அதை ஆராய்ந்து பார்த்தால், அது சர்க்காருடைய பொறுப்பா? மேடையில் பேசும் பட்டினிப் பட்டாளத்தவர்கள், மந்திரிகள் மேல் குற்றம் சாட்டுபவர்கள், வியாபாரிகளைப் பற்றிச் சொல்லவில்லை. வியாபாரிகள் நியாயமாக நடந்து கொண்டிருந்தால் இந்த நெருக்கடி வந்திருக்காது என்று அவர்கள் சொல்லவில்லை பொதுக் கூட்டங்களில். அப்படிச் சொல்லிருந்தால் நாம் அவர்களுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருப்போம். அவர்கள் திரட்டிய பட்டினிப் பட்டாளத்தைப் பார்த்தால், சைனாக்காரன் கூட பயந்து விடுவான் என்று சொன்னார்கள். ஆகவே, 80 சதவிகிதமுள்ள விவசாயிகள் இந்த நிலையில் இருக்கிறோம். பெரிய விவசாயிகள் கூட வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. பருவ மழை சரியாகப் பெய்யவில்லை. பெய்தாலும், வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகள் இருக்கின்றன. விவசாயம் என்ன என்று தெரியாதவர்கள் இதையெல்லாம் பற்றிப் பேசுகிறார்கள். ஆற்றில் தண்ணீர் வரவில்லை. பாலாரில் வெள்ளம் இல்லை. காரணம் அந்த இடத்திலே பருவ மழை தவறி விட்டது. பத்து நாளைக்கு மழை இருந்தால் பயிர்கள் நன்றாக விளையும். அப்படி அதிக மழை பெய்தாலும் கஷ்டமாகி விடுகிறது. நோய் விழுகிறது. சர்க்கார் மருந்துகள் கொடுக்கவில்லையென்றும் பேசப்படுகிறது. உரம் சரிவர வினியோகிக்கப் படவில்லை யென்று சொல்லப்படுகிறது. அதெல்லாம் அமைச்சர் பொறுப்பா, எம்.எல்.ஏ.-க்கள் பொறுப்பா என்று கேட்கிறேன். லைசென்ஸ் கொடுக்கிறோம். எனக்கும் கூட உரம் கிடைக்கவில்லை. கூட்டுறவு முறையில் ஆனாலும் சரி, மற்ற வகையானாலும் சரி, தொந்தரவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆனால் கூட்டுறவு முறையில், பெரிய உத்தியோகஸ்தர்கள் தப்பு செய்யவில்லை. ஐம்பத்தி நான்கு படி கிடைக்கக்கூடிய மூட்டைக்குப்

15th December 1959] [Sri T. Karia Gounder]

பதில், 36 படி மூட்டைதான் கிடைத்தது. அம்மாதிரி நிகழாமல் இருக்க கவனம் செலுத்தியாக வேண்டும். அப்படியில்லாவிட்டால், உற்பத்திப் பெருக்கத்திற்கு உற்சாகம் இருக்காது என்று நினைக்கிறேன்.

விவசாயிகள் கட்டுப்படாக இல்லை. எண்பது சதவிகிதம் உள்ள விவசாயிகளுக்கு ரிபேட் கொடுக்க வேண்டும். மற்ற தொழில்களுக்கு மத்திய சர்க்கார் பல கோடி ரூபாய்களை மானியமாகக் கொடுக்கிறார்கள். எங்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். ரிபேட் கொடுத்தால் உணவு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்க முடியும். மின்சாரத்தைப் பற்றிக் குற்றம் சொன்னார்கள். மின்சாரமானது, எங்கள் ஜில்லாவிலும், மாகாணம் பூராவும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது, பல பம்பு செட்டுகளுக்காக. அமைச்சரவர்களைக் கூட இந்த சட்ட சபைக் கூட்டத்திற்கு வந்த காலத்தில் இந்த ஏழு நயா பைசாவைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவர்களும், அதைக் கவனிக்கலாம், குறைத்துக் கொள்ளலாம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். மின்சாரம் தேவையென்று சொல்லும் போது, ஜெனரேட்டர்களை வைத்தும், குந்தா போன்ற பெரிய, பெரிய திட்டங்களைப் போட்டும் மாகாணம் பூராவும் மின்சாரம் சப்ளை செய்யக் காரியங்கள் செய்கிறார்கள். நகரத்தில் வாழும் மக்கள், அவர்களுக்கும், அவர்கள் தொழில்களுக்கும் மின்சாரம் போதவில்லையென்று குறை கூறுகிறார்கள். மின்சாரம் இல்லாதிருந்தால், வட ஆற்காடு ஜில்லாவில் உற்பத்தியில்லாமல் போயிருக்கும்.

புளியைப் பற்றிச் சொன்னார்கள், பிரமாதமாகப் பேசப்பட்டது. ஆனால், இவ்வாண்டு புளி 10 பர்சண்ட் கூட விளையவில்லையென்பதை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். புளி என்றும் ஏற்றுமதி செய்யப்படவில்லை. அமைச்சரவர்கள் சொன்னது உண்மையானது. புளி விளைச்சல் அதிகமாக இருந்த காலத்தில், விலை நியாயமாக இருந்தது. விளைச்சல் குறைந்ததால், இந்தப் புளி திட்டு ஏற்பட்டிருக்கிறது. இதனால் விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது. வியாபாரிகள் பதுக்கி வைத்துக்கொண்டு, சரக்கு கிடைக்காமல் பண்ணியதால்தான் இவை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஏற்றுமதியினாலோ, சர்க்காருடைய கவனக்குறைவாலோ இந்த விலை உயர்வு ஏற்படவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த நியாய விலைக் கடைகள் வைத்ததன் காரணமாக, இப்பொழுதெல்லாம் எல்லோரும் அரிசி சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள். 'சர்க்கார் கடை வைத்திருக்கிறார்கள், அரிசி சாப்பிடலாம்' என்ற எண்ணம் வந்ததால், நியாய விலைக் கடைகளிலே அதிகக் கிராக்கி இருக்கிறது என்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். . . . (மணியடிக்கப்பட்டது.)

SRI V. K. KOTHANDARAMAN : On a point of information, Sir.

MR. SPEAKER : **இப்பொழுது ஒன்றும் இன்பர்மேஷன் இல்லை. கனம் சின்னதுரை பேசுவார்கள்.**

[15th December 1959

SRI V. K. KOTHANDARAMAN : On a point of order, Sir, கனம் கரிய கௌண்டர் பேசும்போது, ஆற்றில் தண்ணீர் போக வில்லையென்றார்கள். கவர்னர் உரை மீது பேசும் போது, ஏராள மான மழை பெய்திருக்கிறது என்றார்கள். எது உண்மை, எது உண்மையில்லை?

(Sri Karia Gounder rose.)

MR. SPEAKER : There is no point of order. The hon. Member, Sri Karia Gounder need not reply. I have ruled the point of order of the hon. Member Sri V. K. Kothandaraman out of order. The hon. Member Sri P. S. Chinnadurai may now speak.

SRI P. S. CHINNADURAI : கனம் சபா நாயகர் அவர்களே, நமது உணவு பிரச்சனை நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. உணவுப்பிரச்சனை சம்பந்தமாக இந்த நிலையிலே, சர்க்கார் தரப் பினருக்கோ, எதிர்கட்சி அங்கத்தினர்களுக்கோ கருத்து மாறுபாடு கிடையாது. விலைவாசிகள், அத்தியாவசியமான உணவுப் பண் டங்களின் விலைகள் ஏற்றம் அடைந்திருக்கிறது, அடைந்து வரு கிறது என்று நெடு நாட்களாகவே எதிர் தரப்பிலிருந்து கூறப்பட்டு வந்திருந்தாலும், அதை ஒப்புக்கொள்ளாமல் இருந்து, மேலும், மேலும் ஏறிப்போயிருக்கும் இந்த நிலையிலே, கவர்னர் பெருமான் அவர்களே, இந்த சர்க்காருடைய தலைவர் என்ற முறையிலே, இந்த ராஜ்யத்தின் தலைவர் என்ற முறையிலே, இந்த நிலையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற பக்குவம் ஏற்பட்டிருக்கிறது. விலை வாசிகள் ஏற்றம் அடைந்திருக்கின்றன, உணவுப் பண்டங்கள் விலை கள் சம்பந்த பட்ட மட்டில் அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் போதுமான பலன் அளிக்கவில்லையென்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் தீர்மானத்தில் எதுவும் முரணைக் குறிப்பிடவில்லை என்பதை அரசாங்கத் தரப் பிலிருக்கிற கனம் அங்கத்தினர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன். இந்தத் தீர் மானத்தில் என்ன குறைபாடு இருக்கிறது? விலைவாசி ஏற்றம் அடைந்திருக்கிறது, அதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட நட வடிக்கைகள் தோல்வி அடைந்து விட்டன என்பதுதான். அது உண்மை இல்லை? இதனை அரசாங்கத்தரப்பினர் ஏற்றுக் கொள்ள வில்லையா? அதை ஏற்றுக்கொண்டிருக்கும்போது சர்க்கார் தரப் பிலிருந்து பேசுகிற கனம் அங்கத்தினர்கள் ஏன் இதை எதிர்த்துப் பேசுகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசாங்கம் அவர்களே இதற்கு தக்க சமாதானம் கூறுவார் என்று எதிர் பார்க்கிறேன். அன்றாட அத்தியாவசிய உணவு பண்டங்களின் விலை உயர்ந்தால் ராஜ்யத்திலுள்ள மக்கள் கூக்குரல் போடுகிறார்கள். அதனைப்பற்றி குறைபட்டுக்கொண்டால் அது சரியாகாது என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன். மக்கள் போடுகிற கூக்குரல் எல்லாம் அரசாங்கத்தை எதிர்த்து அல்ல. அரசாங்கத்தால் கூட கட்டுப்பாடு செய்ய முடியாத நிலைமையில் விலைவாசி போய்க் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க தக்க பரிகாரம் காணப்பட வில்லை, அதைப்பற்றி சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான்

15th December 1959] [Sri P. S. Chinnadurai]

அவர்கள் கூக்குரல் போடுகிறார்கள். அதை அரசாங்கத்திற்கு எதிராக பெரும் கிளர்ச்சி செய்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. ராஜ்யத்திலுள்ள மாற்றுக் கட்சிகள் மாத்திரம் அல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் இதை எதிர்க்கவில்லையா? அவர்களிடத்திலும் இப்படிப்பட்ட கூக்குரல் இருக்கிறது. இதைப் பற்றி அரசாங்கமே சொல்லுகிறது. விலைவாசிகள் உயர்வதைத் தடுக்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை பலன் அளிக்க வில்லை என்று எல்லோருக்குமே நன்றாகத் தெரிகிறது. அதையே ஏன் திருப்பித் திருப்பி சொல்ல வேண்டும் என்று கனம் ஸ்ரீநிவாச அய்யர் சொல்கிறார். மறுபடி மறுபடி பேசி என்ன செய்வது என்று கேட்கிறார். பேசாவிட்டால் பிரச்சனை தீர்ந்து விடாது விலைவாசிகள் உயராமல் இருநதால் யாரும் அதைப்பற்றி பேச மாட்டார்கள், உணவு பண்டங்களும் அதிகமாக விலை ஏறியிருப்பதால்தான் அதைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். விலைவாசிகள் உயர்ந்து விட்டதால் தான் எல்லோரும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் இவ்வாறு பேசித்தான் ஆக வேண்டியதாக இருக்கிறது.

Mr. SPEAKER : ஒரே ஒரு நிமிஷம். கனம் அங்கத்தினர்கள் கேட்டுக்கொண்டபடி சபை இரண்டு மணி வரையில் உட்காரும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மந்திரிகளும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஒன்றரை மணிக்கு கனம் மந்திரி அவர்கள் தன்னுடைய பதிலைச் சொல்ல ஆரம்பிப்பார் என்பதை சபைக்குத்தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Sri P. S. CHINNADURAI : அதனால் எனக்கு அதிகப்படியாக ஐந்து நிமிஷங்கள் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : ஐந்து நிமிஷங்கள் கொடுக்க முடியாது. இன்னும் அநேக அங்கத்தினர்கள் பேச வேண்டியதாக இருக்கிறது.

Sri P. S. CHINNADURAI : குறைந்தது இரண்டு நிமிஷங்களாவது அதிகமாகக் கொடுக்க வேண்டும். இந்த இடையூரை ஈடு செய்வதற்காக.

விலைவாசிகள் ஏற்றம் அடைந்து இருப்பதற்குக் காரணம் பொதுவாக வளர்ந்து வரும் பொருளாதார நிலை என்றும் சிலர் குறிப்பிடுகிறார்கள். வளர்ந்து வரும் பொருளாதார விளைவினாலும், பல அபிவிருத்தி திட்டங்களினாலும் விலைவாசி உயர்ந்து வருகிறது என்றும் கூறுகிறார்கள். எந்த அளவுக்கு தேசிய வருமானம் அதிகரித்துக்கொண்டு வருகிறதோ அந்த அளவுக்கு விலை வாசிகளும் உயர்ந்து கொண்டு வருகிறது என்றும் குறிப்பிடுகிறார்கள். தனி நபர் வருமானம் உயர்வதாலும் விலைவாசி உயருகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த அளவில் தனி நபர் வருமானம் உயர்வதாகத் தெரியவில்லை. அதனால்தான் இப்படிப்பட்ட கூக்குரல் மக்களிடையே கிளம்பி இருக்கிறது. ஆகவே விலைவாசியைக் கட்டுப்படுத்த தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு இரண்டு விதமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒன்று இதற்கு உடனடியாக பரிகாரம் எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றொன்று நிரந்தரமான பரிகாரம். நிரந்தரமான பரிகாரம் என்னவென்றால் உணவு பண்டங்களின்

[Sri P. S. Chinnadurai] [15th December 1959

உற்பத்தியைப் பெருக்க வேண்டும். உற்பத்தியைப் பெருக்கினுல் தான் நிரந்தரமான பரிகாரம் காண முடியும். நமது ராஜ்யத்தில் தேவையான உணவுப் பொருள் உற்பத்தியாகிறது என்று புள்ளி விவரங்கள் சொல்லுகிறது. அந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் அரசாங்கம் கொடுத்த புள்ளி விவரங்கள்தான். அதை மாத்திரம் வைத்துக்கொண்டு சமாதானம் அடைந்து விடக்கூடாது. மேற் கொண்டு விளைச்சலுக்கு வழி காண வேண்டும். அதிகப்படியான விளைச்சலுக்கு நிபுணர்கள் பரிகாரம் சொல்லுகிருர்கள். உதாரண மாக ஜப்பானிய முறையைக் கடைப்பிடித்து விளைச்சலை அதிகரிக்க வேண்டும் என்று சொல்லுகிருாகள். ஜப்பானிய முறையை கடைப் பிடித்தால் ஏக்கருக்கு 90 பவுண்டு அதிகமாக விளைச்சலை எதிர் பார்க்கலாம் என்று சொல்லுகிருர்கள். வேண்டிய அளவுக்கு ரசாயன உரத்தை பயன்படுத்தலாம் என்றும் சொல்லப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 100 பவுண்டு ரசாயன உரம் போட்டால் சாதாரண மாக விளையக்கூடியதை விட அதிகமாக 200 பவுண்டு விளைச்சல் கிடைக்கும் என்று நிபுணர்கள் சொல்லுகிருர்கள். இதைப்பார்த்து நாம் அனைவரும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆகவே இது விஷயத்தில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக் கிறது. விளைச்சல் இருக்கக்கூடிய 52 லட்சம் ஏக்கரில் 14 லட்சம் ஏக்கரில்தான் ஜப்பானிய முறையில் சாகுபடி செய்யப்படுகிறது என்றும் அதுதான் அமுலில் இருக்கிறது என்றும் சொல்லப்படு கிறது. பாக்கி இருக்கக்கூடிய 38 லட்சம் ஏக்கரில் ஏன் இந்த சாகு படி முறை வரவில்லை. வெற்றி இருக்கிறது என்று சொல்லும் போது அதை ஏன் இந்த 38 லட்சம் ஏக்கருக்கும் கொண்டு வரவில்லை. ரசாயன உரம் தேவையைப் பார்க்கும் போது அது சப்ளை செய்யப் படுவதைப் பார்த்தால் அதை எட்டிப் பார்க்க முடியாமல் இருக் கிறது. இதை சரியானபடி விநியோகிக்க திட்டம் போட வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை இல்லையா. அரிசி தேவையாக இருப்பதோடல்லாமல் புஞ்சை தானியங்களும் அதிகப் படியாக தேவையாக இருக்கிறது. புஞ்சை தானியங்களும் மிக அத்தியாவசியமாக வேண்டியதாக இருக்கிறது. ஆகவே புஞ்சை தானிய விளைச்சலையும் அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. இதிலும் முக்கியமான கவனம் செலுத்த வேண்டும். இப்பொழுது சுமார் 45 லட்சம் ஏக்கர் புஞ்சை புறம்போக்கு நிலங் களாக இருக்கிறது. அவற்றை சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. எந்த அளவில் அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். இவற்றில் ஒரு சத விகிதம் நிலம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத் தில் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அது சரியானது அல்ல, அப்படிக் கொண்டு வராமல் இருப்பது. குறைந்த பட்சம் 20 சத விகிதமாவது கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். இதை யெல்லாம் சர்க்காருடைய புள்ளி விவரங்களிலிருந்து எடுத்துச் சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்தைப் பெருக்குவதற்கு மின்சாரம் விவசாயிகளுக்கு அத்தியாவசியமாக இருக்கிறது. மின்சார அபி விருத்தியில் அரசாங்கம் மிகுந்த அக்கறை காட்டி வருகிருர்கள். ஆனுல் அதை விநியோகம் செய்யும் போது குறைந்த விலைக்கு

15th December 1959] [Sri P. S. Chinnadurai]

விவசாயிகளுக்குக் கொடுத்து உதவ வேண்டும். அதன் கட்டணத்தைக் குறைக்க வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது ஏழு நயா பைசாவுக்கு மின்சாரம் சப்ளை செய்கிறார்கள். அந்தக் கட்டணத்தைக் குறைத்து நான்கு நயா பைசாவுக்குக் கொடுக்கும் படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிக் குறைந்த கட்டணத்திற்கு சப்ளை செய்யவேண்டும் என்று சர்க்காரை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

அது போக உடனடியாக பரிகாரம் காண்பது என்பதைப்பற்றி குறிப்பிடும்போது, மண்டலமாக இருந்துதான் ஆக வேண்டும் என்ற நிலைமையில் மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவையும் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நமக்கு 2½ லட்சம் டன் தேவையாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. அது குறைந்த பட்சம் என்றும் கூறப்படுகிறது. குறைந்த பட்சம் 4½ லட்சம் டன்னாவது வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு உரிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டும்.

சர்க்காரே விநியோகிப்பதைப் பார்த்தால் அதில் எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றன. சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் ஒரு குடும்பத்திற்கு 24 பவுண்டு டி.யு.சி.எஸ். மூலமாகக் கொடுக்கப்படுகிறது. என் பகுதி கிராமங்களில் பார்த்தால் ஒரு குடும்பத்திற்கு ஒரு பவுண்டு வீதம் தான் கொடுக்கப்படுகிறது. இந்த அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள தாசில்தார் உத்தரவு போட்டிருக்கிறார். இது நியாயமா என்று கேட்கிறேன். நகரத்தில் கொடுக்கக்கூடிய 24 பவுண்டு எங்கே கிராமங்களில் இருக்கக்கூடிய ஒரு பவுண்டு எங்கே? இது நியாயமான விநியோகமா என்று கேட்கிறேன். இப்பொழுது கிராமங்களில் அதிகப்படியாக காபி, டீ அருந்துகிறார்கள். அவர்களிடையே அவைகள் இப்பொழுது சாதாரணமாக பழக்கமாகி இருக்கிறது. கனம் சின்னையா கவுண்டர் விலைவாசிகளை குறைக்க வேண்டும் என்று சொன்னார். விவசாயிகள் வாங்கக்கூடிய ரசாயன உரம், விவசாயக்கருவிகள் எல்லாம் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. அவற்றை அவர்களால் வாங்க முடியவில்லை. அதனால் அவர்கள் கவலைப்படுகிறார்கள். அந்தக் கவலையைப் போக்க வேண்டும். குறைந்த விலையில் அவர்களுக்கு வேண்டிய கருவிகளை சப்ளை செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் தான் என்னுடைய திருத்தம் இருக்கிறது. என்னுடைய திருத்தம் எல்லாம் விவசாயிகளுக்கு சௌகர்யமான அளவில்தான் இருக்கின்றன. ஆனால் எதிர் கட்சியில் உள்ளவர்கள் இந்த தீர்மானத்தை ஆதரிக்கும் அளவில் அரசாங்கத்தையே அடியோடு எதிர்ப்பதாகக் கூறுகிறார்கள். சர்க்காரை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. கட்சி உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல் தான் திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களை பணிவோடு வேண்டிக்கொள்ளுகிறேன். சர்க்கார் மீது நம்பிக்கை இல்லை என்ற அடிப்படையில் ஒரு கண்டனத் தீர்மானமாக

[Sri P. S. Chinnadurai] [15th December 1959

இதைக்கொண்டு வரவில்லை. சர்க்கார் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தத் தீர்மானமும் அதற்கு திருத்தங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சர்க்காரே தாங்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை தோல்வியுற்று விட்டது என்று நினைக்கக்கூடிய அளவில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இனிமேல் எந்த முறையைக் கையாள வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் மூலமும், அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்கள் மூலமும் எதிர்கட்சியிலிருந்து கூட சர்க்காருக்கு உதவி வருகிறது என்பதை சர்க்கார் தரப்பிலுள்ள கனம் அங்கத்தினர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும், வேறு வகையாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று பணிவோடு வேண்டிக்கேட்டுக்கொள்ளுகிறேன். இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

12-30 p.m.

*SRI M. A. MUTHIAH CHETTIAR: கனம் உப தலைவர் அவர்களே, உணவுப் பிரச்னையைப்பற்றி இங்கே ஒரு தீர்மானம் கொண்டுவந்து அதை இங்கே விவாதிப்பது மிகவும் அவசியமானதுதான். இந்த விவாதத்தில் கலந்து கொண்டவர்கள் என் அபிப்பிராயத்தில் பல கருததுக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஸ்ரீ சின்னதுரை அவர்கள் சொன்னதுபோல சர்க்காரைக் கண்டிக்க இந்தப் பிரேரணை கொண்டு வந்திருப்பதாக யாரும் நினைக்கக்கூடாது. இந்தப் பிரச்சனையை சமாளிப்பது என்பது மிகவும் கஷ்டம். இந்தப் பிரச்சனையை நல்ல முறையில் சமாளிப்பதற்கு வேண்டிய யோசனைகளை சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதுதான் தீர்மானத்தைக் கொண்டு வந்தவருடைய, இந்தத் தீர்மானத்தில் கலந்துகொண்டு பேசுபவர்களுடைய நோக்கமாக இருக்கிறது. அதில் சந்தேகம் இல்லை. அதுவும் நமது உணவு அமைச்சர் அவர்கள் முன்பு மராமத்து இலாகா அமைச்சராக இருந்து சிறப்பான முறையில் பணியாற்றியவர். நாம் இப்போது மத்திய சர்க்காரிடம் இருந்து 2½ லட்சம் டன் தானியம் வாங்கலாம், விநியோகிக்கலாம். கொள்முதல் செய்யலாம். இது எல்லாம் இந்த ராஜ்யத்தினுடைய உணவுப் பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்க உதவி செய்யாது. இதற்கு என்ன வழி என்றால் மூன்று திட்டங்கள்தான் இருக்கின்றன. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஒன்று கூடச் சொல்லவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதைப் பரிசீலிக்கலாம் என்று கூடச் சொல்லவில்லை. இதுவும் இப்போது கொள்ளிடம், காவேரியில் வெள்ளம் போய்க்கொண்டிருக்கிறது. மெட்ராஸ் மெயிலில்கூட போட்டோ எடுத்து நான்கைந்து மாதங்களாகவே இப்படி வெள்ளம் அணைக்கு மேலாக வழிந்து கொண்டிருக்கிறது, இப்படி இருந்தால் அணைக்கே ஆபத்து வரலாம் என்று நான்கைந்து நாட்களுக்கு முன்பாக வெளியிட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்த பிறகுதான் இப்படி நான்கைந்து மாதங்களாக வெள்ளம் போய்க்கொண்டிருப்பது எனக்குத் தெரிந்தது. நான்கைந்து வருஷங்களுக்கு ஒரு முறை தண்ணீர் தட்டு ஏற்படலாம். அதைப்பற்றிக் கவலையில்லை. நடுவில் மூன்று வருஷங்கள் வெள்ளம் உண்டாகி, வீணாகக் கடலில் போய் விழுகிற

15th December 1959] [Sri M. A. Muthiah Chettiar]

தண்ணீரை உபயோகப்படுத்திக்கொள்ளத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். காவேரியில் இரண்டு அணை கட்டினால் போதும். அந்தத் தண்ணீரைத் தேக்கி புதுக்கோட்டை, திருச்சி முதலிய பக்க இடங்களில் எல்லாம் நன்றாகச் சாகுபடி செய்வதற்கு அது மிகவும் பயன்படும். ப்ளானிங் கமிட்டியில் இதை எடுத்துச் சொல்கிறேன் என்று அமைச்சர் சொன்னால் போதும். அதுவே மிகுந்த திருப்தியாக இருக்கும். இன்னும் கிருஷ்ணா பெண்ணையாறு ஸ்கீம் இருக்கிறது. இந்தத் திட்டமும் மிகவும் முக்கியமானது. இதற்கே ஒரு நூறு, நூற்றைம்பது கோடி ரூபாய் செலவாகும். அப்புறம் பெரியார் திட்டம் இது 20 கோடி செலவாகலாம். இந்த கிருஷ்ணா பெண்ணையாறு திட்டத்தினால் தென்னாற்காடு, வடாற்காடு முதலிய பகுதிகள் எல்லாம் நன்றாக வளம் பெறும். அதுபோலவே ராஜ பாளையம் பக்கத்தில் அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றினால் திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்கள் வளம் பெறும். ஈரோடுக்குக் கிழக்கே காவேரியில் அணை கட்டினால் தஞ்சாவூர் ஜில்லாவின் சில பாகம், திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே முதலிய இடங்களில் நன்றாகச் சாகுபடி செய்ய முடியும். மைசூர் ராஜ்யத்திற்குச் சொல்லிவிடுங்கள். அவர்கள் இப்போது கொடுக்கிறபடி, அவர்கள் அணை நன்றாகத் தேங்கி, வழிகிற ஜலத்தைக் கொடுத்தால் போதும், அதற்காக அவர்கள் சிரமப்படவேண்டாம், நமக்கு இருக்கிற மழை வெள்ளத்தைப் பயன்படுத்திக்கொண்டே இந்தத் திட்டத்தைச் சரியாகச் செய்துவிட முடியும். நான் ஒன்றும் கணக்குப் போட்டுப் பார்க்கவில்லை. இருந்தாலும் இந்தத் திட்டத்திற்கு எல்லாம் சுமாராக இருநூறு, இருநூற்றைம்பது கோடி ரூபாய் செலவாகலாம். உத்தேசமாகத்தான் சொல்கிறேன். இப்போது வடக்கேதான இந்த மாதிரி கோடிக்கணக்கில் செலவிடுகிறார்களே தவிர இங்கே அப்படிச் செலவு செய்வது கிடையாது. மத்திய சர்க்கார் இந்த மூன்று திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்துவதுதான் நம் சர்க்காரின் கடமை. மந்திரி பக்தவத்சலம் மராமத்து இலாகா மந்திரியாக இருந்து ஆற்றியிருக்கும் பணிகளை எல்லாம்விட இப்போது இந்த மூன்று திட்டங்களையும் நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொண்டால் மிகவும் பெருமையாக இருககும். கனம் கக்கன் மராமத்து மந்திரியாகவும், கனம் காமராஜ் முதல் மந்திரியகவும், கனம் ராமையா மின்சார இலாகா மந்திரியாகவும் இருக்கிற காலத்தில் இந்தத் திட்டம் வரவில்லை என்றால் அப்புறம் மக்களுக்கே நம்பிக்கை இல்லாது போகும். ஒன்றிரண்டு வருஷங்களுக்குள் இந்தத் திட்டம் வந்துவிடவேண்டும் என்று நான் சொல்லவில்லை. வரவும் முடியாது. உடனடியாக கிருஷ்ணா பெண்ணையாறு திட்டத்திற்கும், ராஜபாளையம் திட்டத்திற்கும் எஸ்டிமேட் தயாரிக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஈரோட்டுக்குக் கிழக்கே அணைகட்ட ஏற்பாடு செய்யலாம். அதுவும் இப்போது மெட்ராஸ் மெயிலில் தொடர்ந்தாற்போல வருஷத்தில் நான்கு மாதங்களுக்கு மேல் மேட்டூர் அணையில் வெள்ளம் போய்க்கொண்டிருக்கிறது என்கிற செய்தியை எல்லோரும் பார்த்திருக்கலாம். இந்த

[Sri M. A. Muthiah Chettiar] [15th December 1959

சமயத்தில் இதை வற்புறுத்துவது மிகவும் அவசியம். நாம் இன்னும் இதைப்பற்றிச் சொல்லவேயில்லை. டெல்லியில் உள்ளவர்களுக்கு நாம் இதை வற்புறுத்திச் சொல்லி, அவர்கள் இதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒப்புக்கொள்ளாவிட்டால் ப்ரொடெஸ்ட் பண்ணவேண்டும். இந்தக் காரியம் நிறைவேறினால்தான் நமது ராஜ்ய உணவுப் பிரச்சனை நிரந்தரமாகத் தீரும் என்று சொல்லிக் கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

* SRI S. NAGARAJA MONIGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் இரண்டு விஷயங்களைச் சொல்வது அவசியம் என்று கருதுகிறேன். முதலாவது இந்தத் தீர்மானமே எனக்குச் சரியாக விளங்கவில்லை.

"This House is of opinion that the measures taken by the Government to arrest the upward trend in the price of Foodgrains and other essential articles have failed to achieve the objective.... "

ஒரு வகையில் சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்துவிட்டது என்று திட்டவட்டமாகத் தீர்மானம் சொல்கிறது. அடுத்த அடியில் வேறு என்ன செய்ய வேண்டும் என்பது இந்தத் தீர்மானத்தில் இருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அது சொல்கிறது."

".. and therefore recommends to the Government to take effective steps to prevent speculative activities of vested interest and to ensure supply of foodgrains to the public at reasonable prices, at the same time ensuring fair price for the Agriculturists.'

விவசாயிகளுக்குத் தக்க விலை இருக்கவேண்டுமென்று இந்தத் தீர்மானத்தில் கண்டிருப்பது வரவேற்கத் தக்கது. அதைப்பற்றி மெம்பர்கள் பேசியது இப்போதைக்கு அவசியம் இல்லை என்பது என் அபிப்பிராயம். அடுத்தபடியாக இந்தச் சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்து விட்டது என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டு, இனி தக்க நடவடிக்கைகளைச் சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாக இந்தத் தீர்மானம் சொல்வதுதான் விசித்திரமாக இருக்கிறது.

வட்டார உணவு மண்டலத்தில் நமது ராஜ்யம் இருப்பது இனி சரிப்படாது என்பது அவர்களுடைய கருத்து. சர்க்காருக்கும் ஒருவகையில் அந்தக் கருத்து இருக்கிறதென்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் கடைசி வரையில் சர்க்காருடன் ஓடத்தில் வருவார்களா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மலையாளம், கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகியவை ஒன்று சேர்ந்த இன்பத் திராவிடம் கனிகின்ற நாள் என்றோ எனக் கனவு காணுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர்கள் உணவுப் பிரச்சனையிலாவது இவை நான்கும் ஒன்றாகச் சேருகின்ற வாய்ப்புக் கிடைத்ததே என்று சந்தோஷப்படுவார்கள் என்று எண்ணியோ என்னமோ நமது சர்க்கார் இந்த ஜோனல் கவுன்சிலுக்கு ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அவர்கள் காணுகின்ற

இன்பக் கனவு நாடு கிடைக்காவிட்டாலும் இந்த நிலையிலாவது இன்றையதினம் உணவு சம்பந்தப்பட்டவரையில் கிடைத்ததைப் பெருமையாகக் கொள்ளலாம். ஆனால் முத்தையா செட்டியாரைப் போன்றவர்கள் வடக்கே தெற்கே என்று பேசுவது எனக்குப் புரியவில்லை. ஆனால் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரும்கூட உணவு மண்டலத்தில் சேர்ந்தோம், இனி ஏன் பிரிந்து போகக்கூடாது என்கிறார்கள். இதற்குக் கூடவா சுயராஜ்யம் கிடையாது என்கிறார்கள். இப்படிப்பட்ட சுயராஜ்யம் வழங்குவது என்றால் நாளைக்கு மலையாளத்தைச் சேர்ந்தவர்கள் பட்டினி கிடப்பதற்குக்கூடவா எங்களுக்கு சுயராஜ்யம் இல்லை என்றுதான் கேட்கவேண்டி வரும். நண்பர்கள் தவறாக எண்ணிக் கொள்ளக்கூடாது. சபாநாயகர் மூலமாகச் சொல்கிறேன். பட்டினிப் பட்டாளமாக, ஓட்டலில் சென்று எச்சில் எடுக்கவும், டேபிள் துடைக்கவும் கூடவா எங்களுக்கு சுயராஜ்யம் கிடையாது என்கிற அளவில் உணவு மண்டலம் ஒன்றுமில்லாமல் ஒவ்வொன்றும் தனியாகப் பிரிக்கப்படுமானால்

SRI P. U. SHANMUGHAM : On a point of order மலையாளி சமூகத்தை ஹோட்டல்களில் எச்சில் எடுக்கவும், டம்ளர் துடைக்கவும், டேபிள் துடைக்கவும் இருக்கிறார்கள் என்று இழிவுபடுத்திச் சொல்வது முறையா ? அப்படி இந்த மன்றத்தில் பேசுவது முறையாகுமா என்று அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : தயவு செய்து அங்கத்தினர் அவர்கள் அந்த பதத்தை வாபஸ் வாங்குவது நல்லது. நான் அப்பொழுதே சொல்லலாமென்று நினைத்தேன்.

SRI S. NAGARAJA MONIGAR : வாங்கிக் கொள்கிறேன்.

SRI C. N. ANNADURAI : The Hon. member has not withdrawn the statement.

DEPUTY SPEAKER : வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் என்று சொன்னார்.

* SRI S. NAGARAJA MONIGAR : நல்ல தமிழில் சொன்னேன். மறுமுறையும் இன்னும் எந்தத் தமிழில் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்கிறேன். நான் வாபஸ் வாங்கிக் கொண்டேன்.

என் கருத்து, அந்த உண்மையை அங்கத்தினர்கள் உணர்ந்திருக்கிறார்களா என்று அறியவே அல்லாமல், புள்ளி விவரங்களால் தப்பி விடவில்லை என்று முன்பு ஒரு அங்கத்தினர் சொன்னார், அதேபோல், நான் சொன்ன சொல்லில் வித்தியாசம் இருந்தால் அதை ஏற்றுக்கொள்கிறேன். நான் தப்பிவிட விரும்பவில்லை.

[Sri S. Nagaraja Monigar] [15th December 1952

ஆனால் நான் சொல்வதின் கருத்தை அவர்கள் உணரவேண்டும். அந்த நாட்டு மக்கள் பட்டினியால் சாவதை அவர்கள் வரவேற்கிறார்கள்? இந்த சுயராஜ்யத்தினால். கேரளத்தில் . . .

DEPUTY SPEAKER: நம் மாகாணத்தைப் பற்றித்தான் பேசவேண்டும். கேரள மாகாணத்தைப் பற்றி பேசக்கூடாது.

*Sri S. NAGARAJA MONIGAR: 2¾ வருடங்களாக, உணவு விலை ஏறியிருக்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று நாம் சொல்லி வருகிறோம், என்று சொன்னார்கள். அதற்கு முன்னால் கூட விலை ஏறியிருக்கிறது, ஒரு வருட காலமாக. ஆகவே, திடீரென்று, இது மக்களை பாதிக்கக் கூடிய காரியம், அதற்கு ஒரு தீர்மானம் என்று வரும்போது, இதைப்பற்றி நாம் பேசித் தீர்க்கவில்லையா என்று பார்க்கும்போது இதை ஒரு பழம் பிரச்சனை என்றுதான் ஏற்றுக் கொள்ளவேண்டும். எத்தனை பட்ஜட்டுகள், எத்தனை முறை விவாதித்திருக்கிறோம். ஆனால் உணவுப் பொருள்களின் விலை, அதிக விலையில் விற்பதை சர்க்காரோ அல்லது யாரும் ஆமோதிக்கவில்லை. ஆனால் விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். அதில் ஆட்சேபிப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் விலைகள் இறங்குவதற்கு என்ன செய்யவேண்டும், புளி விலையை இப்படி இறக்கி இருக்க வேண்டும், இப்படிச் செய்ய அரசாங்கம் தவறிவிட்டது என்று கூறியிருந்தால் அது வரவேற்கத் தக்கதாயிருக்கும். 1¾ லட்சம் ஒரு கூட்டுறவு சொஸைட்டியில் சிதம்பரத்தில் உணவுத் தான்யம் பாழாகிவிட்டதென்று சொன்னார்கள். சர்க்கார் செய்யும் முறை சரியல்ல என்றும் சொன்னார்கள். ஒத்துழைப்பு இருந்தால்தானே. ஒரு புறம் ஒத்துழைப்பு தருகிறோம் என்று பேசிவிட்டு அதற்கு நேர் எதிராக இன்னொரு பக்கத்தில் வேலை செய்யும்போது சர்க்கார் என்ன செய்ய முடியும்? அந்த கூட்டுறவு சங்கத்தில் உள்ளவர்கள் ஸேட்கள் அல்ல. அங்கு மோசடி செய்தவர்கள் திராவிடர்கள் தான், தூய தமிழர்கள்தான். அவர்கள் நடந்து கொள்கிற முறைக்கு சர்க்கார் என்ன செய்யும்? அதற்கு ஒத்துழைப்பு தவிர வேறு வழியில்லை. வியாபாரிகள் விலையை ஏற்றுகிறார்கள் என்பதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால் எந்த மேடையில் எந்த அளவிற்கு வியாபாரிகள் விலையேற்றத்தைத் தடுப்பதற்கு வகை செய்ய முடியுமோ அதைச் செய்தால் இதை ஏற்றுக்கொள்ளலாமே தவிர மற்றபடி இதில் சாரம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை என்று கூறிக்கொண்டு நான் எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*Sri K. SATTANATHA KARAYALAR: உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நம் முன்னால் இருக்கக்கூடிய விவாதத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் இரண்டு குரல்களில் பேசுவதைக் கேட்கிறோம். விலைவாசி உயர்வு இருக்கத்தான் செய்யும், அது வேண்டியதே என்று வலியுறுத்தி ஒரு சில நண்பர்கள் பேசினார்கள். ஆனால் அவர்கள் மத்தியிலே விலைவாசி உயர்வு இன்று மக்களை பாதித்து விட்டது என்று அங்கலாய்க்கிறவர்களும் இருக்கிறார்கள். விலைவாசி உயர்வு என்று சொல்லும்போது கணிசமான

15th December 1959] [Sri K. Sattanatha Karayalar]

அளவு உயர்ந்து விடவில்லை, ஏதோ தற்சமயம் மந்தப் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதாகவும் சர்க்கார் தரப்பிலுள்ள ஒரு சிலர் சொன்னார்கள். நான், சர்க்கார் தரப்பிலிருந்து வந்திருக்கக்கூடிய ஸ்டாட்டிஸ்டிக்ஸ் டிப்பார்ட்மென்ட்டிலிருந்து வந்திருக்கக்கூடிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் ஒரு சில விஷயங்களை இந்த சபையின் முன் வைக்க விரும்புகிறேன். உணவு தான்யங்களின் விலைவாசி, 4—1—1958-ல் 513 புள்ளியாக இருந்தது 21—11—1959-ல் 584 ஆகியுள்ளது. கமெர்ஷியல் ப்ராடக்ட்ஸ், அதாவது வியாபாரப் பொருள்களின் விலைவாசி, 4—1—1958-ல் 489 ஆக இருந்தது 21—11—1959-ல் 592 ஆக உயர்ந்திருக்கிறது. இது, அத்தியாவசிய மான அரிசி, நெல் போன்றவைகளைப் பொறுத்த விலைவாசி உயர்வு. அடுத்தப்படியாக "சில்லீஸ்"-யை மிளகாய் வற்றலை எடுத்துக்கொண் டால் 1958 ஜனவரி 4-ம் தேதி வீசை ஒன்று ரூபாய் 2·73 நயா பைசாவாக இருந்தது 1959 நவம்பர் 21-ல் 4·79 ஆக உயர்ந்திருக் கிறது. புளி, வீசை ஒன்றுக்கு 1958 ஜனவரி 4-ம் தேதி 69 நயா பைசாவாகயிருந்தது 21—9—1959-ல் 2.75 நயா பைசாவாக உயர்ந் துள்ளது. இன்று மார்க்கட்டில் அது 4 ரூபாய்க்கு குறைந்து கிடைப்பதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த விலை வாசி உயர்வு நியாயமான விலைவாசி உயர்வு என்று அரசாங்கத் தரப்பிலிருந்து வாதிக்கிறார்களா என்று நான் அறிய விரும்பு கிறேன். "டெவலப்பிங் எக்கானமியில்" அதாவது வளரும் பொருளாதாரத்தில் விலைகள் உயரத்தான் செய்யும். அது சரியானதுதான் என்று வாதம் செய்யப்பட்டது. அதே நேரத்தில் நாட்டில் உற்பத்தி வளர்ந்து கொண்டிருக்குமானால் இந்த விலை வாசி உயர்வுக்கு நியாயமே கிடையாது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நாட்டில் உற்பத்தி பெருகிக் கொண்டே வருகிறது என்று சர்க்கார் தரப்பிலிருந்து சொல்லப்படுகிறது. அது உண்மை யானால் இந்த விலைவாசி உயர்வுக்குள்ள காரணங்கள் என்ன என்று சொன்னால் நன்றாயிருக்கும். நெல் விலை உயரும்போது மற்ற பொருள்களின் விலைகளும் உயருகிறது. அது, "டெவலப்பிங் எக்கானமி" என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது. இது ஒரு "விஷியஸ் சர்க்கிள்" ஒரு பொருளின் விலை உயர்ந்து விட்டால் மற்ற பொருள்களின் விலையும் உயர்ந்து விடுகிறது. விலை வாசிகளை பார்த்துக் கொண்டிருந்தால், திடீரென்று ஒரு குதிப்பு வருகிறது. அதைத் தொடர்ந்து ஓரளவு மந்தப் படுகிறது. திரும்பவும் விலை உயருகிறது. தற்சமயம் விலை மந்தப் பட்டிருக் கிறது என்று ஒரு சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். எந்தளவு மந்தப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் சாதாரண மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய முறையில் இருக்கிறதா என்று பார்த் தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். விலைவாசி உயர்வு விவசாயிகளுக்கு சாதகமாயிருக்கும் என்று ஒரு சிலரால் வாதிக் கப்பட்டது. வாங்கக் கூடியவர்களுக்கு இது சாதகமாயிருக் கிறதா? விற்கக் கூடியவர்களுக்குத்தான் ஓர் அளவு சாதகமா யிருக்கக்கூடும். இன்று நம் நாட்டில் விற்கக் கூடியவர்களின் பெர்சென்ட்டேஜ் என்ன? கழிந்த சட்டசபை பட்ஜெட் விவாதத் தின்போது விலைவாசி கணிசமாக உயர்ந்து விடாது, அதை நம்மால் கட்டுப்படுத்த முடியுமென்று குறிப்பிட்டார்கள். 50 லட்சம் டன்

[Sri K. Sattanatha Karayalar] [15th December 1959

நம் நாட்டில் உற்பத்தியாகிறது என்றால் அதில் விற்பதற்காக மார்க்கட்டில் வரக்கூடியது 10 லட்சம் டன்தான் வரும், என்று சொன்னார்கள். ஆக சுயதேவை போக சந்தையில் கொண்டு வந்து விற்கக் கூடியது ஐந்தில் ஒரு பங்குதான் இருக்கிறது. ஆகவே விலைவாசி கட்டுப்பாட்டால் பாதிக்கக்கூடிய பகுதி ஒரு சிறு பகுதி தான். உற்பத்திச் செலவுக்குத் தக்கபடி விலைவாசி இல்லை என்று சொல்லும்போது உற்பத்திச் செலவு உயர்வதற்கு காரணமென்ன வென்று சிந்திக்க வேண்டும். காங்கிரஸ் தரப்பிலுள்ள ஒரு அங்கத்தினர் சொன்னார், இன்று உப்பு, யூரியா, அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்களின் விலை எட்டிப் பிடிக்க முடியாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். இவைகள், சர்க்கார் கட்டுப்பாட்டில் இருக்கும் பொருள்கள். சர்க்கார் தரப்பிலே உரங்கள் விநியோகம் செய்யக்கூடிய முறையைதான் இது பிரதிபலிக்கிறது. உரம், இன்று நம் நாட்டில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், தனியார் மூலமும் விநியோகிக்கப்படுகிறது. என் கையில் இப்பொழுது, நெல்லை ஜில்லாவில் உரம் விநியோகம் செய்பவர்களின் பெயர்கள் இருக்கின்றன. நவம்பரில் 300 டன் விநியோகத்திற்கு வந்தது. இதில் பாதி கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டது. மற்ற பாதி தனிப்பட்ட லைஸென்ஸ்காரர்கள் விநியோகம் செய்திருக்கிறார்கள். தனியார்கள் அத்தனை பேர்களும், ஒரே ஒரு கம்பெனியைத் தவிர, அவர்களின் பெயர்களை வேண்டுமானாலும் வாசிக்கிறேன், மற்றவர்கள் அத்தனை பேர்களும் மண்டல காங்கிரஸ் அங்கத்தினர்களாக இருக்கக் கூடியவர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருவேளை இவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்களான பிறகு வியாபாரிகளாக வந்திருக்கலாம், அல்லது வியாபாரிகள் எல்லாம் காங்கிரஸ்காரர்களாக ஆகி இருக்கலாம். சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற கொள்கையின்படி அவர்கள் நடந்துள்ளார்களா? எந்த விதத்தில் விநியோகம் செய்கிறார்கள்? இன்றைக்கு அதிகமாகவும் பிளாக் மார்க்கட்டில்தான் விற்று வருகிறார்கள் என்பது தெளிவு. இன்றைக்கு கூட்டுறவு சங்கத்தின் மூலமாக கொடுக்காமல் தனிப்பட்ட நபர்கள் மூலமாகக் கொடுத்து, அதன் மூலமாகச் சரியான அளவில் விநியோகம் நடைபெறவில்லை என்றால், அதற்குப் பொறுப்பு ஆளும் கட்சியை சேர்ந்தவர்களும், குறிப்பாக காங்கிரஸ்காரர்கள் தானே தவிர வேறு யாருமில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். இன்றைக்குச் சரியாக உர விநியோகம் நடைபெறவில்லை என்றால் அந்தப் பொறுப்பை ஆளும் கட்சிதான் ஏற்றுக் கொள்ளவேண்டுமே தவிர வேறு யாருமல்ல.

அடுத்தபடியாக, விலைவாசியை நிரந்தரமாக குறைப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள், இதற்காக எடுக்கப்பட்ட அரசாங்கத்தின் திட்டவட்டமான கொள்கை என்ன என்றால் திட்ட வட்டமான கொள்கை ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. கழிந்த ஓராண்டு காலமாக அரசாங்கத்திலிருந்து பலவிதமான அறிக்கைகளையும் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள், மேலும் ஆளுகின்றவர்களின் பேச்சுகளிலிருந்தும் அரசாங்கத்தின் திட்ட வட்டமான கொள்கை என்னவென்று

15th December 1959] [Sri K. Sattanatha Karayalar]

அறிந்துக்கொள்ள முடியவில்லை. சில சமயங்களில் ப்ரொக்யூர் மென்ட் செய்யப்போவதாக சொல்லுகிறார்கள். இதைச் சொன்ன மறு நேரத்தில் இதை கைவிடப்போவதாக சொல்லுகிறார்கள். இவ்விதம் அடிக்கடி அரசாங்கம் தன் கொள்கைகளை மாற்றிக் கொண்டிருப்பதின் காரணமாக சிலர் தனிப்பட்ட முறையில் லாபம் சம்பாதிப்பதற்கு சாதகமாக இருக்கிறது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். சர்க்காருடைய கொள்கை நிலையற்ற தாக இருக்கிறது. இவ்விதம் போடப்படும் கொள்கையெல்லாம் கடைசியில் தனிப்பட்ட நபர்களுக்கு லாபமாகச் சென்று முடிகின் றது. ஒரு திட்டத்தை எடுத்து நடத்தவேண்டும் என்று சர்க்கார் நினைத்தால் அதற்கென்று திட்டவட்டமான கொள்கையை வகுத்துக் கொள்ளவேண்டும். பெயரளவில் மட்டும் ஏதோ ஒரு கொள்கையை ஏற்படுத்தியிருக்கிறோம் என்ற அளவில் இல்லாமல் திட்டவட்டமான கொள்கை இருக்கவேண்டும். பெயரவில் கொள்கை ஒன்று இருக்கும். ஆனால் நடைமுறையில் வேறு ஒன்று இருக்கும். இவ்விதமில்லாமல், திட்டவட்டமான ஒரே கொள்கையை —இவ்விதமான கொள்கையை வகுக்கும் சமயத்தில் எதிர்கட்சி அங்கத்தினர்களையும் கலந்து—வகுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப் புறங்களில் எல்லாம் அதிகமாக நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டும். இவைகளை எல்லாம் தனிப்பட்ட நபர்களிடம் ஒப்படைத்து விடக்கூடாது. அவ்விதம் ஒப்படைப்பதாக இருந்தால் இப்போது உர விநியோகம் எவ்விதம் நடைபெறுகின்றதோ அதே முறையில்தான் இருக்கும். இப்போது சோடியம் குளோரைட் உரமாக கள்ள மார்க்கட்டில் விற்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே நிலை இந்த நியாய விலைக் கடைகளில் வராமல் தடுக்கவேண்டும். ஆகவே இதில் அரசியல் பாகுபாடு இல்லாமல், கொள்கைகளை வகுத்து, எந்தெந்த முறையில் கொள்முதல் செய்தால் நம்முடைய உணவுப் பிரச்சனையைத் தீர்க்க முடியும், எவ்விதம் நியாய விலைக் கடைகளை ஒழுங்காக நடத்த முடியும் என்பதைப் பரிசீலனைசெய்து இப்போது இருக்கும் நியாய விலைக் கடைகளை இன்னும் மூன்று மடங்காய் பெருக்கி குறிப்பிட்ட விலையில் குறைந்த நியாய விலையில் எல்லோருக்கும் கிடைக்கும்படியான ஓர் வழியை வகுத்துக் கொண்டால்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங் களும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களும் நல்ல முறையில் நிறைவேறும், அதிலுள்ள "பிசிக்கல் டார்ஜெட்டை" திட்ட அளவை நாம் அடைய முடியும், அதற்குரிய முறையில் நாம் நமது திட்டத்தை வகுக்கவேண்டும் என்பதைக் கூறி எனது வார்த்தை களை முடித்துக் கொள்கிறேன்.

Sri M. MAYANDI NADAR: கனம் உதவி சபாநாயகர் அவர் களே, இப்போது உணவு விலை கூடி இப்போது குறைந்திருப்பதைப் பற்றி நாம் பார்க்கும்போது இந்த விஷயத்தில் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் தீர்மானம் அவசியமா என்பதைப் பற்றி நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். எனக்கு முன்னால் பலர் இதைப்பற்றி பேசினார்கள். விலைகூடின உடன் அரசாங்கம் தலையிட்டு முன்னால் செய்துக்கொண்டிருந்த கொள்முதலை நிறுத்தி இப்போது அரிசி 14 அணாவுக்குக் கிடைக்கும்படியான

முறையில் ஏற்பாடு செய்தார்கள். இப்போது இருப்பதைப் பார்த்தால் இனிமேல் அதாவது சம்பா அறுவடை நேரத்தில் 12 அணுவுக்கு தாராளமாகக் கிடைக்கும் என்று தெரிகிறது. ஆனல் அதே நேரத்தில் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய பொருள்கள் எல்லாம் குறைவான விலேயில் கிடைப்பதற்கு வழி செய்வோமானல் விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள். ஆகவே இந்த விஷயத்தில் அரசாங்கம் நன்ருக கவனித்து ஒரு கொள்கையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இப்போது எல்லாப் பொருள்கள் மீதும் விலே உயர்ந்துவிட்டது என்று சொன்னர்கள். இப்போது புளி, மிளகாய் முதலியவைகள் ஏற்றுமதியாகிக்கொண்டிருப்பதை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மத்திய சர்க்காரோடு தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாக தெளிவுபடுத்தினர்கள். அவ்விதம் வேண்டிய ஏற்பாடுகள் இம்மாதிரிப்பட்ட பொருள்களின் விலேயும் குறையும்படியான ஒரு வாய்ப்பு ஏற்பட்டால் விவசாயிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும். அதோடு வருகின்ற சம்பா அறுவடையிலும் அரசாங்கம் கொள்முதல் செய்வதை விட்டுவைத்தால் அரிசியின் விலே 12 அணுவாக குறையும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri A. V. P. ASAITHAMBI : உதவி தலேவர் அவர்களே, விலேவாசி உயர்வைத் தடுக்கக் கோரி என் கட்சியைச் சார்ந்த தோழர் அன்பழகன் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களே தெரிவிக்க விரும்புகிறேன். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும் நேரத்தில், சிலர் விலேவாசி உயர்ந்திருப்பதாகவும், இன்னும் சிலர் இந்த நிலேயை எப்படி தவிர்ப்பது என்றும், சிலர் எவ்விதத்திலும் இந்த நிலே தவிர்க்கப் படமேண்டியதுதானே என்றும் கருத்துப்பட இங்கே பேசினர்கள். பேசியது மட்டுமல்ல, இந்தத் தீர்மானம் கொண்டுவந்திருப்பதே அனுவசியம் என்பதையும் தெரிவித்தார்கள். அவர்கள் அந்த அளவுக்கு பேசுவதற்குக் காரணம், தாங்கள் எண்ணிக்கையில் 150 பேர்கள் இருக்கிறேம், யார் என்ன கொண்டுவந்தாலும், தங்களால் அதை தோற்கடிக்க முடியும் என்கின்ற எண்ணத்தை அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிருர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இவர்கள் தங்கள் எண்ணிக்கையைப் பார்த்து பெருமைப் படுவதைக் காட்டிலும், நான் அவர்களுக்கு ஒன்று சொல்லுவேன், விலேவாசிகள் உயர்வு, அதன் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற வாழ்க்கைச் செலவின் புள்ளி 474 என்கின்ற அளவுக்கு ஏறிப்போய் இருப்பதைப் பார்த்து ஆளும் கட்சியிலுள்ளவர்கள் உண்மையிலேயே வெட்கப்பட வேண்டும். யுத்த காலத்தில் கூட விலேவாசி உயர்வின் புள்ளி 500 என்கிற அளவில் இருந்தது. ஆனல், இது யுத்த காலமல்ல, சுதந்திரம் வந்த நேரமும் அல்ல. சுதந்திரம் வந்து 12 ஆண்டுகள் ஆகின்றன. அவ்விதமிருந்தும் இப்போது, சாதாரண காலத்தில், விலேவாசியின் உயர்வு 474 புள்ளி என்றிருப்பதைப் பார்த்து ஆளும் கட்சியினர் வெட்கப்படவேண்டும். விலேவாசி உயர்ந்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு நேரத்திலும், எதிர்க் கட்சிகள் இன்று நேற்றல்ல, கடந்த ஆண்டு பட்ஜெட் சமயத்திலும்

15th December 1959] [Sri A. V. P. Asaithambi]

அரசாங்கத்தை எச்சரிக்கையாக இருங்கள் என்று எச்சரிக்கை செய்திருக்கிறது. எந்தெந்த சந்தர்ப்பங்களில் எல்லாம், எப்பொழுது எல்லாம் வாய்ப்பு கிடைக்குமோ அப்போதெல்லாம் எதிர்க்கட்சியினர் எச்சரிக்கை விட்டு இருக்கிறார்கள். இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் ஏதோ எங்கேயோ சில இடங்களில் விலைவாசிகள் இறங்கியிருப்பதாகக் காட்டலாம். அவ்விதம் ஒன்றிரண்டு இடங்களில் கூட விலைவாசி குறைந்திருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் அரசாங்கத்தினுடைய செயல் அல்ல, அண்மையில் எதிர்க் கட்சிகள் எல்லாம் நடத்திய சர்வ கட்சி போராட்டமே தவிர வேறு ஒன்றுமல்ல. விலைவாசி உயர்வுக்குக் காரணங்கள் என்ன என்பதைப்பற்றி தோழர் அன்பழகன் அவர்கள் எடுத்துப் பேசுகின்றபொழுது பல காரியங்களை குறிப்பிட்டார்கள். அதில் விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் போதுமான மின்சார வசதி கொடுக்கவேண்டும், அதோடு அவர்களுக்கு மற்றவர்களுக்கு கொடுக்கப்படும் மின்சாரத்திற்கு விதிக்கப்படும் விகிதத்தைவிட குறைவான கட்டணத்தில்—மற்றவர்களுக்கு நான்கு அணா என்று இருந்தால் விவசாயிகளுக்கு ஒரு அணா என்ற முறையில்—கொடுக்கவேண்டும் என்று ஒரு உதாரணமாக சொல்லுகின்ற நேரத்தில், கனம் அமைச்சர் ராமையா அவர்கள் துள்ளி எழுந்து ஓடி, கனம் உணவு அமைச்சர் அவர்கள் பக்கம் வந்து இப்போது 7 நயா பைசாவுக்கு கொடுக்கிறோம் என்கின்ற விபரத்தைச் சொன்னார்கள். அவ்விதம் கவனம் செலுத்தியதற்காக நான் அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் இந்த புள்ளி விவரக் கணக்கை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் இந்த அமைச்சர் அவர்கள், 10, 12 ஆண்டுகளாக சுதந்திரம் அடைந்திருக்கும் இந்த நாட்டில், இப்போது ஏற்பட்டிருக்கிற விலை உயர்வின் காரணமாக உணவு தான்யம் கிடைக்காமல், ஒரு படி அரிசி ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் என்று வாங்கிக்கொண்டிருக்கிறார்களே, அங்கேபோய் இதே அமைச்சர் துள்ளி ஓடிச்சென்று அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களானால் பாராட்டத்தக்கதாக இருக்கும். அதைவிட்டு எதிர்க் கட்சிக்காரர்கள் பேச்சில் என்ன ஓட்டை இருக்கிறது என்பதை கவனிப்பதிலேயே அவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்றனர். ஆளும் கட்சியினர், நாட்டில் எங்கெங்கே ஓட்டைகள் இருக்கின்றன என்று பார்த்து அவைகளை அடைப்பதில் கவனம் செலுத்தியிருந்தால், விலைவாசிகள் இவ்வளவு மோசமாக உயர்ந்து, அதை எதிர்த்து சர்வ கட்சியினரும் சேர்ந்து ஒரு கிளர்ச்சி நடத்தும் நிலைமை ஏற்பட்டிருக்காது. விலைவாசி உயர்வுக்கு, கனம் உணவு அமைச்சர் பற்பல சமயங்களில் பற்பல காரணங்களைத் காட்டிவந்தார் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். தென் உணவு மண்டலம்தான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்பதை கனம் அமைச்சர்களும் ஆளும் கட்சியினரும்தான் கண்டுபிடித்துச் சொன்னார்களே தவிர, அதை நாங்கள் சொல்லவில்லை. தென் உணவு மண்டலத்தில் நான்கு ராஜ்யங்கள் ஒன்றாக இருப்பதால்தான் நம் ராஜ்யத்தில் விலைவாசி உயர்வையும் உணவு தானியப் போக்குவரத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும், இந்த ராஜ்யத்தை தனி உணவு மண்டலமாக ஆக்கவேண்டும் என்று கோரியிருப்பதாகவும், அந்த கோரிக்கை

1-00 p.m.

நிறைவேற வேண்டும் என்றும் அவர்கள்தான் சொன்னார்கள். அவ்வாறு நாங்கள் சொல்லவில்லை. வடக்கே அந்த கோரிக்கையை அங்கீகரிக்கத் தீர்மானித்துவிட்டார்கள் என்று இந்தச் சபையில் சொன்னபோதுதான், அது இந்தச் சபையை அவமதிப்பதாகுமே என்ற கருத்தை நாங்கள் தெரிவித்தோம். அப்போது கனம் அமைச்சர் "தென் உணவு மண்டலத்தில் இப்போது நான்கு ராஜ்யங்கள் இருக்கின்றன. நீங்கள் கேட்பது திராவிட நாடு. அதில் இருக்கும் இரண்டு ராஜ்யங்கள் அந்த ஏற்பாடு வேண்டாம் என்று சொல்லிவிட்டன. எனவேதான் நாங்கள் பேச முடியவில்லை" என்று சொன்னார். இந்த விஷயத்தில் கனம் அமைச்சர் இவ்வாறு சொல்கிறார். பாசன விஷயத்தில் அந்த ராஜ்யங்களில் இருக்கும் உபரி நீரை நமது ராஜ்யத்திற்குப் பெற அவர்கள் மத்திய சர்க்காரிடம் போராடி வெற்றி பெற்றார்களா என்றால் அதுவும் இல்லை. இதை அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ முத்தையா செட்டியாரே தெளிவு படுத்தினர். இதையெல்லாம் செய்யாத நமது அரசாங்கம் மக்களுக்கு அரிசி படி 12 அணுவுக்குக் கிடைக்கும்படியாவது செய்யவேண்டும். இந்த அரசாங்கம் இவை எதையும் செய்யாமல் இருப்பதுடன் விலைவாசி உயர்வை மறைத்துப் பேசிக்கொண்டிருந்தால், மக்களின் நிலைமை என்ன ஆகும்? எதிர்க் கட்சியினர் ஆளும் கட்சியினரை வேண்டுமென்றே குறை கூறுகிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தால், அது நாட்டுக்கு நன்மை எதுவும் தராது. விலையைக் குறைப்பதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும். "ரஷியாவில் பூட்ஸின் விலை 250 ரூபாய். இங்கே பூட்ஸுக்கு 10 ரூபாய்தானே கொடுக்கிறார்கள்? அப்படி இருக்கும்போது இங்கே விலை எங்கே ஏறிவிட்டது?" என்று ஸ்ரீ வேதரத்னம் குறிப்பிட்டார். வாஸ்தவம். ஆனால் ரஷ்யாவில் மக்களுக்கு வாங்கும் சக்தி இருக்கிறது. இங்கே மக்களுக்கு அவ்வளவு வாங்கும் சக்தி இருக்கிறதா? நோட்டடிப்புதான் விலைவாசி உயர்விற்குக் காரணம் என்று வெளியிலுள்ள பல பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். நோட்டு அடிக்காமல் எப்படி அபிவிருத்தியைக் கொண்டுவர முடியும் என்று சிலர் கேட்கிறார்கள். பொருளாதார விஷயத்தில் இரண்டு வாதங்களும் சரியாக இருக்கலாம். ஆனால், ஏற்கனவே ஒரு பக்கத்தில் நோட்டடிப்பால் விலைவாசி உயர்வும் மற்றொரு பக்கத்தில் விலையேறிய பொருள்களை வாங்குவதற்கேற்ற சக்தியில்லாத மக்களும் இருக்கும்போது, வாங்கும் சக்தியில்லாத இந்த மக்கள் இந்த நெருக்கடியைச் சமாளிக்க இன்னொரு பக்கத்தில் அவர்களே நோட்டடிக்க வேண்டியதுதான் என்ற நிலைமையைச் சர்க்கார் உண்டுபண்ணக் கூடாது. இன்று விலைவாசி உயர்வு அந்த அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த விலைவாசி உயர்வுக்கு யார் காரணஸ்தர்கள்? மத்தியச் சர்க்கார்தான் இதற்குக் காரணஸ்தர்கள், இதைத் தடுக்கும்படி மத்திய சர்க்காரிடம் நமது கனம் அமைச்சர்கள் சண்டை போட முடியவில்லை என்றால் அவர்கள் அதை எங்களிடம் சொல்லிவிடட்டும். "இதற்கு நாங்கள் காரணஸ்தர்கள் அல்லர். மத்திய சர்க்கார்தான் இதற்குக் காரணஸ்தர்கள். நாங்கள் அவர்களிடம் தைரியமாகச் சண்டை போட முடியவில்லை. நாங்கள் சண்டை

15th December 1959] [Sri A. V. P. Asaithambi]

போட்டால் எங்கள் பதவி போய்விடும். ஸ்ரீ. முத்தையா செட்டியார் சொல்வதைப் போல அவர்களை எங்களால் மிரட்டவும் முடியாது. மத்திய சர்க்காரை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கனம் அமைச்சர்கள் எங்களிடம் சொல்லிவிடட்டும். அவ்வாறு சொல்லாவிட்டால் நாங்கள் மத்திய சர்க்காரை வெளியில் பார்த்துக்கொள்வோம்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இவ்வளவு பெரிய பேச்சுப் புலிகள் இந்த மன்றத்தில் இருக்கிறுர்கள் என்பது எனக்கு இதுவரையில் தெரியாது. (சிரிப்பு.)

Sri A. V. P. ASAITHAMBI : பேச்சில் புலி என்று எனக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுத்ததற்காக கனம் அமைச்சரை நான் பாராட்டுகிறேன். இப்போது, ராஜ்யத்தில் உணவில் உபயோகிக்கப் படும் புளி பாய்ந்து கடிக்கும் புலிபோல ஆகிவிட்டதை நாம் பார்க்கிறேம். (சிரிப்பு.) அதைப் பதவியில் இருக்கிறவர்கள் கட்டுப் படுத்தவேண்டும். போலீஸ் துப்பறியும் இலாகாவினரின் உதவியுடன் அரசாங்கத்தார் கள்ள மார்க்கெட் செய்யும் வியாபாரிகளையும் கொள்ளை லாபமடிக்கும் வியாபாரிகளையும் கண்டுபிடித்து அவர்களுக்கு சிறை தண்டனை வாங்கிக்கொடுத்தால் விலைவாசி நிச்சயமாக இவ்வளவு உயராது. அவ்வாறு செய்திருந்தால் விலைவாசி இவ்வளவு உயர்ந்திருக்காது.

இப்போது ராஜ்யத்தில் விலைவாசி இரண்டு புள்ளி குறைந்திருக்கிறது என்பதை கனம் அமைச்சர் தெளிவாக்கினர். இதற்குக் காரணம் என்ன என்று அவர் நடுநிலைமையில் இருந்து பார்த்தால் கம்யூனிஸ்டுகள், மற்ற கட்சியினர், நாங்கள் எல்லோரும் சேர்ந்து சர்வ கட்சிக் குழு ஒன்று அமைத்து பொதுக் கூட்டங்கள் போட்டு "வியாபாரிகளே, ஜாக்கிரதை ! மக்கள் விலைவாசி உயர்வைத் தாங்க மாட்டார்கள். உங்களுக்கு ஆபத்து வரலாம்" என்று வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்ததால்தான் உள்ளேயிருந்த அரிசி வெளியே வந்தது. எனவே, விலைவாசி இரண்டு புள்ளி குறைந்தது என்றுல் இந்த அரசாங்கம் ஏதோ காரியங்கள் செய்துவிட்டது என்று யாரும் நினைக்க வேண்டாம். கடந்த பட்ஜெட் விவாதத்தின் போது இதே மன்றத்தில் "விலைவாசி இன்னும் இறங்கவில்லை. உணவு இன்னும் போதிய அளவு இல்லை. ரெயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹோட்டல்களில் தற்போது 10 அணுவுக்கு அளவுச் சாப்பாடுதான் போடுகிறுர்கள். இது பற்றுக்குறையைக் காட்டுகிறது" என்று சொன்னேன். அப்போது கனம் உணவு அமைச்சர் "நாங்கள் எல்லோரும் சாப்பிடும் அளவையே 16 அவுன்ஸாக நிர்ணயித்திருக்கிறேம். ஆகவேதான் அந்த ஹோட்டல்களில் அப்படிச் சாப்பாடு போடுகிறுர்கள். விலைவாசிகள் ஒன்றும் உயரவுமில்லை, குறையவுமில்லை" என்று சொன்னுர். அப்போது நியாய விலைக் கடைகளை மூடினுர்கள். சர்க்கார் இப்போது மறுபடியும் அவைகளைத் திறந்திருக்கின்றனர். இப்போதும் சர்க்கார் என்ன சொல்கிறுர்கள்.? "நியாய விலைக் கடைகளை சம்பா அறுவடைக்குப் பிறகு மூடுகிறேம். அதற்குப் பிறகு அவசியம் இருந்தால் திறக்கிறேம்" என்று சர்க்கார் சொல்கிறுர்கள். நியாய விலைக் கடைகளை நிரந்தரமாக வைத்திருந்து, அவைகளில் ஒவ்வொருவருக்கும் தானியம் சரியாக வினியோகிக்கப்படுகிறதா

என்று கவனிக்க வேண்டும். இன்று நியாய விலைக் கடைகளில் 'இன்ப்ளுயன்ஸ்' செய்பவர்களுக்கு மட்டும் தானியங்கள் கிடைக்கின்றன. மற்றெல்லோருக்கும் கிடைப்பதில்லை. நியாய விலைக் கடைகள் வைத்திருப்பவர்கள் 10 மூட்டைகள் விற்றதாகக் கணக்குக் காட்டினால், அந்தக் கணக்குக்குத் தகுந்தபடி பில் கிழித்துவிடுகிறார்களே தவிர உண்மையிலேயே எல்லோருக்கும் சரிவர வினியோகிப்பதில்லை. எனவே எல்லா ஜனங்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலம் தானியம் கிடைக்க வேண்டுமானால், ஜனங்களுக்கு கார்டுகள் கொடுக்கவேண்டும். நான் ரேஷன் கொண்டுவர வேண்டும் என்று சொல்லவில்லை. இப்போது பல ஜனங்களிடம் நியாய விலைக் கடைக்காரர்கள் 'ஸ்டாக் இல்லை' என்று சொல்லிவிடுகிறார்கள்; கணக்குக் காட்டுவதற்காக பில்லை மட்டும் கிழித்து விடுகிறார்கள். சர்க்கார் எல்லா ஜனங்களுக்கும் அரிசி படி 12 அணாவுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். இதை அரசாங்கம் எப்படிச் செய்யுமோ, எங்களுக்குத் தெரியாது. இதை அரசாங்கம் எப்படியாவது செய்ய வேண்டும். இதை அரசாங்கத்தார் செய்ய முடியுமா? முடியாது என்றால் காரணம் என்ன? அதற்கு மத்திய சர்க்கார்தான் காரணஸ்தர்களா? மத்திய சர்க்கார் காரணஸ்தர்கள் இல்லையானால் வேறு காரணம் என்ன என்பதையாவது கனம் அமைச்சர் சொல்லட்டும். நாங்கள் இந்த சர்க்காருக்கு எங்கள் பரிபூரணமான ஒத்துழைப்பைத் தருவோம். "நாங்கள் மத்திய சர்க்காரையும் எதிர்க்க மாட்டோம். விலையைக் குறைக்கவும் நாங்கள் எதுவும் செய்யமாட்டோம். இப்படித்தான் இருக்கும். நாங்கள் பதவியில் நீடித்திருப்போம்" என்று கனம் அமைச்சர்கள் சொல்வார்களேயானால், அவர்கள் இன்று வேண்டுமானால் பதவியில் இருக்க முடியுமே தவிர, எதிர்காலத்தில் அவர்கள் மக்களுக்கு பதில் சொல்லத்தான் வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI A. VEDARATHNAM : ஆன் எ பாயிண்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்பிளினேஷன், ஸார், கனம் ஆசைத்தம்பி அவர்கள் ரஷ்யாவிலே 250 ரூபாய்க்கு பாதரட்சைகளை விற்பதாக நான் சொன்னதைக் குறிப்பிட்டார்கள். உற்பத்திக் குறைவு மாத்திரம் அல்ல இந்த விலையேற்றத்திற்குக் காரணம்; தேவையைக் காட்டிலும் 6 அல்லது 7 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய ஆந்திர நாட்டிலும் கூட இதைவிடக் குறைந்த விலைக்கு தானியங்கள் விற்கப்படவில்லை; அதோடு கூட அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து அந்த நாட்டு மார்க்கெட் விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து நம் நாட்டு விலைக்கு விற்கும் நேரத்தில் 40 கோடி அல்லது 50 கோடி ரூபாய் நாம் நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம்; விலையேற்றம் உலகத்திலே இருக்கிற எல்லா நாடுகளிலுமே இருக்கின்றது என்று சுட்டிக் காட்டினேனேயல்லாது, செருப்பு விலையை மாத்திரமல்ல என்று நான் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நண்பர் கனம் அன்பழகன் அவர்கள் பிரேரேபித்த தீர்மானத்தையும், என்னுடைய திருத்தங்களையும் அமைச்சர்

15th December 1959] [Sri M. Kalyanasundaram]

அவர்களும், அமைச்சர் அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களும் ஆதரிப்பார்கள் என்று நான் நினைத்தேன். இதிலே—இந்தத் தீர்மானத்திலே—எந்த வாசகத்திற்கு அவர்கள் ஆட்சேபனை எடுக்க முடியும் என்பது என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவை சர்க்கார் எடுப்பதற்கு உத்தேசித்திருக்கும் நடவடிக்கைகளைத் துணிச்சலோடு எடுக்க சர்க்காருடைய கையை பலப்படுத்தும் தீர்மானங்களே தவிர, சர்க்காரைக் குறைகூற வேண்டும், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் குறைகூற வேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல. விலைவாசி சிறிது குறைந்திருப்பதாகச் சில அங்கத்தினர்கள் சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். நான் அவர்களுக்கு ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். விலைவாசி இப்படி குறையட்டும், இன்னும் நன்றாகக் குறையட்டும் என்பதுதான் எங்களுடைய அபிப்பிராயம்—முயற்சியும் கூட. சர்க்காருடைய நடவடிக்கைகளால் மட்டும் சாதிக்க முடியாததை ஜனங்களாகப் பார்த்து சாதிக்க முடியும் என்பது இப்போது விலைவாசி குறைய ஆரம்பித்திருப்பதானது எடுத்துக் காட்டுகிறது. இப்போது அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லட்டும், சம்பா நெல் அறுவடைக் காலத்தில், நிச்சயமாக உற்பத்தி செய்யக் கூடிய பெரிய நிலச்சுவாந்தார்களிடமிருந்து லெவி முறைப்படி சர்க்கார் நெல் கொள்முதல் செய்யும் என்று உறுதியாக இந்த மன்றத்தில் சொல்லி விடட்டும், நாளையிலிருந்து விலை குறைகிறதா இல்லையா என்று பார்க்கட்டும். இப்போதே கூட அவர்களுக்கு பயம் இருக்கிறது. எதிர் கட்சிகளுடைய கிளர்ச்சிகளுக்குப் பயந்து சர்க்கார் கொள்முதல் செய்தால் என்ன செய்வது என்ற பயத்தில் இருக்கிறார்கள். லெவி முறைப்படி கொள்முதல் செய்வோம் என்று சொல்லி விட்டால் இப்போது பதுக்கி வைத்திருக்கக் கூடிய நிலச்சுவாந்தார்கள் பயம் கொண்டு, பின்னால் என்ன ஆகுமோ என்று நினைத்து அதனால் எல்லா தானியங்களும் மார்க்கெட்டுக்கு வந்து சேரும். அந்த ஒத்துழைப்பைத்தான் தர முயற்சி செய்கிறோம் இந்தத் தீர்மானத்தின் மூலம். அமைச்சர் அவர்களை ஒன்று நான் நிச்சயமாகக் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து லெவி மூலம் கொள்முதல் செய்யத் தயாராக இருந்தாலும் இல்லையென்றாலும், இல்லை என்று மட்டும் சொல்லாமல் இருங்கள். இப்போது லெவி வருமா வராதா என்ற பயம் இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் அந்த பயத்துடனேயே இருக்கட்டும்; கொள்முதல் செய்யமாட்டோம் என்று மட்டும் சொல்லி விடாதீர்கள் என்று அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தை—அதிலும் குறிப்பாக எனது திருத்தத்தை—தோற்கடித்தால், எப்பேற்பட்ட சக்திகளுக்கு என்றால், சமுதாய விரோத சக்திகளுக்கு ஆக்கம் அளித்தவர்களாக ஆவார்கள் என்று அமைச்சர்களுக்கும், அமைச்சர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கள் நோக்கம் சர்க்கார் சட்டத்தினால் மட்டும் நிறைவேறி விடும் என்று நினைக்கவில்லை. ஜனங்களுடைய பலம் இருந்தால்தான் சர்க்கார் எடுக்கக் கூடிய நடவடிக்கை பலன் தரும். சர்க்கார் எடுக்கக் கூடிய நட—

[Sri M. Kalyanasundaram] [15th December 1959

வடிக்கைகளில் தவறி விட்டார்கள் என்ருல் நான் கட்டாய கொள் முதலேயோ அல்லது ரேஷனேயோ ஆதரிக்கிறேன் என்பதல்ல. ரேஷன் கூடாது; கட்டாய கொள்முதல் கூடாது. கட்டாயக் கொள்முதல் கொடுமையிலிருந்து எப்படி இந்த உற்பத்தி செய்ப வர்களேக் காப்பாற்றுவது என்று பார்த்துத்தான் இந்த லெவி முறையை யோசனையாகக் கூறியிருக்கிறேன். முன்பு சர்க்கார் எடுத்த நடவடிக்கைகள் போதுமானதாக இல்லே, திருப்தியளிப்ப தாக இல்லே என்று தீர்மானத்தில் இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் ஆட்சேபித்தால் அதை வேண்டுமானல் மாற்றி அமைத்து விடலாம். சர்க்காரைக் குறை கூறவேண்டுமென்பது நோக்க மல்ல. திருப்தியளிக்கவில்லே என்பதை இந்த விலேவாசி நிலவரமே நன்கு நிரூபிக்கிறது. இந்த நடவடிக்கை போதாது என்ற கண்டிப்பு வேண்டுமானல் வார்த்தையில் வேண்டியதில்லே, நடப்பு நிலவரமே போதுமானது—வார்த்தையில் கண்டிக்க விரும்பவில்லே. சர்க்கார் கொள்முதல் செய்தார்கள். அப்படிக் கொள்முதல் செய்தும் விலேவாசி என் ஏறியது? எந்த இடத்தில் கொள்முதல் செய்யவேண்டுமோ அங்கு செய்யாமல், எங்கு கொள்முதல் தகாதோ அங்கு செய்தார்கள். வியாபாரிகளிடமிருந்தும் மில்லர் களிடமிருந்தும் கொள்முதல் செய்வோம் என்று சொன்னுர்கள். அவர்களும் கொடுத்தார்கள். கொடுத்துவிட்டு என்ன செய்தார் கள்? அவர்கள் சுயேச்சையாக விற்கக்கூடிய பகுதியை சர்க்கா ருக்குக் கொடுத்ததற்கும் சேர்த்து விலேயை அதிகமாக வைத்து விற்ருர்கள். அதனல் விலேவாசி ஏகமாக ஏறியது. உற்பத்தி செய் வதில் பெரும் பகுதி வைத்திருக்கக் கூடியவர்களான 3 சத விதம் பேர்களுள்ள அவர்களிடமிருந்து லெவி மூலம் கொள்முதல் செய்ய வேண்டுமென்று எடுத்துக்காட்டினேன். அப்படி இருப்பவர்களிட மிருந்து கொள்முதல் செய்தால் சர்க்காருக்கு தேவையான நெல் நியாயமான விலேயில் கிடைக்கும். பரவலான கொள்முதலுக்கு அவசியம் ஏற்படாது. நிர்ப்பந்தங்கள் இல்லாமல், கட்டாயம் இல்லாமல் வாங்கி, அதனல் விலேவாசி குறைந்து சர்க்காருக்கு உதவியாக இருந்திருக்கும். விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர் களுக்கு தீங்கு இழைக்கும் வகையில் விலேயைக் குறைக்க வேண்டு மென்று சொல்லவில்லே. கறக்கக் கூடிய மாட்டைக் கொன்று பலன் அனுபவிக்க முடியாது. விவசாயிகள் வாழவேண்டும். விவசாயம் வாழவேண்டும். விலேவாசிகள் குறைய வேண்டும். விவசாயி வாழ வேண்டும் என்று நண்பர் கரிய கௌண்டர் அவர்கள் 80 சத விதத்தினரைப் பற்றிப் பேசினுர்களா அல்லது 3 சத விதத்தினராக இருப்பவர்களேப் பற்றிப்பேசினுர்களா என்று அவர் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கனம் கரிய கௌண்டர் அவர்கள் 3 சத விதம் உள்ளவர்களுக்காகப் பேசினுர்களே தவிர 80 சத விதம் உள்ளவர் களுக்காக அல்ல என்று கூற விரும்புகிறேன். விவசாயிகள் வாழ வேண்டும். உழைக்கக்கூடிய தொழிலாளிகள் வாழவேண்டும். படித்த நடுத்தர மக்கள் வாழவேண்டும். ஒரு பகுதியை அழித்து மற்றவர்கள் வாழவேண்டும் என்பது கொள்கை இல்லே. சர்க்கார் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்காமல் தவறியிருக்கும் காரணத்தினல் என்ன ஆகிறது என்று சொன்னல், ஒரு சிலர் கொழிக்கவும், அதே நேரத்தில் பெரும் பகுதியினர் கஷ்டப்பட

15th December 1959] [Sri M. Kalyanasundaram]

வேண்டிய நிலை இருக்கிறது. அம்மாதிரி இல்லாது ஜனங்களைக் காப்பற்றத்தான் இந்த யோசனையைச் சொல்லுகிறோம்.

விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கட்டும். அதனால் சர்க்காருக்கு 2 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னால், அது நஷ்டமல்ல, அவசியமான செலவுதான். அது மற்ற திட்டங்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரு செலவு. விவசாயிகளுக்கு அதிக விலை கொடுத்து வாங்கி மலிவு விலையில் விற்றால் அதனால் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டால் அது உண்மையில் நஷ்டமல்ல. அதனால் லாபம்தான் ஏற்படும். உணவு விலை ஏறி விட்டால் அதனால் மற்ற தொழில்களுக்கு நெருக்கடி ஏற்படும். சம்பாதிக்கக் கூடியவர்கள் தங்களுடைய வருமானத்தில் பெரும் பகுதியை உணவுப் பொருள்களுக்கே செலவிடக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மற்ற பொருள்களை வாங்கும் சக்தி குறையும். அதனால் மற்ற தொழில்கள் பாதிக்கப்படும்—நெருக்கடி ஏற்படும். ஆகையால் சர்க்கார் இதனை யோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு நடவடிக்கை எடுக்கும்போது அதனால் ஒரு சிலர் பாதிக்கப்படலாம். இப்போது மது விலக்கு நடைமுறையில் இருக்கிறது. இது ஒரு நல்ல சீர்திருத்தம் என்று கொண்டு வந்தார்கள். அதனால் எத்தனையோ ஏழைகள் பாதிக்கப் பட்டார்கள். மரமேறித் தொழிலாளர்கள் எத்தனையோ லட்சக் கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். அப்போது பதில் என்ன சொல்லப்பட்டது? இது ஏழைகளைப் பாதிக்கக் கூடியது, ஆகையால் பலரை பாதித்தாலும் பரவாயில்லை என்று சொல்லப் பட்டது. இப்போது 3 சத விதம் அளவிலே கஷ்டம் ஏற்பட்டாலும் அவர்கள் அதனால் பட்டினி கிடந்து செத்துவிட மாட்டார்கள். அவர்கள் எதிர்பார்க்கிற அளவிற்கு வேண்டுமானால் லாபம் ஏற்படாமல் போகலாம். அவர்கள் லாபத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டியதாக வேண்டுமானால் இருக்கலாம். இந்த நடவடிக்கைகளை தைரியமாக எடுக்க வேண்டியதுதான். ஆகையால் தான் என்னுடைய திருத்தத்தில் நெல் சாகுபடி செய்யக்கூடியவர்களில் 10 ஏக்கருக்கு அதிகமாக வைத்துக்கொண்டு சாகுபடி செய்பவர்களிடமிருந்து லெவி முறை மூலம் ஏக்கருக்கு இவ்வளவு கொடுத்துவிட வேண்டும் என்று சர்க்கார் கட்டாயமாக வைத்துக் கொள்ளட்டும். மத்திய சர்க்காரிடமிருந்து 2 லட்சம் டன் கொடுக்கிறார்கள் என்றால் அதையும் வாங்கட்டும். எதற்கும் இந்தச் சபை ஒத்துழைக்கும். எதிர்க் கட்சிகள் எல்லாம் ஒத்துழைக்கும். எல்லாவற்றையும் பெற்று நியாய விலைக் கடைகள் நடத்தட்டும். நியாய விலைக் கடைகளில் 12 அணாவிற்கு விற்கட்டும். அந்த முறையில் செய்தால் நிச்சயமாக உணவுப் பொருள்களின் விலைவாசியானது குறைய ஆரம்பிக்கும்.

இரண்டு வித நடவடிக்கைகள் இருக்கின்றன. உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள். தூரதிருஷ்டியோடு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள். விலைவாசி உயரும் வேகத்தைத் தடுக்கவேண்டும். இதற்கு இந்த யோசனை. எனது திருத்தத்தில் 4, 5, 6 தூரதிருஷ்டியோடு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். உற்பத்தியைப்

பெருக்கவேண்டும். உற்பத்தியைப் பெருக்க, அதிகமாக நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதன் மூலம் முடியாது. ஏற்கனவே இருக்கக்கூடிய நிலங்களில் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்காக வேண்டி சர்க்கார் விவசாயிகளுக்காக எவ்வளவு சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதற்கான கோரிக்கை இந்தச் சபையின் முன் வந்தால் என்னுடைய சார்பில் ஆட்சேபிப்பது கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதிகத் தொகை அனுமதிக்கத் தயாராக இருக்கிறோம். தற்போது சர்க்கார் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளிலே பலஹீனங்கள் இருக்கின்றன. அம்மோனியம் சல்பேட் விநியோகம் செய்யும் விஷயத்தில் இருக்கும் குறைபாட்டை நண்பர் சட்டநாத கரையாளர் அவர்கள் சொன்னார்கள். இது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. மூன்று வருஷ காலமாக கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. திருச்சியில் நடந்த ஒரு மோசடி வெளியாகியிருக்கிறது. ஒரு மூட்டை சிந்திரி உரத்தை 4 மூட்டை உப்போடு கலந்து கொடுத்திருப்பதைப் பிடித்துக் கொடுத்திருக்கிறோம். ஒரு வாரத்திற்கு முன்பு, வெறும் உப்பில் வெள்ளைக்கல் மாவைக் கலந்து ஒரு மூட்டைக்கு ஒரு படி சிந்திரியைக் கலந்து மூட்டை விலை ரூபாய் 43, 44 என்று நூற்றுக்கணக்கான மூட்டைகளை விற்றது எல்லோருக்கும் தெரியும். கடந்த 6, 7 மாத காலமாக இம்மாதிரி விற்று வந்த வியாபாரிகள் பிடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். செங்கல்பட்டில் இந்த மாதிரி நடந்திருக்கிறது. குடியாத்தத்தில் நடந்திருப்பதைப்பற்றி நண்பர் கோதண்டராமன் அவர்கள் அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். "உணவு அமைச்சர் அவர்களே போலீஸ் அமைச்சராகவும் இருப்பது சரியல்ல" என்று திரு. அண்ணாதுரையவர்கள் எங்கோ ஒரு கூட்டத்தில் சொன்னதாக அறிந்தேன். என்றால் அதை ஒப்புக் கொள்ள முடியவில்லை. (ஸ்ரீ சி. என். அண்ணாதுரை :—போலீசை இதற்கு உபயோகப்படுத்தவில்லை.) அமைச்சர் அவர்கள் போலீசை இதற்கு உபயோகப்படுத்தவில்லை. போலீஸ் போர்ட்போலியோ வேறு யாருக்காவது இருந்தால் அவருக்கு இதைப்பற்றி எழுத வேண்டுமென்று சொல்லலாம். ஆனால் இவரே போலீசுக்கும் உணவுக்கும் அமைச்சராக இருக்கும்போது இந்த மாதிரி மோசடிகளைக் கண்டு பிடிக்க ஏன் போலீசைப் பயன்படுத்தக் கூடாது? மற்ற மற்றக் காரியங்களுக்காகவெல்லாம் ஐ.ஜி.-யைக் கலந்து பேசுகின்ற போலீஸ் அமைச்சர் இந்த மோசடிகளைக் கண்டு பிடிப்பதற்காக ஏன் ஐ.ஜி.-யோடு கலந்து பேசி நடவடிக்கை எடுக்கக் கூடாது? அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு போலீஸ் அமைச்சருக்கு சந்தர்ப்பம் இருக்கிறது. அமைச்சர் அவர்களைக் குறை கூறவேண்டுமென்பதற்காகக் கூறவில்லை. ஆகவே, என்னுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த தீர்மானத்தை சர்க்கார் கட்சி எதிர்த்து இது தோற்கடிக்கப்பட்டது என்று சொன்னால் இந்த யோசனைகளையெல்லாம் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். இந்த என்னுடைய யோசனைகள் எல்லாம் தவறு என்று ஜனங்கள் முன்னால் எடுத்துக் கூறட்டும். தவறு என்றால்

15th December 1959] [Sri M. Kalyanasundaram]

திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். மேடையில் பேசும் போதாகட்டும், சட்டசபையில் பேசும்போதாகட்டும், அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்களுக்கு—அங்கத்தினர்கள் பல சொல்லலாம்—விரோதமாக என்னுடைய கருத்துக்கள் இருக்கிற தென்று சொல்ல முடியாது.

அவர்கள் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பேசியதை அவர்கள் கவனிக்கவேண்டும். சுதந்திரக் கட்சி இந்த சபைக் குள்ளே இல்லையென்று கவலைப்பட்டார்கள். சுதந்திரக் கட்சிக்கு அவசியமே இல்லையென்று பேசியிருக்கிறார்கள். சர்க்காருடைய கொள்கைக்கு வெளியில் இருந்துதான் ஆபத்து வருகிறதே தவிர எங்கள் பக்கத்தில் இருந்தல்ல என்பதை அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சுதந் திரக் கட்சித் தலைவர்கூட தைரியமாக எதிர்க்கவில்லை. வெளியில் சுதந்திராக் கட்சி; இங்கே எதிர்க் கட்சித் தலைவராக இருக்கும் நண்பர் வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் இந்த இடத்தில் இல்லை. அவர்கள் இந்தச் சபையில் எதிர்க்கவில்லை. வெளியில் என்ன செய்கிறார்களோ தெரியாது. அவர்கள் பேசத் துணியாத விஷயத்தைக்கூட அமைச்சர் அவர்களுடைய பின்னணியில் உட்கார்ந்து கொண்டிருக்கும் சில அங்கத்தினர்கள் பேசியிருக் கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இது கட்சிப் பிரச்னை அல்ல. சமுதாயத்தில் என்ன அந்தஸ்து இருக்கிறது? காங்கிரஸ் கட்சியாக இருக்கட்டும்; அல்லது சுதந் திராக் கட்சியாக இருக்கட்டும். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் உணவு விலை ஏறுவதுதான் லாபம் என்று விரும்புவார்கள். அதே சமயத்தில் அவர்களுக்குச் சர்க்கார் செய்யக்கூடிய உதவி வேறு கிடைக்கின்றது. மலிவாக, 7 நயா பைசாவுக்கு மின்சாரம் கிடைக்கிறது. கடன் வசதியெல்லாம் நிறையக் கொடுக்கப்படுகிறது. சப்சிடி கொடுத்தும் உரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் சர்க்கார் ஜனங்களுடைய பட்டினி யைப் போக்குவதற்காக உற்பத்தியாகக் கூடிய 50 லட்சம் டன்னை யும் கேட்கவில்லை, 2 லட்சம் கேட்டால் சர்க்கார் குறுக்கிட ஆரம் பித்து விட்டது. இந்த மாதிரி குறுக்கிடுவது தனி நபர் சுதந் திரத்துக்கே விரோதமானது என்று பேசுகிறார்கள். இந்த மாதிரிக் குரலை அமைச்சர் அவர்களுக்குப் பின்னாலிருந்தே கேட்க முடிகிறது என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தங்களையும் தீர் மானத்தையும் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். ஏதாவது வார்த்தையில் ஆட்சேபணை இருந்தால் அந்த வார்த்தை களைச் சொன்னால் அநேகமாக நாங்கள் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். 'have failed' என்ற வார்த்தை களுக்கு ஆட்சேபனை இருக்குமானால் அதைத் திருத்திக் கொள்ளலாம். என்னுடைய திருத்தத்தில் அது கூடக் கிடையாது. ஆட்சேபகரமற்றது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை ஏகமானதாக ஏற்றுக் கொண்டு, மக்களுக்குத் தேவையான உணவுப் பொருளை

வைத்துக்கொண்டு சூதாடக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் சரி; அந்த சூதாட்டக்காரர்கள் மேல் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்ற எண்ணத்தை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தினால் கட்டாயம் விலை குறைய ஆரம்பிக்கும். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாது எதிர்த்தால் அத்தகைய சூதாட்டக்காரர்களுக்கு இன்னும் கொஞ்சம் தெம்பு உண்டாகி விடும். அதன் காரணமாக விலைவாசி ஏறத்தான் செய்யும். ஆகவே என்னுடைய திருத்தத்தையும் தீர்மானத்தையும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த உணவுப் பிரச்சனை, முக்கியமாக விலை வாசி உயர்வு நிலையைப்பற்றி அரசாங்கத்திற்குக் கவலை உண்டு. அரசாங்கம் இந்த நிலைமையை எவ்வாறு அகற்றுவது என்பதில் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது என்பதைப் பற்றிப் புதிதாக ஒன்றும் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இந்த மன்றத்தில் கனம் அங்கத்தினர்கள் இந்த விலைவாசி உயர்வைப் பற்றி எடுத்துக் காட்டியபோதெல்லாம் இதைப் பற்றிக் குறிப் பிட்டுப் பேசியிருக்கிறேன். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராகிலும் உணவுப் பிரச்சனையைப் பற்றி பேசவேண்டு மென்று கேட்டபோதெல்லாம் அரசாங்கம் தயங்காமல் இடம் கொடுத்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் அரசாங்கமே இந்தப் பிரச்சனையைக் கொண்டுவந்து சமர்ப்பித்து விவாதங்கள் எத்தனையோ முறை நடைபெற்றிருக்கின்றன. கவர்னர் உரை விவாதத்தில்கூட அநேகமாக உணவுப் பிரச்சனையைப் பற்றிப் பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். அப்படிப் பேச வாய்ப்பு அளிக்கும் வகையிலேதான் கவர்னர் அவர்கள் "விலைவாசி உயர்வு கவலை அளிப்பதாக இருக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார்கள். கவர்னர் அவர்கள் கவலை தெரிவித்தார்கள் என்றால் அது அரசாங் கத்தினுடைய கவலை என்பதிலே ஐயமிருக்க இடமில்லை.

இதே வகையிலே இந்த உணவுப் பிரச்சனையைப் பற்றி மற்றக் கட்சிப் பிரதிநிதிகளையும் கலந்து ஆலோசித்து இதை எவ்வாறு தீர்ப்பது? என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவது? என்று ஆராயவேண்டுமென்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டது. அதையும் அரசாங்கம் தயங்காமல் ஏற்றுக்கொண்டு அரசாங் கத்தின் சார்பாக ராஜ்ய சர்க்கார் உணவுக் கமிட்டியை அமைத்து அதில் இந்த மன்றத்தில் உள்ள கட்சிப் பிரதிநிதிகளையும், இந்த மன்றத்திற்கு வெளியிலே உள்ள பொருளாதார நிபுணர்கள்
1-30 p.m. போன்றவர்களையும் சேர்த்து உணவு பற்றி பரிசிலனை செய்யக் கூடிய ஆலோசனைக் குழு அமைந்திருக்கிறது என்பதும் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். சட்டம் மன்றம் கூடுவதற்கு முன்பு நாம் இருக்கிற நிலைமையை எடுத்து விளக்குவோம், அந்தக் குழுவின் ஆலோசனைகளையும் தெரிந்துகொள்ளுவோம் என்ற நோக்கத்தோடு டிசம்பர் 4-ம் தேதி அந்தக் குழுவின் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு எல்லாக் கட்சி பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். அங்கே நிலைமை விளக்கப்பட்டது. கொள் முதல் இப்பொழுது ஏன் கைவிடப்பட்டது என்று தீர்மானத்தை

15th December 1959] [Sri M. Bhaktavatsalam]

பிரேரேபித்த கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் குறை கூறினார்கள். கவர்னர் உரையின்மீது நடந்த விவாதத்திற்கு அளித்த விடையிலும் நான் இதையெல்லாம் விளக்கினேன். அதிகமாக உபயோகப்படுவதில்லை. ஆகையால் அதை நாம் கொள் முதல் செய்தால் பலன் இல்லாததோடு, பாதகங்களும் ஏற்படலாம், ஆகவே இப்பொழுது குறுவையை கொள்முதல் செய்யவேண்டிய நிமித்தம் இல்லை என்பதினால்தான் கொள்முதல் நிறுத்தப்பட்டது. நிலைமையையெல்லாம் அந்தக் குழுவிற்கு விளக்கிக்கூறி, சம்பா அறுவடையைப் பொறுத்த மட்டில் என்ன செய்வது, லெவி செய்வதா அல்லது ப்ரொக்யூர் செய்வதா, அப்படி லெவி செய்வதா யிருந்தால் எவ்வாறு லெவி செய்வது, இதையெல்லாம் நாம் யோசனை செய்து சம்பா அறுவடைக்கு முன்னாலேயே டிசம்பர் மாத இறுதிக்குள் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே நீங்கள் உங்களுடைய யோசனையைச் சொல்லுங்கள். உங்களுடைய யோசனைகளை மேற்கொண்டு பரிசிலனை செய்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவதற்கு உபயோககரமாக இருக்கும் என்று ராஜ்ய உணவு ஆலோசனைக் குழுவில் நான் சொன்னேன். அங்கு வந்திருந்த எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும் 'எங்களுக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள், இன்னும் சில விவரங்கள் கொடுங்கள். இது ஒரு சிக்கலான பிரச்னை. எந்த முறையை கையாள்வது என்பது பற்றி யோசனை கூற எங்களுக்கு கொஞ்சம் அவகாசம் வேண்டும். நாங்கள் பின்னால் இதுபற்றி யோசித்துக் கூறுகிறோம்' என்று சொன்னார்கள். அதற்குமேல் டிசம்பர் மாதம் 26-ம் தேதி அந்தக் குழுவின் கூட்டத்தைக் கூட்டுவதாக அப்பொழுதே அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. ஆகவே இந்த மாதம் 26-ம் தேதி அந்தக் குழு கூடவிருக்கிறது. சர்வ கட்சி முன்னணி, அணிவகுப்பு என்று எதிர்க்கட்சியைச் சார்ந்த கனம் அங்கத்தினர் கவர்னர் அவர்களது உரையின்மீது பேசும்போது குறுவையை கொள்முதல் செய்வதில் பயன் இல்லை, குறுவை இங்கு குறிப்பிட்டார்கள். அணிவகுப்பைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத் தினிடம் கலந்து பேசவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு அரசாங்கம் சம்மதம் தெரிவித்து இம்மாதம் டிசம்பர் 10-ம் தேதி யன்று அவர்களும் வந்து பேசினார்கள். இருக்கிற நிலைமையை அவர்களுக்கு எடுத்துச் சொன்னோம். 'நீங்கள் கொடுக்கின்ற யோசனைகள் எவ்வளவு தூரம் பலன் தரக்கூடியது என்று புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு பரிசிலனை செய்யவேண்டும். எப்படியும் டிசம்பர் மாத இறுதிக்குள் இதுபற்றி ஒரு முடிவு செய்து தெரிவிப்போம். அதற்குள் டிசம்பர் 26-ம் தேதி எல்லாக் கட்சிப் பிரதிநிதிகள் கொண்ட ஆலோசனைக் குழு கூடும். அவர்கள் யோசனைகளையும் பரிசிலனை செய்து முடிவாக நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவோம்' என்று அவர்களுக்கு நான் தெரிவித்தேன்.

(Mr. Speaker in the Chair.)

இந்த நிலைமையில் உத்தியோகப் பற்றற்ற இந்நாளில் விவாதத் திற்காக பல தீர்மானங்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தன. அவை பாலட்டுமூலம் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. இந்தக்

தீர்மானம் அப்பொழுது வரவில்லை. இருந்தாலும் எதிர்க்கட்சியினர் உணவுப் பிரச்னையைப்பற்றி ஒரு தீர்மானம் வேண்டும் என்று விருப்பம் தெரிவித்லால், இன்று காலையில் கூறியதுபோல் அதற்குப் போதிய நோடீஸ் இல்லையென்றாலும், அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் அதற்கு சம்மதம் தெரிவிக்கவேண்டிய அவசியம் இருந்தாலும், எதிர்க்கட்சியினருக்கு உணவுப் பிரச்னையைப்பற்றி மேலும் பேசவேண்டுமென்று எண்ணம் இருந்ததால், எங்களுக்கு கொஞ்சமும் ஆட்சேபனை இல்லை என்று கொஞ்சம்கூட தயங்காமல் சொல்லி, இன்று இந்த விவாதம் இங்கே நடைபெறுகிறது.

இங்கு பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள், முக்கியமாக கடைசியாகப் பேசிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்ட அடிப்படை கருத்தை நான் பாராட்டுகிறேன். இந்தத் தீர்மானம் கொண்டுவந்ததில் அரசாங்கத்தைக் கண்டனம் செய்யவேண்டும் என்ற எண்ணம் இல்லை. அரசாங்கம் நல்ல நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவதற்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும், அவர்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தோம் என்று அவர்கள் சொன்னதை நான் பாராட்டுகிறேன். அதுமட்டுமல்ல. நான் அவர்கள் அம்மாதிரி தெரிவித்ததை வரவேற்கிறேன். அவர்கள் அளிப்பதாகக் கூறிய ஒத்துழைப்பை வரவேற்கிறேன்.

இந்த விலைவாசிப் பிரச்னையைத் தீர்ப்பதில், மற்றபடி விவசாய உற்பத்திப் பெருக்கை நாடுவதில் தவறுதல் செய்கிறவர்கள், கள்ள மார்க்கெட் செய்கிறவர்கள், பதுக்கி வைத்துக்கொண்டிருப்பவர்கள் உற்பத்தி செய்கின்ற ஒரு சில விவசாயிகளாக இருந்தாலும் சரி—எல்லோரும் அவ்வாறு செய்வதில்லை—, வியாபாரியாக இருந்தாலும் சரி, அல்லது உரம் விநியோகிக்கின்ற விற்பனையாளராக இருந்தாலும் சரி அரசாங்கம் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கத் தயங்காது. என்னிடம் போலீஸ் இலாகா இருக்கிறது என்பது ஒரு அனுகூலம் என்று கூறினார்கள். அவ்வாறு போலீஸ் உதவியை நாடி தவறுதல் செய்கிறவர்கள்மீது கவனம் செலுத்தி வேண்டிய நடவடிக்கைகளை கட்டாயமாக எடுத்துக்கொள்ளுவதிலே சற்றும் தயங்குவதில்லை என்று நான் உறுதியாக சொல்லுகிறேன். கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அதை எவ்வளவு தூரம் எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் எடுத்துக்கொள்ளலாம். என்னைப் பொறுத்த மட்டில் சொல்லுகிறேன். நான் நடவடிக்கை எடுப்பதில் சற்றும் தயங்கியதில்லை. யார் பேரிலும் எவ்வித தாட்சண்யம் என்பது கிடையாது. பராபரியாக கள்ள மார்கெட் நடக்கிறது என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டாலும், உடனே போலீஸைக் கொண்டு விசாரித்து எங்கே புலன் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன். எல்லாம் என்னுடைய கவனத்திற்கு வருகிறது என்று சொல்ல முடியாது. எல்லாவற்றிற்கும் போதுமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு புலன் ஏற்படுகின்றது என்று சொல்ல முடியாது.

கனம் அங்கத்தினர் சட்டநாத கரையாளர் அவர்கள் தனி நபர்களிடம் உரம் விநியோகத்தை ஒப்படைப்பதுபற்றி பேசும்

15th December 1959] [Sri M .Bhaktavatsalam]

பொழுது அவர்கள் பெரும்பாலும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் அமுல் நடக்கும் இடங்களில் கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் கொடுக்கிறோம். மற்ற இடங்களில் பாதி தனி நபர்களுக்கு கொடுக்கிறோம். யாருக்கு கொடுக்கவேண்டுமென்பதை கலெக்டர்கள்தான் நிர்ணயம் செய்கிறார்கள். என்னிடம் ஏதாவது அதுபற்றி புகார் வந்தால் அதைப் பரிசீலனை செய்ய கலெக்டரிடம் அனுப்புகிறேன். கலெக்டர்கள் தான் இதை யாரிடம் ஒப்படைப்பது என்பதை தீர்மானம் செய்கிறார்களே தவிர, யாரும் இதில் தலையிடுவதில்லை. யாரோ உத்தியோகப் பற்றில்லாதவர் சிபார்சு செய்வதை வைத்துக்கொண்டு தவறுதலாக யாரையாவது நியமித்தால், பிறகு கலெக்டர் மீதே குற்றம் சாட்டப்படும் என்பது கலெக்டர்களுக்குத் தெரியும். அதை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள், உணர்த்தப்பட்டும் வருகிறார்கள். எதையும் சொல்லுவது வெகு சுலபம். ஊரிலே காங்கிரஸ்காரர்கள் நிறைய இருக்கிறார்கள். உரம் விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டவர்களில் 4 பேர்கள் காங்கிரஸ்காரர்களாக இருந்துவிட்டால், அதற்காக காங்கிரஸ்காரர்களைப் பார்த்து அளிக்கப்பட்டது என்று புகார் சொல்லுவது சரியல்ல. எந்தக் கட்சியைச் சார்ந்தவராயினும் என்னைப் பொறுத்த மட்டில் யாருக்கும் தாட்சண்யம் காட்டப்படுவது என்பதில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : இன்றைக்கு பாதி உரம் நபர் மூலம் விநியோகிக்கப்படுகிறது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி பட்டியல் இருக்கிறது. அத்தனை பேர்களும் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். முப்பத்து ஏழு ரூபாய்க்கு விற்கவேண்டியது, பிளாக் மார்கெட்டில் அறுபது ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அம்மாதிரி பிளாக் மார்கெட்டில் விற்பவர்களில் எத்தனை பேர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பற்றாக்குறை இருக்கிற இடத்திலே கூடவே பிளாக் மார்கெட்டும் வருகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : எப்படி வருகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒருபுறம் பற்றாக்குறை இருக்கிறது. நம்முடைய மக்கள் சிலரிடத்தில் நாணயம் இல்லை. அதுதான் காரணம்.

SRI K. SATTANATHA KARAYALAR : பகிரங்கமாக விற்கிறார்கள்.

MR. SPEAKER : Order, order. The hon. Member cannot interrupt.

SRI K. SATTANATHA KARAYALAR : The hon. Minister is.

MR. SPEAKER : No, no.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உரம் விவசாயிகளுக்குத் தேவையாக இருக்கிறது. அதிக விலைக்காவது வாங்கி

தங்கள் நிலத்திற்கு போடவேண்டுமென்ற ஆவல் இருக்கிறது. பற்றுக்குறை இருக்கிற வரையில் ஓரளவுக்கு கள்ள மார்கெட்டும் இருக்கத்தான் செய்யும். அதை அடியோடு தவிர்ப்பது கஷ்டம். எனினும் அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். காங்கிரஸ் காரர்களுக்கு கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போடுவது எப்படி? அல்லது வேறு எந்தக் கட்சி அங்கத்தினர்களுக்கும் கொடுக்கக்கூடாது என்றும் உத்தரவு போடப்படவில்லை. இது கலெக்டர் பொறுப்பு. அதில் யாரும் தலையிடுவதில்லை. அம்மாதிரி யாராவது தலையிட்டால், அதை கலெக்டர்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அம்மாதிரி ஏற்றுக்கொள்ளுவது தவறு என்பதை இந்த மன்றத்தில் பகிரங்கமாகச் சொல்லுகிறேன். சுலபமாக எதை வேண்டுமானாலும் சொல்லிவிடலாம். ஊரெல்லாம் காங்கிரஸ்காரர்களாக இருக்கிறார்கள். அதற்காக இம்மாதிரி குறை சொல்லுவதில் என்ன பயன்?

Sri R. CHIDAMBARA BHARATHI : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர் ஸார். கனம் சட்டநாத கரையாளர் அவர்கள் காங்கிரஸ் காரர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உறுதியோடு சொன்னார்கள். காங்கிரஸ்காரர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அந்த ஜாபிதாவை வாசிப்பார்களா? அவர் சொன்னதை உறுதிப்படுத்துவார்களா? . . .

Mr. SPEAKER : அவர்கள் அம்மாதிரி சொல்லி 5 நிமிஷங்கள் ஆகிவிட்டன. அப்பொழுதே வேண்டுமென்றால் பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்பியிருக்க வேண்டும்? இப்பொழுது எப்படி அதன் பேரில் பாயிண்டு ஆப் ஆர்டர் கிளப்புவது?

*** The Hon. Sri M. BHAKTAVATSALAM :** யார் தவறுதல் செய்தாலும், நடவடிக்கை எடுக்கிறோம். ஸ்ரீ கல்யாணசுந்தரம், திருச்சியைப்பற்றிச் சொன்னார்கள். எனக்கும் நினைவு இருக்கிறது. ஆனால் விவரம் தெரியாது. இன்று ஒருவரிருவர் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. பெட்டிஷன்கள் வந்து கொண்டே இருந்தன; தவறுதல்கள் செய்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டால், லைசென்ஸ் ரத்து செய்யப்படுகிறது. இந்த மாவட்டத்தில் மாத்திரம் அல்ல, வேறு மாவட்டங்களிலும் அம்மாதிரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் சொல்ல வந்தது, தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும், அரசாங்கத்தைக் கண்டிப்பதற்காக இல்லை என்று கூறினார்கள். அரசாங்கத்தைக் கண்டிக்க சர்வ உரிமையும் அவர்களுக்கு உண்டு—கண்டிப்பதுதான் அவர்கள் உரிமை, இல்லாவிட்டால், எதிர்க் கட்சியே இல்லை. நெல் கொள் முதல் செய்தோம், நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி விற்பனை செய்தோம். சிற்சில இடங்களில் தவறு செய்பவர்கள் இருந்திருக்கிறார்கள், அவர்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறார்கள், நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. ஒருவர் தவறு செய்தார் என்றால், போலீஸ்காரரை அனுப்பி, உடனே கவனிக்கச் சொன்னோம். இருபது மூட்டைகள் பிடிபட்டன. சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டது. நியாய

15th December 1959] [Sri M. Bhaktavatsalam]

விலைக் கடைகள் அநேகமாக கூட்டுறவு சங்கங்கள் மூலமாகத்தான் நடைபெறுகின்றன, சென்னையைத் தவிர. சென்னை நகரத்திலே, டி.யு.ஸி.எஸ். பூரா நடத்த முடியவில்லை. ஆகவே, உர விநியோகத்திலோ, தானிய கொள்முதலிலோ, விற்பனையிலோ, யார் தவறுதல் செய்திருந்தாலும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி எடுக்கப்படும் நடவடிக்கைகளில், எதிர் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் ஒத்துழைப்பு பயன் படுத்திக் கொள்ளப்படும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

இன்று இந்த உணவுப் பிரச்னை முதல் முதலாக எல்லாருக்கும் கவலை அளிப்பது. அரசாங்கத்திற்கும் கவலை அளிப்பதுதான். விலைவாசியைக் குறைக்கவேண்டும் என்று ஒரு இயக்கம்—கிளர்ச்சி என்றே சொல்லலாம்—ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கு இனிஷியேடிவ் கம்யூனிஸ்ட் கட்சியினால் எடுத்துக்கொள்ளப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் (குறுக்கிடு) என்றாலே அது ஆகாது. மற்றவர்களுடைய நிலையும் அவர்களுக்குத் தெரியும், அதைப்பற்றி பயப்படவேண்டியதில்லை. கம்யூனிஸ்ட் கட்சி இதில் அக்கறை எடுத்துக்கொண்டதற்கு அவர்களுக்கு தக்க காரணம் உண்டு. அவர்கள் தீவிர பிரசாரம் செய்யவேண்டியிருக்கிறது, மக்களின் கவனத்தைக்கவர.

திரு. கல்யாணசுந்தரம் சொன்னார்கள், இதைக் கட்சிப் பிரச்சினையாக வைத்துக் கொள்ளக்கூடாது என்று. எங்களைப் பொருத்த வரையில், நாங்கள் அதை கட்சிப் பிரச்னையாகக் கருதவில்லை. ஸ்டேட் புட் அட்வைசரிக் கமிட்டியில் எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் கூப்பிட்டு, யோசனை சொல்லுங்கள் என்று கேட்கிறோம். அவர்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தகுந்த காரணம் உண்டு. அவர்கள் ஒரு அரசியல் கட்சி. மற்றக் கட்சிகளெல்லாம், அரசியல் கட்சிகளாக இயங்கவேண்டும் என்பதுதான் என் ஆவல். உண்மையாக அரசியல் கட்சிகள் ஆனால், மிகவும் நல்லதாகப் போய்விடும். இதைத் தகுந்த காரணத்தோடு ஒரு பிரச்சினையாகக் கிளப்பினார்கள். அதற்குப் பிறகு, பலம் போதாது என்று கருதி, மற்றவர்களைக் கூப்பிட்டார்கள்; அவர்களும் ஏதோ ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்று சேர்ந்தார்கள். முக்கியமான பிரச்சினை, அக்கரையுள்ள பிரச்சினை என்றால், இன்று அதைத் தீர்க்க என்ன சொன்னார்கள்? கவர்னர் உரைமீது பேசிய கனம் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர், அதை "வகுப்பு" என்று சொன்னார்கள், வகுப்பு என்ற வார்த்தையைச் சொன்னார்கள். "அணி வகுப்பு" என்று சொன்னார்கள். எதிர் கட்சிப் பத்திரிகைகளிலே "போராட்டம்" என்று வருகிறது. (சிரிப்பு) "அறப் போர்" அது. (பலத்த சிரிப்பு) அப்படிச் சுவர் ஒட்டிகளில் வருகிறது. இதுதான் செய்கிறார்கள். (ஸ்ரீ கல்யாணசுந்தரம்: செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதையும் செய்யத் தயார்). எதிர்க்கட்சியென்று இருந்தால், செய்ய வேண்டியதுதான். அப்படித்தான் எதிர்க்கட்சி இயங்கவேண்டும். ஆனால், அது எப்படி ஏற்பட்டது என்று சொல்ல வந்தேன். "சர்வ கட்சி முன்னணி" "அணி வகுப்பு" இதெல்லாம்—குத்தலாகப் பேசவில்லை

[Sri M. Bhaktavatsalam] [15th December 1959

—உண்மையாகச் சொல்லுகிறேன், கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பெரிய சாதனை. (சிரிப்பு). அவர்கள் வலையில் மற்றவர்களும் வேறு வழியில்லாமல் (சிரிப்பு) விழுந்தார்கள். அப்படி அந்த முறையிலே அது அமைந்திருக்கிறது.

SRI C. N. ANNADURAI : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ஸார். இந்த உணவு நிலையைப்பற்றி ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் தனித்தனியாக இருக்கும் கருத்துகளைத் தெரிவித்த பிறகு, அதிலே இது ஒரு கருத்து. இதிலே வலையிருப்பதாகவும், வலையே வீசாத அமைச்சரவர்கள் பேச வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கவர்னர் கூடவா கம்யூனிஸ்ட் கட்சியின் வலையில் விழுந்து விட்டார்கள் ?

MR. SPEAKER : இதெல்லாம் எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆகவே, நாங்கள் தயங்காமல், இதை ஏற்றுக்கொண்டு—விவாதத்திற்கு ஏற்றுக் கொண்டு—இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எந்த சூழ்நிலையிலே இந்த தீர்மானம் தயாரிக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னேன். மற்றபடி அவரவர்களுக்குப் பலம் சேர்த்துக் கொள்ள, சாமர்த்தியம் உள்ளவர்கள் வேண்டியதைச் செய்துக் கொள்ள வேண்டியதுதான். அது அவரவர்களுடைய, பலாபலத்தையும், திறமையையும், ஆற்றலையும் பொருத்தது. ஆனால் இது, இந்தத் தீர்மானம் எப்படி வந்தது என்று சொல்ல வந்தேன். ஆகவே, இந்தத் தீர்மானத்தை நான் ஒரு கண்டனத் தீர்மானமாகவே கருதுகிறேன். இத்தனை நான்-அபிஷல் வேலைகளையும் விட்டுவிட்டு, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியம் என்ன ? (ஒரு குரல் : உணவு பிரச்சினை) ஆமாம், உணவு பிரச்சினைதான், இன்னிக்கித்தான் பிரச்சினை ? ஆகவே, இதே கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய கமிட்டிக் கூட்டம் நடக்க இருக்கிறது. நாங்கள் சொன்னது என்ன ? கொஞ்சம் பொருங்கள், கவலையில்லையென்று யாரும் சொல்லவில்லை, கொஞ்சம் அவகாசம் கொடுங்கள், டிசம்பர் 26-ம் தேதி கூட்டத்தைப் போட்டிருக்கிறோம் என்று. ஆனால், இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாததால், நான் உங்கள் ஒத்துழைப்பை புறக்கணிப்பதாக எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கருதக்கூடாது. இந்த தீர்மானம் அவசியமா ? இது ஒரு சென்ஷர் ரெசலூஷன். சென்ஷர் ரெசலூஷன் இல்லாமல், எதிர்க்கட்சியே இருக்க முடியாது ; அது செய்ய வேண்டியதுதான். ஆனால் அது ஒரு சாதாரண வேலையில்லை. இந்தத் தீர்மானம் ஒரு கண்டனத் தீர்மானம், அரசாங்கத்தைக் கண்டிக்க எல்லோரும் சேர்ந்து ஒரு கல்லைத் தூக்கிப்போட்டுப் பார்க்கிறது என்ற முறையிலே, மாற்றலே இல்லாமல், எல்லா திருத்தங்களையும் விலக்கி நிறுத்தப்பட்டிருக்கிற ஒரு தீர்மானம். தீர்மானத்தில் நல்ல கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் அது கண்டனத் தீர்மானந்தான். மற்றொன்று. இந்த தீர்மானத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். ஏற்றுக்

15th December 1959] [Sri M. Bhaktavatsalam]

கொண்டால் அப்படியே ஏற்று நடத்த வேண்டும். இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால் அந்தத் தீர்மானத்தின்படி நடக்க வேண்டும்: அதே மாதிரி திருத்தங்களை ஏற்றுக்கொண்டாலும் அதன் மாதிரியே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுக்கொண்டால் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு யோசித்துச் செய்ய வேண்டியதாக இருக்கிறது.

Sri K. ANBAZHAGAN : இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால் அதன்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் அதனுல் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. தக்க முறையில் நடவடிக்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத்தான் அதில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. வேறு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே அந்த முறையில் இந்தத் தீர்மானத்தைக் கண்டு மறுப்பதற்கு என்ன காரணம் என்பதை விளக்குவார்களா?

*** THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு திருத்தம் கூட இல்லாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். உறுப்படியான ஒரு திருத்தம் கொடுத்திருந்தால் அதை ஏற்றுக்கொள்வதில் அர்த்தம் உண்டு. இந்த தீர்மானத்தில் "அட் லீஸ்ட் சென்ஷார்" என்று இருந்தால் அதை நிறைவேற்றினுல் அதில் அர்த்தம் உண்டு. திருத்தம் இல்லாமல் அதிலும் உறுப்படியான திருத்தம் இல்லாமல் திரு. அன்பழகன் அவர்களுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால், அதை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றினுல் நம் மன்றத்தைப் பார்த்து புகழ்ந்து பேச மாட்டார்கள்.

Sri K. ANBAZHAGAN : இந்த தீர்மானத்தைப்பற்றி தெரிவிக்கும் போது முன்னுல் அதை ஒப்புக்கொண்டார்கள். நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லும்போது அதில் குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லுகிறுர்கள். இப்போது இருக்கக் கூடிய ஊழல்களை நீக்க வேண்டும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம். அதற்கு நடவடிக்கை எடுப்பதில் என்ன தவறு இருக்கிறது. ஊழல்களை தவிர்க்க மறுப்பதற்குக் காரணம் என்ன என்பதை விளக்க வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை கொண்டு வருவதற்கு பதிலாக ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பிரேரேபித்திருக்கலாம். இப்பொழுதுள்ள திருத்தத்தில் ஒன்று சொல்லி இருக்கிறுர்கள். பத்து ஏக்கருக்கு மேற்பட்ட நில சொந்தக்காரர்களிடமிருந்து கண்டிப்பாக கொள்முதல் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பத்து ஏக்கருக்கு மேல் உள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்தால் எவ்வளவு வரும் அல்லது லெவி மூலமாக வசூல் செய்தால் எவ்வளவு வரும் என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். ஐந்து ஏக்கருக்கு மேலுள்ளவர்களிடமிருந்து செய்யலாமா அல்லது இரண்டு ஏக்கருக்கு மேலுள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்யலாமா என்றுகூட யோசிக்கப்பட்டதாக நான் சொல்லி இருக்கிறேன். அப்படி ஐந்து அல்லது இரண்டு ஏக்கர் உள்ளவர்களிடமிருந்து கொள்முதல் செய்தால் அது பெரிய

[Sri M. Bhaktavatsalam] [15th December 1959

தொல்லையை விளைவிக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. கண்டிப்பான லெவி முறையை வைத்தால் அதனாலும் பெரிய தொல்லைகள் ஏற்படும். அதைக் கடைப்பிடித்தால் தாசில்தார்களும் ரிவின்யூ இன்ஸ்பெக்டர்களும் பெரிய தொல்லையைக் கொடுக்கிறார்கள் என்ற புகார் வரும். நிலவரி வசூல் செய்வதுபோல் வசூல் செய்வதாக ஏற்படும். இப்பொழுது வியாபாரிகளைப்பற்றி சொல்வதுபோல் புகார்கள் வரும். வியாபாரிகளிடமிருந்து வாங்குவதைக்கண்டு குறை சொல்வது போன்று குறை சொல்லக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே ஐந்து ஏக்கருக்கு மேல் போட்டால் என்னவாகும் என்பதை கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். ஐந்து ஏக்கருக்கு மேல் போட்டால் லட்சத்தி முப்பத்தி மூன்று ஆயிரம் டன் தான் கிடைப்பதாக இருக்கிறது. பத்து ஏக்கருக்கு மேல் என்று வைத்துக்கொண்டால் இன்னும் குறைவாகத்தான் கிடைக்கும். ஐந்து ஏக்கர் என்று போட்டாலே லட்சத்தி முப்பத்தி மூன்று ஆயிரம் டன் தான் வரும். பத்து ஏக்கர் என்று வைத்துக்கொண்டால் இன்னும் குறைவாகத்தான் வரும். வேண்டுமானால் இன்னும் அதிகமாகக்கூடப் போடலாம். அவர்கள் விளைவிக்கக்கூடியது அப்படியே கொடுத்து விடும்படியாகவும் போட்டுவிடலாம். அதற்கெல்லாம் சட்டம் இடம் கொடுக்க வேண்டும். அரசியல் சட்டத்தில் இடம் கொடுக்க வேண்டும். இவைகளை எல்லாம் பார்த்து செய்யவேண்டியதாக இருக்கிறது. அதனால்தான் இந்தத் தீர்மானத்தையும் திருத்தத்தையும் அப்படியே ஏற்றுக்கொண்டு நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது என்று சொன்னேன். அப்படி நிறைவேற்றுவதும் சரியல்ல, நல்லது அல்ல. லெவியைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றியும் யோசித்துக்கொண்டிருக்கிறோம். நாம் ஏதாவது ஒரு முடிவு செய்யவேண்டியதாக இருக்கிறது. என்ன எதிர் பார்க்கலாம், என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றி முடிவு செய்வதற்குதான் ராஜ்ய உணவு ஆலோசனை குழு ஒன்றை அமைத்து அவர்களைக் கலந்துகொண்டு ஒரு முடிவுக்கு வரலாம் என்றிருக்கிறோம். கனம் கலியாணசுந்தரம் சொல்வதுபோல் பத்து ஏக்கர் என்று வைத்துக்கொண்டால் அதற்கு மேல் லெவி போட வேண்டும் என்றால் அதற்கு ப்ரைஸ் கண்ட்ரோல் வைக்க வேண்டும். அவர்களுக்கு அந்த விலை கட்டுபடியாகுமா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. ப்ரைஸ் கண்ட்ரோல் செய்தால் அந்த விலைக்குத்தான் அவர்கள் கொடுக்கவேண்டும். அதனால் ஐந்து ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு பாதகம் ஏற்படும். அவர்களுடைய நெல் எல்லாவற்றையும் அவர்கள் விற்பது இல்லை. இரண்டு ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள்கூட தங்களுடைய நெல் எல்லாவற்றையும் விற்பது இல்லை. அவர்கள் தங்களுடைய சாப்பாட்டுக்குப் போக மிச்சமுள்ளதை விற்க வேண்டியதாக இருக்கும். அப்படி விற்றுதான் மற்ற புளி, மிளகாய் போன்றவைகளை வாங்க வேண்டியதாக இருக்கும். அதனால் ப்ரைஸ் கண்ட்ரோல் வைத்தால் அவர்கள் அந்த சாமான்களையெல்லாம் வாங்குவதற்கு முடியாமல் இருக்கும். ஏனென்றால் அவைகளின் விலைகூட இப்பொழுது அதிகமாக உயர்ந்திருக்கிறது. இரண்டு மூன்று ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கக்கூடியவர்

15th December 1959] [Sri M. Bhaktavatsalam]

களுடைய நிலைமையும் அப்படித்தான். மற்ற சாமான்கள் வாங்குவதோடுகூட அவர்களுக்கு வேண்டிய விவசாயக்கருவிகளை வேறு வாங்க வேண்டியதாக இருக்கும். ப்ரைஸ் கண்ட்ரோல் செய்யாமல் ஒரு குறிப்பிட்ட விலைக்குக் கொடுத்து விடுங்கள் என்று சொன்னால் அது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவற்றையும் நன்றாக பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். ப்ரைஸ் கண்ட்ரோல் வைத்தால்-பொது ஸ்தாபனங்களும் அந்த விலைக்குக் கிடைக்காமல் இருக்கலாம். அப்பொழுது அந்த பொது ஸ்தாபனங்கள் சர்க்காரை அணுகி தங்களுக்கு உணவு பொருள் வேண்டும் என்று கேட்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதற்கு வேண்டி நாம் அதிகமாக ப்ரொக்யூர் செய்யவேண்டியதாக இருக்கும். ப்ரைஸ் கண்ட்ரோல் இல்லையென்றால் அதற்கு மேல் லெவி செய்வது என்பது எவ்வளவு தூரம் பொருந்தும். இதையெல்லாம் பார்க்க வேண்டும். இந்த தீர்மானத்தின் மூலம் சர்க்காருக்கு ஒத்துழைப்பு இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்வதற்கு பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதில்தான் நாங்கள் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

மண்டலத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைத் தெரிவித்தார்கள். மண்டலத்தைப்பற்றி நான் வேறு வேறு கருத்துக்களை தெரிவித்ததாகச் சொன்னார்கள். அது வாஸ்தவம்தான். விலைவாசி ஏறுவதற்கு பல காரணங்கள் உண்டு. ஒரே ஒரு காரணம் நன்றாகத் தெரிந்திருக்கிறது. அதுதான் வியாபாரிகளுடைய ஸ்பெகுலேஷன். விலைவாசிகள் உயர்ந்ததற்கு வியாபாரிகளும்தான் ஒரு முக்கியமான காரணம். நியாய விலைக் கடைகள் வைத்தவுடன் சில இடங்களில் படி அரிசி ஒன்றே அரைக்கால் ரூபாயாக விற்கப்பட்டது பதினைந்து அணாவிற்கு இறங்கியது. இது எதனால் என்றால் வியாபாரிகள்தான். இப்படி விலையை குறைத்தவுடன் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டதா? வியாபாரிகள் ஒழுங்காக இல்லை. ஜனங்களுக்காகத் தான் வியாபாரம் இருக்க வேண்டும். மற்றப்படி இன்னும் அதிகப் படியாக ஆயிரம் நியாய விலை கடைகளை வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இரண்டாயிரம் போதாது மூவாயிரம் கடைகள் வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ரொம்ப பற்றாக்குறை இருந்தபோதுகூட இரண்டாயிரம் கடைகளுக்கு மேல் இல்லை. ரேஷனாகக் கொடுக்கப்பட்டபோதுகூட அவ்வளவு கடைகள் இல்லை. ஐந்நூறு பேர்களுக்கு ஒரு கடை வேண்டும் என்று கேட்கிறார்கள். பனிரெண்டு அணாவுக்கு படி அரிசி விற்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசாங்கத்தினிடமிருந்து வாங்கும் அரிசியை அதாவது பர்மா அரிசியை பனிரெண்டு அணாவுக்கு விற்கப்படுவது அவர்களுக்குத் தெரியாது போல் தோன்றுகிறது. அது தெரிந்திருந்தால் பத்து அணாவுக்கு விற்க வேண்டும் என்று சொல்லி இருப்பார்கள். பனிரெண்டு அணா அல்லது பனிரெண்டே கால் அணாவுக்குத்தான் அது விற்கப்படுகிறது.

தனி மண்டலத்தைப்பற்றி சொன்னார்கள். அப்படி அமைப்பதால் பல விதத்திலும் நல்லதுதான். இருந்தாலும் அப்படி அமைப்பதிலுள்ள சாதக பாதகங்களைப் பார்க்க வேண்டியதாக இருக்

கிறது. அதன் பாதகங்கள் இப்பொழுது நேராகத் தெரியவில்லை. பத்திரிகைகளைப் பார்த்திருந்தால் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். இப்பொழுது ஆந்தராவிலிருந்து நிறைய அரிசி மதுரை, திருச்சி, கோயம்பத்தூர் முதலிய இடங்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அப்படி இல்லாமல் தனி மண்டலமாக வைத்தால் ஆந்தராவிலிருந்து அரிசி வருவதற்குக் கஷ்டமாக இருக்கும். இப்பொழுது வியாபாரிகள் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அதனால் சாதகம் இருக்கிறது. ஆனால் தனி மண்டலமாக வைத்து விட்டால் அப்படி அரிசியை அவர்களால் வாங்க முடியாது. அதனால் தனி மண்டலம் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. (சிலருடைய குறுக்கீடல்) எங்களுக்கும் கொஞ்சம் அறிவு இருக்கிறது. சிலருக்கு இருப்பதைப்போல் அவ்வளவு அறிவு இல்லாவிட்டாலும் கொஞ்சமாவது எங்களுக்கும் அறிவு இருக்கிறது. ஆந்திராவில் இருந்து இப்போது வருகிறது. இங்கே அது விற்கப்படுகிறது. தனி மண்டலம் என்றால் அப்போது வராது. துவரம்பருப்பு என்றால் அப்போது விலை அதிகமாகத் தான் போகும். அதைத் தடுக்க முடியாது.

2-00 p.m. MR. SPEAKER: We decided earlier to sit till 2 o'clock. It is 2 o'clock now and the Hon. Minister has not finished his reply. I think the House will have no objection to sit till the Hon. Minister finishes his reply, after which the resolution will be put to the vote of the House. (Hon. Members: Yes, Sir.) The Hon. Minister may continue.

*** THE HON. SRI M. BHAKTAVATSALAM:** தனி மண்டலமாகப் பிரித்துவிடுவது என்றால் அப்போது பஞ்சாப் மாகாணத்தில் இருந்து வருகிற துவரம்பருப்பு விலை ஏகமாகக் கூடித்தான் போகும். வியாபாரிகளின் தொந்தரவுதான் அப்போது. ஸ்பெகுலேஷன்தான். பற்றாக்குறை இல்லாதபோதே இருப்பதாக விலையைக் கூட்டிவிடுவார்கள். ஜோனல் கவுன்சில் இருக்கிறபோது வெளியில் தானியம் போவதற்கு மத்திய அரசாங்கம் எப்படி உத்தரவு போட முடியும் என்று கேட்கிறார்கள். இது திராவிடஸ்தான் இல்லை. திராவிடஸ்தான் இன்னும் வரவில்லை. இதுவும் மத்திய அரசாங்கத்தின் ஒரு பாகமாகவே இருக்கிறது. இதை மத்திய அரசாங்கம் ரெகுலேட் பண்ணாது யார் பண்ணுவது? நமக்கும் மற்றவர்களிடமிருந்து சிலசில பொருள்கள் வேண்டித் தான் இருக்கின்றன. நாமே எல்லோருக்கும் எல்லாவற்றையும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்ல முடியாது. நமக்கு இரும்பு வேண்டும். இங்கே சேலத்தில் இருக்கிற, நீலகிரியில் இருக்கிற இரும்பை எடுத்து உபயோகித்துக்கொள்ள நாம் ஆரம்பிக்கவில்லை. இப்போது வெளியில் இருந்துதான் இரும்பு வர வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கம்தான் இவற்றையெல்லாம் ரெகுலேட் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் எதற்காக செய்யவேண்டும் என்று இவர்கள்தான் கேட்கிறார்கள். மற்ற எதிர்க் கட்சிகள் எதுவும் இதை ஒத்துக்கொள்ளவில்லை. இது இந்த ஒரு கட்சிக்கு மட்டும்தான் பொருத்தமாக இருக்கலாம்.

புளியைப் பற்றி ஒன்று விளக்க விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் புளி உற்பத்தி 26 ஆயிரம் டன். நமக்கு மற்ற

15th December 1959] [Sri M. Bhaktavatsalam]

ராஜ்யங்களில் இருந்து வருவது 20 ஆயிரம் டன். ஆக நமக்கு வேண்டியது 46 ஆயிரம் டன். புளி சம்பந்தப்பட்டவரையில் இங்கிருந்து ஏற்றுமதி செய்வது என்கிற பிரச்சனை இல்லை. சர்க்கரை பற்றுக்குறை என்று நினைத்துக்கொண்டு கொஞ்சம் பற்றுக்குறை இருக்கிறபோதே கள்ளமார்க்கெட் எப்படி வந்ததோ அப்படி எல்லாப் பொருள்களுக்கும் தட்டு ஏற்படுத்தப்பட்டு விடுகிறது.

அப்படி மிளகாயைப் பொறுத்த வரையில் நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாவது 75 ஆயிரம் டன். இன்னும் 200 டன்தான் வெளியில் இருந்து வருகிறது. இதில் அவ்வப்போது கொஞ்சம் ஏற்றுமதியாகிறது. இவைகளை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசாங்கம் நம்மைக் கேட்காமல் உத்தரவு போடுவதே இல்லை. அவர்கள் நம்மைக் கேட்கிறார்கள். நாம் ஏற்றுமதி கூடாது என்றால் அவர்கள் உத்தரவு போடமாட்டார்கள். ஆனால் ஒன்று சொல்கிறேன். உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு அது தெரியும். சுமார் இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிற விவசாயிகள் மிளகாய் உற்பத்தி செய்கிறார்கள். நல்ல விலை இருந்தால் இவர்களுக்கு ஆயிரம் ரூபாய் அல்லது 750 ரூபாய் கிடைக்கும். நல்ல விலை வேண்டுமென்றால் ஓரளவு ஏற்றுமதியை அனுமதிக்கவேண்டும். அப்படி ஒன்றும் நம்முடைய ஏற்றுமதி அதிகம் இல்லை. 1956-57-ல் நாம் 75 ஆயிரம் டன் உற்பத்தியில் ஏற்றுமதி செய்திருப்பது மூவாயிரத்து இருநூறு டன்தான். 1957-58-ல் நாலாயிரத்து ஐநூறு டன் ஏற்றுமதி செய்திருக்கிறோம். 1958-59-ல் இந்த வருஷத்தில் நாம் 700 டன்தான் ஏற்றுமதி செய்திருக்கிறோம். ஏற்றுமதியை நிறுத்திவிடலாமே என்று சொல்லலாம். நாம் நிறுத்திவிடலாம் என்று சொன்னால் அவர்கள் நிறுத்திவிடுவார்கள். ஆனாலும் நீண்டகால நன்மையை உத்தேசித்து நாம் மட்டும் நமக்கு இருக்கிற பாரின் மார்க்கெட்டை நிறுத்திக்கொண்டுவிடக்கூடாது. விவசாயப் பொருள்களுக்கு இன்று பாரின் மார்க்கெட் இருக்கிறது. அதனால்தான் கொஞ்சம் சுபிட்ச நிலைமை ஏற்படும். நாம் ஏற்றுமதி செய்வதும் அதிகம் இல்லை. இதைக்கூட நிறுத்திவிடுங்கள் என்று நாம் சொன்னால் அவர்கள் நிறுத்திவிடத் தயார். ஆனால் நமக்குத்தான் மார்க்கெட் போகிறது. ஆகவே நாம்தான் இதைப்பற்றி நன்கு யோசிக்க வேண்டும்.

நேற்று முன்தினம் தான் சேலத்திற்குப் போயிருந்தேன். சேலம் மார்க்கெட் பெரிய மார்க்கெட் என்று அங்கத்தினர்களுக்குத் தெரியும். அங்கே உள்ள விலைவாசிகளை நானே நேரில் விசாரித்தேன். இப்போது எல்லா சாமான்களுடைய விலையும் குறைந்து வருகிறது. குறிப்பாக புளி முதல் ரகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். விலை படிப்படியாகக் குறைந்து வருகிறது. நவம்பர் முதலில் ரூ. 31.33 ஆக இருந்தது. அப்புறம் வாராவாரம் அதன் விலை ரூ. 30.8, ஆக, ரூ. 28.9 ஆக குறைந்து வந்தது. இப்போது 13—12—1959 வாரத்தில் ரூ. 27 ஆகக் குறைந்திருக்கிறது. இரண்டாவது ரகம் 28 ரூபாயாக இருந்தது 13—12—1959-ல் 25 ரூபாயா

[Sri M. Bhaktavatsalam] [15th December 1959

கக் குறைந்திருக்கிறது. இன்னும் சம்பா நெல் ரூ. 28 ஆக இருந்தது, ரூ. 23-8-0 ஆகக் குறைந்திருக்கிறது. அரிசி விலை முதல் ரகம் நவம்பரில் ஒரு மூட்டை 66 ரூபாயாக இருந்தது, இப்போது 58 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. இரண்டாவது ரக அரிசி 59 ரூபாயாக இருந்தது, இப்போது 50 ரூபாயாயிற்று. இது மாத்திரம் இல்லை. கம்பு, சோளம், கொள்ளு முதலிய தானியங்களின் விலையும் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. சோளம் 36 ரூபாயாக இருந்தது, 34 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. இவை எல்லாம் சேலம் மார்க்கெட். விலைகளை ஒவ்வொரு வாரமும் நாங்கள் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம். அதுவும் சேலத்தில் நானே நேரில் விசாரித்துத் தெரிந்துகொண்டது. இன்னும் எனக்கு வந்திருக்கிற விவரங்களைப் பார்த்தால்—திருச்சிராப்பள்ளி மார்க்கெட்டிலும் இப்படியேதான் குறைந்து வந்துகொண்டிருக்கிறது. அதே மாதிரி நாகர்கோயில் மார்க்கெட்டில் எப்படி குறைந்து வந்திருக்கிறது என்பதற்கும் நான் திருஷ்டாந்தங்கள் சொல்லமுடியும். இப்போது குறைந்திருப்பது பெரிது என்று நான் சொல்லவில்லை. ஆனல் சேலம் மார்க்கெட்டைப் பார்க்கிறபோது எனக்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறதென்று சொல்ல விரும்புகிறேன். இதனல் வேறு எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. நாம் இதிலே இன்னும் அதிக கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறோம். நான்கு ராஜ்யங்களுமாகச் சேர்ந்து மண்டலம் என்று வைத்துக் கொண்டிருக்கிறபோது அதில் சாதகங்களும் இருக்கின்றன. பாதகங்களும் இருக்கின்றன. அதை வைத்துக்கொள்வது என்றல் இரண்டுக்கும்தான் நாம் தயாராக இருக்கவேண்டும். இப்போது கூட அதை எடுத்துவிடலாம் என்றல் எனக்கு அதில் ஆட்சேபனை கிடையாது. அதை எடுப்பதிலும் சில நன்மைகளும் இருக்கின்றன. தீமைகளும் இருக்கின்றன.

இன்னென்று. உணவு தானியங்களின் விலையைக் குறையுங்கள் என்று இங்கே சொல்கிறர்கள். குறையுங்கள் என்றல் ஒரு வகையில் அது விவசாயிகளை பாதிக்கிறது. பாதித்தாலும் பரவாயில்லை என்று யாரும் சொல்லமாட்டார்கள். நாம் இங்கே சொல்வது எல்லாம் பத்திரிகையில் வருகிறது. பொருள்களின் விலையைக் குறைக்கவேண்டும், நஷ்டம் ஏற்படாது விவசாயிகளுக்கு சப்ஸிடி கொடுக்கவேண்டும் என்று சொல்கிறர்கள்.

பனிரெண்டு அணுவிற்கு கொடுக்கவேண்டும். இரண்டாயிரம் போதாது, 3,000-க்கு மேல் வேண்டும். விவசாயிகளுக்கு விலையும் குறையக்கூடாது, ஆனல் குறைந்த விலைக்கும் கொடுக்கவேண்டும். இதற்கு ஒரு கணக்கு போட்டுப் பார்த்தோம். அப்படிப் போட்டுப் பார்த்ததில் வருடம் ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் ஆகிறது. அதற்கு யார் பணம் கொடுப்பார்கள். அதை பரிபூரணமாக நடத்த வேண்டுமென்றல் வருடம் ஒன்றுக்கு 15 கோடி ரூபாயாகும். அவ்வளவு தூரம் சப்ஸிடி கொடுப்பதற்கு எதிர்க் கட்சி அங்கத்தினர்கள்கூட ஒத்துக்கொள்ளமாட்டார்கள். விலைவாசி உயர்வை தடுப்பதற்கு நாங்கள் என்ன வேண்டுமானலும் செய்கிறோம் என்றர்கள்.

15th December 1959] [Sri M. Bhaktavatsalam]

அதற்கு நான் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இதற்கு, ஒரு நீண்ட காலத் திட்டம் அமைப்பதில் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI C. N. ANNADURAI : தொகை அதிகமாகிறது என்பதால் அது வேண்டாமென்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா? சப்ஸிடி கொடுப்பதை கொள்கையளவில் எதிர்க்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாயிகளுக்கு சப்ஸிடி பலவிதத்தில் கொடுக்கிறோம். ஆனால் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. விலையையும் குறைக்க வேண்டும், ஆனால் விவசாயிகளுக்கும் கூடுதல் கொடுக்கவேண்டும் என்றால் அது ஒரு பெரிய பாரம். பொறுப்புள்ள அரசாங்கம் எதுவும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் மறுபடியும் அந்த பாரம் விவசாயிகள் தலையில்தான் விழும்.

SRI C. N. ANNADURAI : விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையில் அதிகப் பணம் கொடுத்து வாங்குவதற்கு சர்க்கார் சப்ஸிடி தரமாட்டார்கள். அதுதான் அமைச்சர் அவர்களின் கருத்தா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாயிகளுக்கு நாம் பலவிதத்தில் சப்ஸிடி கொடுக்கிறோம். அவர்களுக்கு பல விதத்தில் மான்யங்கள் கொடுக்கிறோம். பலவிதத்தில் கடன் கொடுக்கிறோம், குறைந்த வட்டியில். ஆனால் அவர்கள் சொல்கிற விலையைக் கொடுத்துவிட்டு, குறைந்த விலைக்கு விற்று அதனால் துண்டு விழும் தொகை கோடிக்கணக்கில் இருந்தால் அந்தக் கோடிக்கணக்கான ரூபாயை நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்று பொறுப்புள்ள அரசாங்கம் சொல்ல முடியாது. மக்கள் நன்மையைக் கருத்தில் கொண்டவர்கள் பொறுப்பில்லாமல் அப்படி சொல்ல முடியாது. அதைப் பின்னால் உபயோகித்துக்கொள்ளலாம். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்னென்ன செய்ய வேண்டும்? சப்ஸிடி கிராண்ட்ஸ், லோன்ஸ், நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பது இவைகளை இதுவரையில் செய்தது போக, உடனடியாக விவசாயத்தைப் பெருக்குவதற்கு, விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு வேறு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது பற்றி அனுபவமும், நிபுணத்துவமும் பொருந்திய சிலரைக்கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு அந்தக் கமிட்டி தமிழ் நாட்டிலுள்ள பல ஜில்லாக்களிலும் சுற்றி கூர்ந்து பரிசிலனை செய்து அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அவை ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஜில்லாவாரியாக, நானே நேரில் சென்று சட்டமன்ற பிரதிநிதிகள், ப்ளானிங் போர்ட் அங்கத்தினர்கள், விவசாயப் பிரதிநிதிகள், அதிகாரிகள் எல்லோரையும் வைத்துக்கொண்டு விவாதம் நடத்தி ஜில்லா ரீதியாக ராஜ்ய ரீதியாக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளில் கவனம் செலுத்தி வருகிறோம். ஒரு நீண்ட காலத் திட்டம் வைத்திருக்கிறோம். எப்படிச் செய்தால் உற்பத்தியை இரட்டிப்பாகப் பெருக்கலாம், எப்படிச் செய்தால் விவசாயிகளுக்கு விலை குறைந்தாலும் அவர்களுக்குக் கட்டுப்படி

யாகும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. எப்பொழுதும் சப்ஸிடி கொடுத்துக்கொண்டிருக்கவேண்டும் என்று இருக்க முடியாது. விவசாயம், ஒரு உயர்ந்த தொழிலாகும். சப்ஸிடி கொடுத்து விவசாயம் செய்யவேண்டுமென்றால் அது விவசாயிகளின் கௌரத்திற்கு உகந்ததல்ல. அவர்களுக்குள்ள சுயமரியாதைக்கு அது அழகல்ல. இன்று நாம் சப்ஸிடி கொடுக்கிறோம் என்றால் அது தாற்காலிகமானதாகும். எப்பொழுதும் சப்ஸிடி கொடுக்கவேண்டுமென்பதை அனுபவமுள்ள விவசாயிகள், ஊக்கமுள்ள விவசாயிகள், நல்ல விவசாயிகள் ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இன்று சப்ஸிடி வேண்டியிருக்கலாம். அவர்கள் வசதியை மேலும் பெருக்கி அவர்களை மேலும் ஊக்குவித்தால் உற்பத்தியை இரட்டிப்பாக்கி அதன் மூலம் விலை குறைந்தாலும் அவர்களுக்கு கட்டுப்படியாகும்படி செய்யவேண்டும். அதுதான் நீண்ட காலத் திட்டமாக இருக்கும்.

மின்சாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசியபோது 7 நயா பைசாவாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது அவ்வளவுதான் இருக்கிறது. அது, 2 நயா பைசாவாக இருக்கவேண்டுமென்றுகூட சொல்லலாம். தர்மல் ஸ்டேஷன்ஸ் இருக்கின்றன. அதற்கு செலவு அதிகமாகிறது. நஷ்டப்பட்டுக்கொண்டு கொடுக்கலாம் என்றால் ஒன்றல்லது இரண்டு வருடங்களுக்குக் கொடுக்கலாம். ஆனால் நிரந்தரமாக நஷ்டமாகக் கொடுக்க முடியாது. ஒரு வருடத்திற்கு முன்பு டெல்லியில் விவசாய அமைச்சர்கள் மகாநாடு நடந்தது. அப்பொழுது, ஒவ்வொரு ராஜ்யத்திலும் மின்சார கட்டணம் எவ்வளவு என்று கணக்கிட்டுச் சொன்னார்கள். சென்னை மாகாணத்தைப் பார்த்துவிட்டு அதன் அளவு மற்ற ராஜ்யங்கள் வரவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். தர்மல் ஸ்டேஷன்ஸை குறைத்திருக்கிறோம். எல்லாவற்றையும் சேர்த்து ஏழு நயா பைசா என்று வைக்கப்பட்டிருக்கிறது. நீண்ட காலத் திட்டம் பற்றி சில அங்கத்தினர்கள் பேசினார்கள். ராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்கள் வழக்கம் போல் பேசினார்கள், பெரிய ஆறுகள் எல்லாம் இருக்கிறது என்று. அவைகளை இப்பொழுது கவனிக்காமலா இருக்கிறோம்? பரம்பிக்குளத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படவில்லையா? அயல் ராஜ்யத்தோடு உடன்பாடு ஏற்பட்டு அது எடுத்துக்கொள்ளப்பட்டது. நாம் எதை எதை செய்திருக்கிறோமோ அவைகளைப் பற்றி திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வதில் பயன் இல்லை. நமது ஊரில் தண்ணீர் இல்லாவிட்டாலும் அதைக் கொண்டுவரக்கூடிய திட்டங்களைப்பற்றி கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் இந்த விலைவாசி உயர்வைப் பற்றி அவர்களுக்கும் கவலை உண்டு. அது பரிசீலனை செய்யப்படுகிறது. நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கொண்டு உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி டிஸம்பருக்குள்ளாக முடிவு செய்யவேண்டும் என்றிருக்கிறது. விலை குறைந்தது போதாது, இன்னும் குறையவேண்டும். சில சமயம் குறைகிறது சில சமயம் ஏறிவிடுகிறது. ஆக, இந்த நீண்ட காலத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, இந்தத்

15th December 1959] [Sri M. Bhaktavatsalam]

தீர்மானத்திற்கோ அல்லது இந்தத் திருத்தத்திற்கோ அவசியமில்லை. அப்படி அவசியமிருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையைப்பற்றி விளக்கினேன். ஆகவே, இந்தத் தீர்மானத்தை அல்லது இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. உங்களுக்காகத்தான் இதைக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னாலும் இவைகளை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I shall now put the amendment of the hon. Member, Sri P. S. Chinnadurai, to the vote of the House.

The amendment of the hon. Member, Sri P. S. Chinnadurai, was put and lost.

The amendment of the hon. Member, Sri M. Kalyanasundaram, was put and lost.

SRI C. N. ANNADURAI : Sir, before putting the Resolution to the vote of the House

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think the hon. Member can intervene now.

SRI C. N. ANNADURAI : Before putting the Resolution to the vote, I want to appeal to the Hon. Minister

MR. SPEAKER : Not now. The hon. Member should have made the appeal before the amendments were put to vote and not after the amendments have been put to vote. I am sorry he cannot make a speech now.

Now I shall put the Resolution of the hon. Member, Sri K. Anbazhagan, to the vote of the House.

The question is—

'This House is of opinion that the measures taken by Government to arrest the upward trend in the prices of Foodgrains and other essential articles have failed to achieve the objective and therefore recommends to the Government to take effective steps to prevent speculative activities of vested interests and to ensure supply of foodgrains to the public at reasonable prices at the same time ensuring fair price for the Agriculturists.'

The resolution was put and the House divided thus :

Ayes.

Sri P. S. Chinnadurai.
Sri C. N. Annadurai.
Sri A. Govindasamy.
Sri M. Kalyanasundaram.
Sri S. Pakkirisami Pillai.
Sri K. Ramachandran.
Sri M. Jagannathan.

Ayes—cont.

Sri K. Anbazhagan.
Sri N. K. Palanisami.
Sri Sowdi S. Sundara Bharathi.
Sri M. Karunanithi.
Dr. (Srimathi) Sathiyavanimuthu.
Sri N. Marudachalam.
Sri S. A. M. Annamalai.
Sri A. V. P. Asaithambi.
Sri M. Anandan.
Sri V. K. Kothandaraman.
Sri C. Natarajan.
Sri S. M. Annamalai.
Sri M. P. Sarathi.
Sri P. U. Shanmugam.
Sri K. Sattanatha Karayalar.
Sri P. Veerappa Kounder.

Noes.

Sri B. Bhaktavatsalu Naidu.
Sri M. J. Jamal Moideen.
Sri M. Alagirisamy.
Sri G. Annamalaimuthuraja.
Sri K. S. Ardhanareeswara Gounder.
Sri V. Arunachala Thevar.
Sri A. E. Chandrasekhara Nayagar.
Sri R. Chidambara Bharathi.
Sri N. P. M. Chinniah Kovunder.
Sri A. Chinnasami.
The Hon. Sri C. Subramaniam.
The Hon. Sri M. Bhaktavatsalam.
The Hon. Sri M. A. Manickavelu.
The Hon. Sri P. Kakkan.
Sri P. G. Karuthiruman.
Sri D. Dasarathan.
Sri A. S. Duraiswami Reddiar.
Sri T. P. Elumalai.
Sri G. Gomathisankara Dikshitar.
Sri G. G. Gurumurthi.
Sri P. Jayaraj.
Sri R. Kandasami.
Sri N. Kandasami Padayachi.
Sri M. R. Kandaswami Mudaliyar.
Sri T. Karia Gounder.
Sri K. Karuthappa Gounder.
Sri S. Khadar Sheriff.
Sri Kolanda Gounder.
Sri V. K. Krishnamurthy.
Sri P. Kuppusami.
Sri P. S. K. Lakshmipathiraj.

15th December 1959]

Noes—cont.

Sri S. Lazar.
Sri T. Manavalan.
Sri P. G. Manickam.
Sri V. S. Manickasundaram.
Sri A. Mariappan.
The Hon. Sri V. Ramaiah.
The Hon. Srimathi Lourdhammal Simon.
Srimathi T. N. Anandanayaki.
Srimathi Hemalatha Devi.
Srimathi Kamalambuja Ammal.
Srimathi Kolanthai Ammal.
Srimathi A. S. Ponnammal.
Srimathi Rajarathi Kunchithapatham.
Srimathi Savithri Shanmugham.
Sri J. Matha Gowder.
Sri M. C. Muthukumaraswamy.
Sri S. Nagaraja Monigar.
Sri T. M. Nallaswami.
Sri K. G. Palaniswamy Gounder.
Sri K. Pandiyaraj.
Sri M. P. Periasami.
Sri K. Ponnian.
Sri S. Ramakrishna Thevar.
Sri A. Raja Gounder.
Sri P. Ramachandran.
Sri M. Ramachandra Reddi.
Sri N. S. Ramalingam.
Sri S. Ramalinga Padayachi.
Sri K. Ramasubbu.
Sri A. Chidambaranatha Nadar.
Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran.
Sri S. Sadasivam.
Sri S. C. Sadayappa Mudaliar.
Sri P. Arasu.
Sri S. Sangili.
Sri V. Sankaran.
Sri A. Senapathi Gounder.
Sri T. Sivagnanam Pillai.
Sri R. Srinivasa Iyer.
Sri A. R. Subbiah Mudaliar.
Sri R. Subramaniam.
Sri K. S. Subramania Gounder.
Sri R. Swaminatha Merkondar.
Sri T. S. Swaminatha Odayar.
Sri S. Thangavelu.
Sri P. Urkavalan.
Sri G. Vagheesam Pillai.
Sri A. Vedarathnam.
Sri N. M. Velappan.

Noes—cont.

Sri K. R. Viswanathan.
Sri M. William.
Sri M. Kulandaisami Gounder.
Sri P. Vedamanickam.

Ayes—23.

Noes—84.

Neutral.—Nil.

The resolution was lost.

2 30. p.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned.

V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. STATUTORY RULES AND ORDERS.

53. Notification issued in G.O. Ms. No. 1994, Local Administration, dated 27th November 1959 regarding the date of coming into force of the Madras District Development Councils Act, 1958.

54. Notification issued in G.O. Ms. No. 1995, Local Administration, dated 27th November 1959 regarding choosing by Presidents of panchayats of a Member to a District Development Council under the Madras District Development Councils Act, 1958.

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

18. Notification issued in G.O. No. 2013-Local Administration, dated 28th November 1959 regarding the programme of implemention of Madras District Development Councils Act, 1958 and the Madras Panchayats Act, 1958.

19. Notification issued in G.O. Ms. No. 1995, Local Administration, dated 27th November 1959 regarding the constitution of Development Districts under the Madras District Development Councils Act, 1958.

APPENDIX I.

[Vide answer to starred question No. 186 asked by Sri R. Srinivasa Iyer at the meeting of the Legislative Assembly held on 15th December 1959, page 127 supra.]

The particulars of materials obtained after dismantling the buildings that were demobilized for the construction of the Women Students' Hostel are given below :—

List of materials obtained after dismantling the existing garages, stores in the compound.

Serial number.	*Quantity.*	*Description of material.*
1	2,477 c.ft	Brick.
2	1,022 c.ft.	Flooring concrete.
3	3,100 Nos.	Flat tiles.
4	2 Nos.	Door D. 3' 6" × 6' 6".
5	2 ,, ...	Door D. 8' 0" × 9' 6".
6	7 ,, ...	Window W. 4' 0" × 5' 0".
7	4 ,, ...	Ventilator 4' 0" × 2' 0"
8	1 No.	Almyrah 3' 6" × 4' 6".
9	1 ,, ...	Partition with expanded metal with under frame— (a) 18' 0" × 10' 0". (b) $\frac{18' 0'' \times 4' 3''}{2}$
10	129 c.ft.	Wall plate 4" × 3".
11	64' 6"	Ridge Piece 4" × 9".
12	58 Nos.	Rafters 14' 0" × 4" × 2".
13	64 Nos. × 28" and 14 Nos. × 28"	Reepers 2" × ½".
14	1,533+1,171 Nos.	Mangalore tiles (including dama ones).

Materials obtained from dismantling the existing building occupied by the Inspector of Fisheries.

Serial number.	*Quantity.*	*Description of material.*
1	5,790 } 1,459 } c.ft.	Brick debris.
		Doors—
2	1 No.	4' 0" × 6' 6".
	12 Nos.	3' 0" × 6' 6".
	3 ,, ...	3' 0" × 6' 6".
	1 No.	4' 0" × 7' 0".
	1 ,, ...	4' 0" × 7' 6".
	1 ,, ...	2' 6" × 6' 0".
	1 ,, ...	4' 6" × 7' 0".
		Windows—
	9 Nos.	4' 0" × 5' 0".
	6 ,, ...	3' 0" × 5' 0".
	3 ,, ...	2' 0" × 3' 0".
	2 ,, ...	3' 0" × 4' 0".
3	6,314 c.ft.	Teakwood.
4	1,756 ,, ...	Roof of concrete.
5	950 ,, ...	Floor concrete.
6	1,425 Nos.	Mangalore tiles.

[15th December 1959

Materials obtained after dismantling the existing building occupied by the Director of Animal Husbandry.

Serial number.	*Quantity.*	*Descriptian of material.*
1	17,627 c.ft.	Brick debris.
2	1,680 ,, ...	Flooring concrete.
3	2,642 ,, ...	Roofing concrete.
4	1,564 Nos.	Roofing flat tiles.
5	7,044 c.ft.	Basement concrete.
6	119·75 ,, ...	Cut stones.
		Windows—
7	4 Nos.	1′ 10½″ × 3′ 0″.
	4 ,, ...	2′ 0″ × 3, 0″.
	12 ,, ...	4′ 6″ × 10′ 0″.
	1 No.	5′ 6″ × 10′ 0″.
		Doors—
8	5 Nos.	3′ 0″ × 7′ 0″.
	16 ,, ...	4′ 6″ × 12′ 6″.
	6 ,, ...	3′ 0″ × 6″ 0″
	1 No.	2′ 6″ × 7′ 0″.
	1 ,, ...	3′ 0″ × 8′ 0″.
	1 ,, ...	3′ 0″ × 6′ 6″.
	2 Nos.	3′ 0″ × 6′ 0″.
		Glazed window shutter only—
9	4 ,, ...	3′ 6″ × 2′ 6″.
	4 ,, ...	2′ 6″ × 3′ 0″.
	[illegible] ,, ...	4′ 6″ × 2′ 6″.
	4 ,, ...	1′ 3″ × 3′ 0″.
	4 ,, ...	9′ 1½″ × 3′ 6″.
	4 ,, ...	6′ 4″ × 3′ 6″.
	8 ,, ...	4′ 4″ × 3′ 1″.
	8 ,, ...	4′ 2½″ × 3′ 4″.
	4 ,, ...	3′ 0″ × 3′ 3″.
	4 ,, ...	2′ 6″ × 3′ 3″.
	8 ,, ...	1′ 0″ × 3′ 4″.
	4 ,, ...	1′ 3″ × 3′ 0″.
10	1,551 sq. ft. (including broken slab)	Cuddapah slab.
11	20,160 Nos. (including broken tiles)	Flooring tiles.
12	432 c.ft.	Old Teakwood.
13	1 No.	2′ 0″ M.S. angle.
14	2 Nos.	Wash handbasin.
[illegible]	[illegible] ,, ...	33′ 0″ × 1′ 6″ × 0′ 7″.
	12 ,, ...	17′ 0″ × 1′ 0″ × 0′ 5″.
16	4,156 Nos. (including broken tiles)	Mangalore tiles.
17	1 No. (in five pieces) ..	Partition— 14′ 9″ × 12′ 3″. 17′ 9″ × 17′ 3″.
		End walls of room with—
18	4 Nos. (in five pieces) ..	6′ 0″ × 10′ 0″.
	4 Nos. (in five pieces) ..	6′ 2″ 5′ 0″.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

APPENDIX II.

[Vide answer to starred question No. 201, asked by Sri R. Srinivasa Iyer at the meeting of the Legislative Assembly held on 15th December 1959, page 141 supra.]

Number of power-boring drills owned by the State.	*Number of drills that are in working condition.*	*The places at which they are working at present.*	
		Name of district.	*Number of power drills.*
(1)	(2)	(3)	(4)
32 *	32 *	1 Coimbatore	7
		2 South Arcot	5
		3 Tiruchirappalli	4
		4 Chingleput	4
		5 North Arcot	1
		6 Madurai	1
		7 Tanjore	1
		8 Ramanathapuram	1
		9 Tirunelveli	3
		10 Salem	2
		Total ..	29

* Includes 3 calyx type drills which are suitable for exploratory work only and not in demand. The number of drills available for ordinary drilling is, therefore 29.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS